அறைவு 03 இயம் 41 April 25-May 01, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

சம்பூர் மக்களைக் குடியேற்ற இன்னும் இருப்பது

countdown 05 start

நாட்கள்

நிறைவேறுமா? ஏமாறுமா?...


HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

## 100 நாள் வேலைத்திட்டம்

# முரண்படும் தமிழ்த் தலைமைகள்



திரு.சித்தார்த்தன்

நல்லாட்சி என்ற கருத்தை முன் வைத்து ஆட்சிக்கு வந்த அரசினால் முன்வைக்கப்பட்ட 100 நாள் வேலைத் திட்டத்தின் நிறைவில் தமிழ் மக்களுக்கு கிடைத்த பலன்

## திருப்திப்படக்கூடிய வகையில் எதுவும் இல்லை

## அக்கறை செலுத்தியது ஆக்கபூர்வமானது

திரு.சம்பந்தன்



தொடர்பாக தமிழ்த் தலைமைகள் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் மீது அக்கறை செலுத்தியதே ஆக்கபூர்வமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 17

## சம்பூர் மீள்குடியேற்றம் தாமதமானால் மக்கள் போராட்டத்திற்கு முடிவு!

சம்பூர் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகள் தாதமானால் மக்கள் போராட்டங்களை நடாத்தவிருப்பதாக சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய அரசானது 17

அட்டவணை 1 - உத்தேச கால அட்டவணை

| செயற்பாட்டு இலக்கம் | செயற்பாடு | நிர்மாணிக்கப்பட்ட திகதி | செயற்பாட்டுக்கண்காணிப்பு பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | ஆவணங்கள் தகவல்களை பரிசீலித்து மாகாண காணி ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் | 30.03.2015 இற்கு முன்னர் | மூதூர் பிரதேச செயலாளர் |
| 2. | இல.1 தகவல்களை காணி ஆணையாளர் நாயகத்திடம் சிபார்சுடன் சமர்ப்பித்தல் | 02.04.2015 இற்கு முன்னர் | மாகாண காணி ஆணையாளர் /மாகாண காணி செயலாளர் |
| 3. | காணி ஆணையாளர் நாயகம் காணி செயலாளரிடம் அந்தத் தகவல்களை சிபார்சுடன் சமர்ப்பித்தல் | 06.04.2015 இற்கு முன்னர் | மாகாண காணி ஆணையாளர் /மாகாண காணி செயலாளர் |
| 4. | காணிச் செயலாளர் அந்தத் தகவல்களை கௌரவ காணி அமைச்சருக்கு சிபார்சுடன் மீளச் சமர்ப்பித்தல் | 09.04.2015 அத் திகதி | காணி ஆணையாளர் நாயகம் / மீள்குடியேற்ற அமைச்சர் செயலாளரின் ஒருங்கிணைப்புடன் |
| 5. | காணிச் செயலாளர் கௌரவ காணி அமைச்சரின் மீள கையளித்தல் கட்டளையில்லை பெறுப வர்த்தமானியில் பிரசுரித்தல் | 17.04.2015 அத் திகதி | காணி செயலாளர் / மீள்குடியேற்ற அமைச்சு செயலாளரின் ஒருங்கிணைப்புடன் |

## வேலைவாய்ப்புக்கள்

### களப்பணியை விரும்புவரா நீங்கள்?

### எங்களுடன் இணையுங்கள்..!

மாற்றுத்திறனாளிகளின் சமூகப் பொருளாதார நிலைமையினை விருத்திசெய்யும் செயற்பாடுகளில் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், சேருவிலை பிரதேசங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று (வெள்ளாவெளி) பிரதேசச் செயலகப் பிரிவிலும் வலுவிழந்த மக்களுக்கான களநிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளோம்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அவ்வப் பிரதேசங்களில் முன்னெடுக்கும் களபணியாளராக இணைந்துகொள்ள கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த, சவால் மிக்க இலக்குகளை அடையும் விருப்பம் கொண்டவராக, சமூகத்தில் புறக்கணிப்பிற்குள்ளாகும் மக்களுக்குச் சேவை செய்ய விருப்பம் கொண்டவராக, சிறந்த வருமானத்தை வினைத்திறனுடனான களப்பணியின் ஊடாக உழைத்துக்கொள்ளும் விருப்பம் உடையவராக நீங்கள் இருந்தால் நீங்களே இப்பணிக்குப் பொருத்தமானவர்.

இப்பணியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை ஏப்ரல் 30, 2015ற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

**சமூக வர்த்தக தொழில்நுட்ப அபிவிருத்தி (உத்தரவாத) கம்பனி**

இல. 11, 1ம் ஒழுங்கை, லிங்கநகர், திருகோணமலை

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவிசெய்ய ஜப்பான் தயார்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உதவிசெய்ய ஜப்பானிய அரசு தயாராகியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கும் திட்டத்திற்கு ஜப்பானிய தூதரகம் நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நிதி உதவிகளை வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை 17

"தொழிலாளர் போராட்டம் வெற்றி"

## நியமனங்களை வழங்கத் தீர்மானம்?



எரியூட்டப்படத் தயாராகும் நகரசபைத் தலைவரின் கொடும்பாவி (படம்-யாசின்)

திருகோணமலை நகரசபையைச் சேர்ந்த சுத்திகரிப்புத் தொழிலாளரால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மற்றும் பணிப் பகிஷ்கரிப்பானது மாகாண முதலமைச்சரின் தலையீட்டுடன், நகரசபைச் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள உறுதிக் கடிதத்தின் மூலமும் முடிவுறுத்தப்பட்டதாகக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.கண்ணன் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

கடந்த 22ம் திகதி பேரணியுடன் ஆரம்பமான இப் போராட்டம் கிழக்கு மாகாண ஆளுனர் 17

## கல்வி அமைச்சர் மக்கள் சேவையாளர் என்பதை நிரூபிக்க வேண்டும்! - கி.மா.த. ஆசிரியர் சங்கம்

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் ஒரு மக்கள் சேவையாளர் என்பதை நிரூபிக்க வேண்டும் என கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்க் கல்வி அமைச்சர் ஒருவர் பதவியேற்புடன் வெளியாகிய முதலாவது சுற்றுநிருபமே சிங்களத்தில் வெளியானதை அடுத்து எழுந்துள்ள கடும் அதிருப்திக்கு இடையே கிழக்கு மாகாணத் தமிழர் ஆசிரியர் சங்கம், விடயம் தொடர்பாக எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# தேசியமும் சிறுபான்மையும்!

**தே**சியம் என்ற சொற்பதம் தெரிவிப்பது என்ன என்பதைத் தமிழ் மக்கள் அனைவரும் தெளிவாகப் புரிந்து வைத்திருத்தல் அவசியம் ஆகின்றது.

தேசிய இனமொன்றுக்கான மிக அடிப்படையான விடயமே மொழி தான். எனினும் மரபினம், நாடு, மதம், மொழி ஆகிய நான்கு முக்கிய காரணிகளுள் மொழி ஒரு தேசிய இனத்திற்கு அடிப்படையாக அமைவது ஏன் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மரபினம் என்பது உடல்அளவு, மண்டையோட்டு அளவு போன்ற உயிரியில் காரணிகயை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் தேசியம் என்பது சமூகம், சமுதாயம் னோன்ற அறிவியலைச் சேர்ந்நத காரணிகளைக் கொண்டதாகும். நாடொன்றுக்குள் பல தேசிய இனங்கள் உலகில் வாழ்வதால் நாடு என்னும காரணி தேசிய இனத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்த முடியாததாகக் காணப்படுகின்றது.

அடுத்த மதத்தை எடுத்து நோக்கினால் உதாரணமாக முஸ்லிம் மதத்தைப் பின்பற்றுபவர்களை எடுத்து நோக்கினால் அவர்களில் சியா, சுன்னி, குர்திஸ் போன்ற பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதைக் காணலாம். இதனால் மதமும் ஒரு தேசிய இனத்தை வரையறுப்பதில் தோல்வி கண்டு விடுகின்றது.

இதனால் மொழி மட்டுமே ஒரு தேசிய இனத்தைத் தீர்மானிப்பதற்கான மிக அடிப்படைக் கருதுகோளாக உள்ளது. மொழியினை அடிப்படையாகக் கொண்ட ஒரு இனம் தனது தேசியத் தன்மையினை உருவாக்கிக்கொள்வதற்கு பின்வரும் ஆறு அம்சங்களை விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

அவை முறையே நில எல்லை, அரசு, ஒரு படித்தா வாழ்க்கைத் தன்மை, இலக்கிய உடைமை, பொதுப் பழக்கவழக்கம் மற்றும் சமூக மரபு என்பவையே அவை.

இவற்றுள் தமிழர்களைத் தேசிய இனமாக கருதக்கூடிய விடயங்களை அழித்துவிட எடுக்கப்படும் முயற்சிகளில் முக்கியமானதாக நில எல்லையை கபளீகரிக்கும் செய்றபாடுகள் 50ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்தே ஆரம்பமாகிவிட்டன.

அதனைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் பல்வேறு பரிணாமங்களைத் தாண்டிய காலகட்டத்திலேயே நாங்கள் இப்போது காலூன்றி-யுள்ளோம். இக்காலகட்டத்தில் தமிழர்கள் தமது தேசத்தை இலங்கைத் திருநாட்டுக்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே.

இன்றுவரை நாம் அனுபவித்தவைகளை எமது அடுத்த சந்ததிகள் அனுபவிக்கக்கூடாது என்றால் நமது தேசத்தை தேசமாக்கிக் கொள்வதே எம்முன்னிருக்கும் பாரிய கடமையாக உள்ளது.

ஆயுதப் போரின் முடிவின் பின்னர் அஸ்த்தமித்துப் போனதாகக் கருதப்பட்ட தமிழரின் வாழ்வியலில் தேசம் என்ற எண்ணக்கரு உறுதியாக விதைக்கப்பட வேண்டும். அந்த எண்ணக்கருவை எமது ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தாங்கிச் செல்லும் மனவுறுதியும் செயற்பாடுகளும் இன்றியமையாதவையாக இருக்கின்றன.

தேசம் என்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தே வடமாகாணசபை "ஒரு நாடு இருதேசம்" என்ற பிரேரணையை நிறைவேற்றியுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதனையே தமது கொள்கையாகக் கொண்டு இயங்குகின்றது.

தமிழ்த் தேசம் நோக்கி நாங்களும் இயங்க வேண்டும். இயங்குவோமா?

## நுகர்விற்குதவாத மீன்கள் கிண்ணியாவில் விற்பனை

**கி**ண்ணியாவில், நுகர்விற்குதவாத மீன்கள் விற்பனைக்காக பரவப்பட்டிருந்த போது கைப்பற்றப்பட்டுள்ளன.

கிண்ணியா குட்டி கராச்சி பாலத்திற்கு அருகில் கடந்த 22ம் திகதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இக்கைப்பற்றல் நிகழ்ந்துள்ளது.

பிரதேச பொது சுகாதார அதிகாரிகளால் ஒன்பது மீன் வியாபாரிகளிடம் இருந்து பாவனைக்குதவாத மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மீன்கள், மண்ணெண்ணெய் ஊற்றி, அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பாவனைக்குதவாத மீன்களை விற்பனை செய்யவிருந்த மீனவர்களுக்கு கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (ரவி)



## புல்மேட்டை பேருந்து மக்களை இடைநடுவில் இறக்கியது

**தி**ருகோணமலையில் இருந்து இரவு 7.00 மணி அளவில் புல்மோட்டைக்கு புறப்படும் தனியார் பேரூந்து புல்மோட்டை வரை பயணிக்காமல் இறக்கண்டி என்ற இடத்துடன் நிறுத்தப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 21.04.2015 அன்று இடம்பெற்றுள்ளது.

இதனால் திரியாய், சலப்பையாறு, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, போன்ற பகுதிகளுக்கு பயனித்த மக்கள் இடைநடுவே இறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவித்தனர்.

இரவு நேரத்தில் இது போன்ற சம்பவம் இடம்பெற்றமையால் பயணிகள் பலர் நடைப்பயணமாக வீடு நோக்கி பயணித்துள்ளனர்.

திரியாய் பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறான நிகழ்வுகள் இனிமேலாவது நடைபெறாமல் இருக்க கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அச்சுதன்)

## தி-கலைகமகள் வித்தியாலய மாணவிகள் தேசிய சாதனை

**அ**கில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட 2014ம் ஆண்டிற்கான சமூக விஞ்ஞானப் போட்டியில் 501 தொடக்கம் 1000 மாணவர்களைக் கொண்ட தரம் 10 பிரிவில் செல்வி.சௌந்தரராஜன் கனேசிகா அவர்கள் 1ம் இடத்தையும், தரம் 9 பிரிவில் செல்வி. சௌந்தரராஜன் சேலக்சிகா 3ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

மாணவிகளை ஆசிரியர்களான திருமதி. மா.பொன்னம்பலம், திரு.அ.அதிஸ்டலிங்கம், திரு.றொ.தவநேசகுமார், திருமதி.ப. கோகுலச்செல்வன், திருமதி.செ.மணிவண்ணன் ஆகியோர் வழிப்படுத்தினர்.



## கங்குவேலி படுகாட்டுக் காணிகளை தமிழருக்கு வழங்குங்கள்

நந்தன் மாஸ்டர்

"**மூ**தூர் - கங்குவேலியில் உள்ள படுகாட்டில் உள்ள வயல் நிலங்களிற்கான உறுதி. ஆவணங்கள் தமிழர்களிடம் இருந்த போதும் எவ்வித உறுதிகளோ, காணி உத்தரவுப் பத்திரமோ இல்லாத பெரும்பான்மையின சிங்கள மக்கள் இவ் வயல் நிலங்களில் அத்துமீறி விவசாய செய்கையில் ஈடுபடுகின்றனர்" என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி. நந்தகுமார் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் சில தினங்களிற்கு முன்னர் ஈழத்தின் வரலாற்று சிறப்பு மிக்க அகத்தியர் தாபன சிவன் கோயிலுக்கு சொந்தமான 20 ஏக்கர் வயல் நிலத்தையும் அபகரித்து அத்துமீறி விவசாயம் செய்ய முயற்சித்து வருகின்றனர். எனவே பெரும்பான்மையின சிங்கள மக்களின் நடவடிக்கையால் அச்சமுற்று வாழும் கங்குவேலி விவசாயிகள்படுகாட்டில் சுதந்திரமான முறையில் நெற்செய்கையில் ஈடுபட பாதுகாப்பு வழங்க காவல்துறையிலும், மூதூர் பிரதேச செயலாளரும் உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும் என நந்தகுமார் கோரிக்கை விடுக்கின்றார். (அச்சுதன்)

## கந்தளாய் வினாயகருக்குக் கும்பாபிசேகம்

**தி**ருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் என்னும் புண்ணிய பகுதியில் குளக்கோட்டன் மன்னன் காலத்தில் கோவில் கொண்ட விநாயகப்பெருமானின் மஹாகும்பாபிஷேகம் 01.05.2015 வெள்ளிக்கிழமை காலை 6.45 முதல் 8.30 மணி வரையுள்ள சுப வேளையில் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ. ,ரவிச்சந்திரகுருக்கள் தலைமையில் இடம்பெற உள்ளது.

மனுசுத்திர பஞ்சகுண்ட பட்ச புனராவத்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு 30.04.2015 வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை பக்தர்கள் எண்ணைய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (அச்சுதன்)

## கோணேஸ்வரா கல்லூரியின் விசேட சித்தியடைந்த மாணவர்கள்

**க**டந்த வருடம் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் 9யு என்ற விசேட சித்திகளை பெற்று திருகோணமலையில் முதல் தர பாடசாலையாக விளங்கும் தி:.இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் விசேட சித்தி பெற்ற பத்து மாணவர்களை படத்தில் காணலாம். இடமிருந்து வலமாக அ.கிறிஷோத்மன் , சோ.பிரார்த்தணன் , ப.ஜதுர்ஷன் , சு.பிரனவன் , நா.அபூரஜன் , கோ.சடாச்சரன் , ந.விதுஷநாத் , வி.விதுஷன் , மு.சா.முகமட் ஷம்ரி , ஜா.அ.ரிஷாட் அலி ஆகியோர்களை படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனயீர்ப்புப் போராட்டம்

- தன்யா -

கடந்த 21ஆம் திகதி அன்று (செவ்வாய்க்கிழமை) கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர் ஒன்றியம் தொடர் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தே இப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதாவது இங்கு சேர்ந்து இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்திருந்த ளேயிலும் மாணவர்களுக்கான அடையாள அட்டைகள் இன்னமும் வழங்கப்படவில்லை. அத்துடன் மூன்றாம் வருட மாணவர்களது கலி சுற்றுலா தாமதப்படுத்தப்படுகின்றமை குறித்தும், காவலர்கள் தங்களது தொழில் நிலை கடமைகளை மீறி மாணவர்களிடம் அதிகாரத்தைப் பிரயோகித்துள்ளனர். இவை தவிர அரையாண்டு பரீட்சைகள் நேர அட்டவணைப்படி நடைபெற வேண்டிய உரிய நேரத்தில் நடாத்தப்படாமல் பிற்போடப்படுகின்றமை, அத்துடன் வகுப்புக்கள் வகுப்பறைகளில் நடாத்தப்படாமல் மரங்களுக்குக் கீழ் நடாத்தப் படுகின்றதாகவும் மாணவர்கள் விசனம் தெரிவித்து ள்ளனர்.

இப் போராட்டத்தில் பேதமின்றி அனைத்து வருட மாணவர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் நிறுவன வெளிப்பாதையை மூடி அதை மறித்து நின்றே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவ் ஒன்றியத்தின் தலைவர் தெரிவிக்கையில், எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை இப்போராட்ட த்தைக் கைவிடப் போவதில்லை என உறுதி பூண்டுள்ளதாகவும், கிழக்கு பல்கலைக்கழகத்தின் கீழ் இந்நிறுவனம் கொண்டுவரப்பட்டபோதிலும் இன்னமும் அதற்கான அங்கீகாரம் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.



## மலைமுரசு MALAIMURASU மட்டக்களப்புச் செய்திகள்

### பேருந்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

நேற்று வெள்ளிக்கிழமை காலை பட்டிப்பளை பொது விளையாட்டு மைதானத்தில் தங்களது பஸ் வண்டிகளை நிறுத்திவைத்து, பணிப்புறக்கணிப் பையும் ஆர்ப்பாட்டத்தையும் மேற்கொண்டனர். கொக்கட்டிச் சோலையிலிருந்து மட்டக்களப்பு சேவையில் ஈடுபடும் சுமார் 25க்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். கொக்கட்டிச் சோலை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள தங்களது சேவையை அம்பிளாந்துறை வரை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை உரிய தரப்பினர் மேற்கொள்ளவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.



### பிரசவித்த தாய் தலைமறைவு

கடந்த மூன்று வாரத்திற்கு முன்னர் வைத்தியசாலையில் மட்டக்களப்பினை சேர்ந்த யுவதியொருவர் குறை மாதத்தில் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார். இந்த நிலையில் குறித்த குழந்தையானது போதனா வைத்தியசாலையின் விசேட சிசுக்கள் சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுவந்தது.

குறித்த குழந்தைக்கு சிகிச்சையளிக்கப் பட்டுவந்த நிலையில் கடந்த திங்கள் தொடக்கம் வைத்தியசாலையில் இருந்துவந்த குறித்த குழந்தையின் தாயார் தலைமறைவாகியுள்ளார்.

### மே20 வரையே காலக்கேடு

1971ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தும் சபை சட்டத்தின் கீழ், கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளது.

சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அரிசி ஆலைகள் அனைத்துக்கும் இது பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிவித்தலில் பதிவு செய்யப்படாத அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆணின் சடலம் கண்டெடுப்பு

மட்டக்களப்பு மாவட்ட, புன்னைக்குடா கடலோரத்தில் இருந்து ஆணின் சடலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை காலை தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த புன்னைக்குடாக் கடலோரத்தில் சுமார் 35 மதிக்கத் தக்க ஆணின் சடலம் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டதாக காவல்துறையினர் கூறினர். குறித்த சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் அதனை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களைக் கேட்டுள்ளனர் காவல்துறையினர்.

### கொள்ளையர் கைது



வாழைச்சேனை, மீறாவேடை, கிண்ணயடி, மாஞ்சோலை, கறுவாக்கேணி போன்ற பிரதேசங்களில் மிக நீண்டகாலமாக கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த மூவர் அடங்கிய குழுவினரை வாழைச்சேனை காவல்துறையினர் 22.04.2015 அன்று கைது செய்துள்ளனர்.

மேற்படி பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வந்ததையடுத்து, வாழைச்சேனை உதவி காவல் துறை அத்தியட்சகர் எச்.ஓ.எஸ்.விதானகேயின் ஆலோசனையின் கீழ், மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இக்கொள்ளைக் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது. மேற்படி சந்தேக நபர்களிடமிருந்து தொலைக்காட்சி, மடிகணினி, சிடி பிளேயர், அலைபேசிகள், தங்க நகைகள், சாஜர் டோச் லைட் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இவர்களுடன் தொடர்புபட்ட இன்னும் சிலர் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகின்றது.

### அசுத்தமாகி வரும் வாவிக்கரை

ஏறாவூர் நகரில் சேருகின்ற திண்மக்கழிவுகளையும் சாக்கடைகளையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தி முகாமைத்துவம் செய்வதற்கு இடவசதியின்மையால், மட்டக்களப்பு வாவிக் கரையோரத்தில் குப்பைகளை கொட்டும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஏறாவூர் நகரசபை நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் நகரசபை உறுப்பினர் எம்.எஸ்.எம்.நஸீர் தெரிவித்தார்.

ஏறாவூரை சூழ்ந்துள்ள மட்டக்களப்பு வாவிக் கரையோரத்தில் திண்மக்கழிவுகள் கொட்டப்படும் இடத்தை கடந்த புதன்கிழமை பார்வையிட்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் "இந்தப் பிரச்சினைக்கு வெகு விரைவில் மாற்றுத்தீர்வு காணப்படாவிட்டால், இது மட்டக்களப்பு வாவியோடு மட்டும் நின்றுவிடாமல் ஒட்டுமொத்த இயற்கைச் சூழலையும் பாதிக்கும். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இணைந்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வை எட்ட வேண்டும்" என்றார்.



### மக்கள் பிரச்சினையில் கரிசனை உண்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண விவசாய துறை மற்றும் கால்நடை வள அமச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம், கிரான் பிரதேச் செயலாளர் பிரிவிலுள்ள இலுக்கு மற்றும் ஈரளக்குளம் பிரதேசங்களுக்கு விஜமொன்றை மேற்கொண்டு, மக்களை சந்தித்தபோது அவர், "தற்போது எமது சமுகத்துக்கு தேவையான ஒரு விடயமாக கல்வி இருக்கின்றது. இதனை எமது சிறுவர்களுக்கு பெற்றோர் தான் அதிக அக்கறை எடுத்து வழங்க வேண்டும் என தெரிவித்ததோடு முக்கிய விடயங்களான விவசாயம், காணிகள் இன்மை, விவசாய நடவடிக்கைகளுக்கு கிணறுகள் அமைத்தல், யானைகளின் தொல்லை மற்றும் வீடுகள் வழங்கப்படாமை, குளங்கள் புனரமைத்தல், கால்வாய்களை திருத்தியமைத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன.



### தண்டம் செலுத்திய பின் விடுதலை

பாவனைக்கு உதவாத உணவு பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதான மூவரையும் 18,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.என்.அப்துல்லாஹ் உத்தரவிட்டதுடன் எச்சரிக்கை செய்து விடுதலை செய்துள்ளார். மட்டக்களப்பு நகரில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த புதன்கிழமை மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே மேற்படி வியாபாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.

### ஆசிரிய ஆளணி வெற்றிடம்

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 1,011 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளதாக மத்திய கல்வி அமைச்சு புள்ளி விபரம் ஒன்று வெளியிட்டுள்ளது. ஆங்கிலம், கணிதம் விஞ்ஞானம், சித்திரம், தொழிநுட்பம் மற்றும் இரண்டாம் மொழி சிங்களம் உள்ளிட்ட பல பாடங்களுக்கு தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையுமான வகுப்பு பிரிவுகளுக்கான ஆசிரிய ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவருகின்றது.

இதற்கான உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட [illegible] அறிவித்தல் [illegible] தெரிவித்துள்ளது.

### துஷ்பிரயோகத்துக்குள்ளானார் 14 வயது சிறுமி

14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த இருவருள் ஒருவர் கால்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றையவர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரியவருகின்றது. டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட தன் அக்காவை பராமரிப்பதற்காக வைத்தியசாலையில் தங்கிவிட்டு காலையில் வீடு செல்வதற்காக சென்று கொண்டிருந்த வேளையில் ஆசை காட்டி மோட்டார்சைக்கிளில் கடத்திச் சென்றே இருவரும் அச்சிறுமியை பலாத்காரம் செய்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# 19வது திருத்தத்துக்கான பேரணி



19வது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி ஆதரவளிக்காது போனால் அரசு பதவி விலகி தேர்தலுக்கு செல்வதை விட வேறு மாற்று வழி கிடையாதெனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ குடும்பமும் அவரது அடிவருடிகளும் மீண்டுமொரு தடவை தலைதூக்க இடமளிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார். எதிர்வரும் 27 ஆம் திகதி ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டி 19 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஏற்பாடு செய்திருப்பதாக சுட்டிக்காட்டிய பிரதமர், ஜனநாயகத்தை மதிக்கும் சகலரும் அணிதிரள வேண்டுமென அழைப்பும் விடுத்துள்ளார்.

## சமுர்த்தியினர் ஆர்ப்பாட்டம்

சமுர்த்தி பயனாளிகள் மற்றும் அதிகாரிகளுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வில்லை என தெரிவித்து, பத்தரமுல்லயில், அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட சில தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, அமைச்சின் செயலாளர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகள் அடங்கிய மனுவொன்றைப் பெற்றுக்கொண்டார்.

## இனி சந்திப்பு இல்லை

எமக்கிடையில் விசேட பேச்சுவார்த்தை தேவையில்லை. ஏனெனில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ.ல.சு.க.வின் தலைவர். நான் அக்கட்சியின் போஷகர். எமக்கிடையில் பாரிய இடைவெளி கிடையாது. அதனால் எமக்குள் விசேட பேச்சுவார்த்தை எதுவும் தேவையில்லை என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர்கள் இருவருக்கிம் இடையிலான பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலான சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்வது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம யோசனை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாரதிகள், நடத்துனர்கள் எதிர்ப்பு

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய அலுவலகம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என இரு தனித்தனியான அலுவலகங்களாக மாற்றப்பட்டுள்ளமையினை கண்டித்து நேற்றைய தினம் யாழ்.பேருந்து நிலையத்தில் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள், தொழிலாளர்கள் மதியம் 12 மணி முதல் பணிப்பகிஸ்கரிப்பினை மேற்கொண்டுள்ளனர். அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஒரு வார கால அவகாசம் தருமாறும், அதற்குள் பிரதமருடன் இது தொடர்பில் எடுத்து கூறி வட பிராந்தியத்தை இரண்டாக பிரிக்க விடாது தடுப்பதாகவும் உறுதி அளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.



## இலங்கைத் தமிழருக்கு மரண தண்டனை

இந்தோனேஷியாவில் போதைப் பொருள் கடத்தல் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 10 பேருக்கு மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான மரண தண்டனை உறுதி செய்யப்பட்ட போதிலும் மரண தண்டனை நிறைவேற்றப்படும் திகதி குறித்து இறுதியான அறிவிப்பு அந்நாட்டு அரசாங்கம் இதுவரை விடுக்கவில்லை.

இந்நிலையில், அவுஸ்திரேலிய குற்றவாளிகளான ஆன்ட்ரூசான் மற்றும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியப் பிரஜையுமான மயூரன் சுகுமாரனுக்கு ஆதரவாக அந்நாட்டு அரசு குரல் கொடுத்து வந்த போதிலும் அதனை பொருட்படுத்தாமல் இந்தோனேசிய அரசாங்கம் நிராகரித்துள்ளது. இதனையடுத்தே மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 10 பேருக்கும் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## பகிரங்க மன்னிப்பு

சிறுபான்மையினரை கோடிட்டு காட்டும் இரண்டு நிறங்கள் அற்ற தேசியக்கொடியை பயன்படுத்தியமைக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும மன்னிப்பு கோரியுள்ளார். கோத்தபாய ராஜபக்ச, லஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது இந்தக்கொடியை அழகப்பெரும உட்பட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தநிலையில் இது வருந்ததக்க செயல் என்று குறிப்பிட்டுள்ள டளஸ் அழகப்பெரும, குறித்த தேசியக்கொடிகளை ஏந்தியிருந்தமை காரணமாக எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர்களிடம் மன்னிப்பை கோருவதாக குறிப்பிட்டுள்ளார்.



## பொய்க்குற்றச்சாட்டு

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் கடந்த மார்ச் 11ஆந் திகதி பெற்றோல் குண்டுகளை வீசியதாக எவ்வித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் வி.கே.சிங் வெளியிட்டார். தமிழகத்தின் ஊடகங்கள் வெளியிட்டிருந்த முரண்பட்ட செய்திகள் தொடர்பிலேயே அவர் இன்று எழுத்துமூல பதிலை சபையில் வழங்கினார்.

இதேவேளை இந்த செய்தியை முன்னதாக இலங்கை கடற்படையினரும் மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதுவரை 17 கைதுகள்

இந்த நாட்டில் இன்னுமொரு தேர்தல் வந்து அரசியலில் ஸ்த்திரமான தன்மை வரும் வரைக்கும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் இலங்கை வருவதனை தவிர்த்துக்கொள்வது காலத்தின் கட்டாயமாகும் என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மட்டக்களப்பைச் சேர்ந்த ரகுபதி கனகசூரியம் கைது செய்யப்பட்டமை பற்றி கருத்துக்கூறும் போதே இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டிலே தற்போது நல்லாட்சி நடைபெறுமாக இருந்தால் இவ்வாறான கைதுகள் எவ்வாறு நடைபெறும் ஜனாதிபதி மைத்திரி ஆட்சிக்கு வந்து 100 நாட்களுக்குள் 17 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இங்கு வாழ முடியாதென மீண்டும் இந்தியாவுக்கே புலம்பெயர்ந்தோர் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல தடவைகள் இந்த விமான நிலையத்தனூடாக வெளி நாடுகளுக்குச் சென்று வந்தோர் கூட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## ரயில் சேவை பாதிப்பு



கடும் மழை காரணமாக ஹட்டன் புகையிரத நிலையத்துக்கு அண்மையிலுள்ள சிங்கமலை சுரங்க பாதை, 176ஆம் கட்டைப்பகுதியில் பாரிய மரத்தின் கிளை முறிந்து விழுந்தமையால் சிறிது நேரம் ரயில் சேவை தடைப்பட்டது. இதன்போது யாருக்கும் எதுவித பாதிப்புக்களும் நேரவில்லை என சம்பவ இடத்திற்குச் சென்ற காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். மரம் அப்புறப்படுத்தப்பட்டதன் பின்னர் ரயில் சேவை தொடர்ந்தது.

## 3வயது குழந்தை மரணம்

புத்தளம், தில்லையடி பகுதியில் மூன்று வயது சிறுவன் கிணற்றினுள் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த போது வீட்டிற்கு அருகிலிருந்த கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து கடந்த வியாழக்கிழமை மாலை உயிரிழந்ததாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது. பிரேதப் பரிசோதனைகளின் பின்னர் சிறுவனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக மரணம் சம்பவித்தமை பிரேதப் பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கடத்தப்படவிருந்த பொதிகள்

இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்படவிருந்த கேரள கஞ்சா, புகையிலை என்பன தனுஸ்கோடி, பாம்பன், தங்கச்சிமடம் போன்ற கடலோரப் பகுதிகளில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதால், இந்திய கரையோர பாதுகாப்புப் பிரிவினர் தேடுதல் நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், தனுஸ்கோடி செல்லும் வழியிலுள்ள ஜடாயு தீர்த்தம் பகுதியிலுள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான குளிர்பான பெக்கட்டுக்கள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன. அவை குறித்த பகுதிக்குக் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் இந்திய உளவுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு அழைப்பாணை

நீதிமன்ற உத்தரவை மீறி இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவுக்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 27 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

கறுவாத் தோட்ட காவல்துறையினர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையை கவனத்தில் கொண்டு நீதவான் கியான் பிலப்பிட்டிய, எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்துள்ளார். இலஞ்ச ஆணைக்குழுவிற்கு எதிரில் ஆர்ப்பாட்டங்களை நடத்த நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
உலகச் செய்திகள்

# ஐ.எஸ்.ஐ யை வழிநடத்தும் தலைவர் மரணப்படுக்கையில்



ஐ.எஸ்.ஐ தீவிரவாத அமைப்பிற்கு புதிய தலைவர் ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ் அமைப்பில் கலிபாவாக (தலைவர்) அபுபெக்கர் அல்பாக்தாதி, கடந்த சில நாட்களுக்கு முன்பு அமெரிக்கா நடத்திய வான்வழி தாக்குதலில் படுகாயமடைந்ததாகவும், நடமாட முடியாத நிலையில் உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. மேலும் இதனை ஐ.எஸ் அமைப்பும் உறுதி செய்தது.

தற்போது உயிருக்கு போராடும் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், அவரால் பணியாற்ற முடியவில்லை. எனவே ஐ.எஸ் இயக்கத்தை வழிநடத்த தற்காலிகமாக அபு அலா அப்ரி என்ற நபர் புதிய தலைவராய் நியமிக்கப் பட்டுள்ளார். மேலும் அல்பக்தாதி இறந்து விட்டால் தற்போது தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் அப்ரி, தொடர்ந்து தலைவராக இருப்பார் என்ற தகவலும் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## ஆடைஅவிழ்ப்பிற்குச் சீனாவில் தடை



சீனாவின் கிராமப்புறங்களில் மரண இறுதிச் சடங்குகள் நடைபெறும் வேளையில் நடைபெறும் ஆபாச நடனங்களைத் தடுக்க சீனா முயற்சிக்கிறது.

படிப்படியாக ஆடைகளை களைந்த படியே நடனமிடும் மங்கையர்கள் இறுதி ஊர்வலத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இறந்தவரின் இறுதிச் சடங்கில் பங்கேற்க வரும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் இறந்துபோன மனிதருக்கு அதிகளவில் மரியாதை கிடைக்கும் என சீன கிராமப்புறத்து மக்கள் நம்புகின்றனர்

ஆனால் சீனாவின் கிராமப்புறங்களில் நடக்கும் இது போன்ற இறுதிடச்சடங்கு சம்பிரதாயம் வெளி உலகின் பார்வைக்கு அவ்வளவாக தெரிவது கிடையாது.

இந்த ஆடை அவிழ்ப்பு நடனம் இறுதிச்சடங்குகளில் ஆடப்படுவது குறித்து நிறைய பேருக்கு தெரியாத நிலையில், சமூக வலைத்தளங்களில் இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் சிலர் தங்களது ஆச்சரியத்தையும், கோபத்தையும் பதிவு செய்திருக்கிறார்கள்.

சமீபத்தில் சீனாவின் கலச்சார அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கையில், ஆபாச நடனமாடும் மங்கையர் இறுதிச்சடங்குகளில் பங்கேற்க அழைக்கப் பட்டிருப்பது குறித்து விவரித்திருக்கிறது.

## 5.9ரி. பூமியதிர்ச்சி

நியூஸிலாந்தின் தென் தீவான கெய்கோயுராவிலிருந்து சுமார் 66 கிலோமீற்றர் தொலைவில் 55 கிலோமீற்றர் ஆழத்தில் நேற்று தாக்கிய 5.9 ரிச்டர் பூமி யதிர்ச்சியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதன் போது அந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் அலறியடித்துக் கொண்டு வீடுகளையும் கட்டடங் களையும் விட்டு வெளியேறி வீதி களையும் திறந்த வெளிகளையும் தஞ்சமடைந்து ள்ளனர்.

மேற்படி பூமியதிர்ச்சியால் விற்பனை நிலைய அலுமாரிக ளிலிருந்த பொருட்கள் கீழே விழுந்து சிதறியுள்ளன.

இதேவேளை அதே பிராந்தியத்தை 23.04.2015 அன்று 4.7 ரிச்டர் அளவான பூமியதிர்ச்சி தாக்கியமை குறிப்பிடத்தக்கது.





## 4தொன் யானைத்தந்தங்கள் கடத்தல்

பேங்கொங் துறைமுகத்துக்கு வந்திறங்கிய கொள்கலன்களில் யானைத் தந்தங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலை யடுத்து சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது 4 தொன் அளவிலான கொங்கோ குடியரசிலிருந்து கொண்டு வரப்பட்ட கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்ட யானைத்தந்தங்கள், கடந்த சனிக்கிழமை தாய்லாந்தில் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதன்போது, சுமார் 739 யானைத் தந்தங்கள் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் யானைத் தந்தங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆசியாவில், ஆபிரிக்க யானைத்தந்தங்கள் கடத்தப்படும் முக்கிய இடமாக தாய்லாந்து காணப்படுவதுடன் இந்த கடத்தல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் சர்வதேச தடைகளை அந்நாடு எதிர்கொள்ள நேரிடும் என சர்வதேச தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

## ஏவுகணை களஞ்சியசாலை மீது தாக்குதல்



யேமனிய தலைநகர் சனாவில் ஏவுகணை களஞ்சியசாலை யொன்றின் மீது சவூதி அரேபியா தலைமையிலான கூட்டமைப்பு நாடுகளின் படையினர் நடாத்திய வான் தாக்குதலொன்றில் குறைந்தது 38 பொதுமக்கள் பலியானதுடன் 532 பேருக்கும் அதிகமானோர் காயமடை ந்துள்ளதாக பிராந்திய மருத்துவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

மேற்படி தாக்குதலால் ஏவுகணை களஞ்சியசாலையில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக பல மீற்றர் உயரத்திற்கு கடும் புகைமூட்டம் எழுந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நடுக்கடலிலிருந்து உதவிக்கு அழைப்பு

300 குடியேற்றவாசிகளுடன் மத்திய தரைக் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலொன்றிலிருந்து உதவி கோரி தங்களுக்கு அவசர அழைப்பு கிடைத்துள்ளதாக சர்வதேச குடிபெயர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டு ள்ளதாகவும் அதன் பேச்சாளர் தெரிவித்து ள்ளார். சர்வதேச கடற்பரப்பில் உதவி தேவைப்படும் சுமார் மூன்று கப்பல்கள் இருப்பதாக அழைப்பை மேற்கொண்டவர் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



## பிரித்தானிய தேர்தலில் தமிழர்களின் தேர்வு?

பிரித்தானிய பாராளுமன்றம் பொதுத்தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில், அது தொடர்பாக பாரிய எதிர்பார்ப்புக்கள் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளன. அந்தவகையில், பிரித்தானிய தேர்தல் களமானது இனிவரும் காலங்களில் பிரித்தானியாவின் அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என மனித உரிமைகள் செயற்பாட்டாளரான லண்டனைச் சேர்ந்த ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

மேலும், பிரித்தானிய பாராளுமன்றத் தேர்தலை ஈழத்தமிழர்கள் இருவகையில் பயன்படுத்த முடியும் எனவும், லங்காசிறி வானொலியின் நடப்பு அரசியலின் சிறப்புப் பார்வை நிகழ்ச்சியில் அவர் தெரிவித்துள்ளார்.

## குழந்தையைக் காப்பாற்றிய தமிழர்கள்



சிங்கப்பூரில் ஒரு வீட்டின் இரண்டாவது மாடியில், கம்பித் தடுப்பைத் தாண்டி வந்த பச்சிளங்குழந்தையின் கழுத்து, கம்பியில் மாட்டியது. மேலே எழ முடியாமல், கம்பியிலிருந்து விடுபடவும் முடியாமல் அந்தரத்தில் தவித்த அந்தக் குழந்தை கதறி அழுதது. குழந்தையின் அலறலைக் கேட்ட அக்கம்பக்கத்தினர் குழந்தையைக் காப்பாற்ற முயற்சி செய்துள்ளனர்.

இருவர், இரண்டாம் மாடிக்கு ஏற முயற்சித்தும் முடியாமல் போனது. இதனால் தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது அந்த பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த தமிழ் கட்டுமான தொழிலாளர்கள் இருவர் குழந்தையின் அலறலைக் கேட்டு அங்கு வந்தனர். உடனடியாக இருவரும் இரண்டாவது மாடிக்கு ஏறி, அந்தக் குழந்தையை கம்பியின் பிடியிலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

## 5 முறை முறியடிப்பு

கடந்த சில மாதங்களில் ஐந்து தீவரவாத தாக்குதல்களை பிரான்ஸ் காவல்துறையினர் முறியடித்துள்ளதாக அந்நாட்டின் பிரதமர் மெனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார். பாரிஸின் புறநகர் பகுதிகளில் உள்ள தேவாலயங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள சிலர் திட்டம் தீட்டியுள்மை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக, பிரதமர் அந்நாட்டு வானொலி சேவையொன்றுக்கு கூறியுள்ளார். இந்த திட்டத்தை தீட்டியதாக கூறப்படும் பிரான்-அல்ஜீரிய நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட பின்னர் அவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுகொண்டு உயிரிழந்துள்ளார்.

## 20 வருட சிறைத் தண்டனை

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்சிக்கு 20 வருட சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆர்பாட்டக்கரார்கள் மீது, வன்முறை மற்றும் சித்திரவதைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தமை தொடர்பில் அவருக்கு இந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு எகிப்தில் இடம்பெற்ற இராணுவ புரட்சியின் மூலம் முர்சி, ஜனாதிபதி பதவியில் இருந்து விலக்கப்பட்டதுடன் முர்ஷிக்கு ஆதாவாக செயற்பட்ட 1,000ற்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

12

# வினையடி நீ எனக்கு...

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–



– கனவு
என்ற ஒன்று மட்டும்
இல்லாமல் போயிருந்தால்
உன்னை எப்படிச் சந்திப்பேன்
தூக்கத்தில்–

இரா.வெங்கடேஷ் பிரபு

வேன் வந்து நின்றதும் அனைவரும் ஏறிக் கொண்டனர். நிவேதாவைத் தொடர்ந்து ரதனும் ஏறிக் கொண்டான். நிவேதாவின் மனசு அடித்துக் கொண்டது. ஒரு ஆண்மகன் தனது காதலை மறைமுகமாக வெளிப்படுத்தியிருந்தாலும் அதன் தாக்கம் அவளுள் பல மாற்றங்களை ஏற்படுத் தியிருந்தது.

சாதாரணமாக கதைக்கக் கூட முடியாமல் இருந்தது. "நட்பு" என்ற எல்லைக் கோட்டை தாண்டி காதல் என்ற வலைக்குள் விழுந்து விட்ட உடனே எல்லாமே மாறிப் போகிறது. நட்பாக இருக்கும் போது கதைக்கும் வார்த்தைகளுக்கும் பூட்டுப் போட்டது போல் ஆகி விடுகிறது.

இந்த தேசத்தில் "காதல்" என்பதுதான் மிக அரிதான விஷயம் அதே நேரத்தில் "நாங்களும் காதலிக்கிறோம்" என சொல்லும் சிலருக்கு மிக இலகுவான கிடைக்கும் விஷயமும் அதுதான். ஒரே நேரத்தில் அரிதாகவும் மிக இலகுவாகவும் கிடைப்பதற்கு பெயர் தான் காதல்.

வேன் சத்துருக்கொண்டானைக் கடந்து தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தது. இடையே இறங்கிய பயணிகளும் புதிதாக ஏறிய பயணிகளும் என வேன் புதிய பயணிகளால் நிரம்பியபடியே இருந்தது.

இடையில் இறங்கிய ஒரு பெண்மணியின் இருக்கை நிவேதாவுக்கு கிடைத்தது. அவள் அமர்ந்துகொண்டு ரதனின் கையில் இருந்த கம்பஸ் பையையும் தான் வாங்கி வைத்துக் கொண்டாள்.

வேன் ஏறாவூர் பொலிஸ் சோதனைச்சாவடிக்கருகில் வந்து நின்றது. பயணிகள் இறங்கிச்சென்று தமது அடையாள அட்டைகளையும் கைப்பைகளையும் காட்டிச் சென்றனர்.

"நிவேதா அந்தக் கவிதைப் புத்தகம் எப்படி .. உங்களுக்கு பிடிச்சிருந்ததா..?"

"அருமையான கவிதைகள் ரதன்... பெயர்தான் அதற்கு இது காதல் கவிதைகளின் தொகுப்போ என்ற பிரமையை கொடுத்தாலும் சமகால பிரச்சினைக் கவிதைகள் அதிகம் உண்டு .."

"அதுதான் முன்னுரையிலேயே கவிஞர் விளக்கம் கொடுத்திருக்கிறாரே... என் பிரியம் என்பது காதலையும் ராஜகுமாரிக்கு என்பது அரசியலையும் குறிக்கின்றது என்று. ஏனென்றால் "த பிரின்ஸ்" என்பது பிரபல அரசியல் மேதை மாக்கியவெல்லி யின் நூல். அரசியலில் ராஜகுமாரன் என்ற இந்த நூல் முக்கியமானது. ராஜகுமாரன் அரசியலை சிலேடையாக செ[illegible]



"இந்த பெயருக்கு இப்ப[illegible] இருக்கிறதா..? ரதன் அதில்[illegible] இன்னமும் ஞாபகம் இருக்க[illegible] பெயரில் ஒரு கவிதை

"அன்று
இராமனின் சந்தேகம் போக்க
இராமாயணச் சீதை
தீக்குளித்தாள்
இன்று எந்த இராமனின்
சந்தேகம் போக்க
இந்த
திருமலைச் சீதை
அடிக்கடி
தீக் குளிக்கிறாள்"

எமது மண்ணை அடிக்கடி அக்னி சாப்பிடுவதையும் இந்த இன வாதப் போர் எமது மண்ணை எரிப்பதையும் எவ்வளவு அழகாக சொல்லியிருக் கிறது கவிதை...."

அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது தூரத்தில் இரண்டு மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டது. வெடிச் சத்தத்தை தொடர்ந்து அங்கு ஒரு பதட்டமான சூழ்நிலை தோன்றுவது தெரிந்தது. துப்பாக்கி வெடிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன. ரதனும் நிவேதாவும் வந்த வேனின் "செக்கிங்" முடிந்ததால் அது அவர்கள் நின்ற இடத்திற்கு வந்துநின்றது.

ரதனும், நிவேதாவும் வேனுக்குள் ஏறிக் கொண்டனர். அந்த வேனில் வந்த மூன்று முஸ்லீம் பெண்களும் ஏறாவூர் பொலிஸ் சோதனை நிலையத்தருகில் இறங்கிச் சென்றிருந்ததால் நிவேதாவுக்கும் ரதனுக்கும் அமர்வதற்கு இருக்கைகள் கிடைத்தன. இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

வெடிச்சத்தத்தை தொடர்ந்து அங்கிருந்த பொலிஸார் ஒரு வாகனத்தையும் மேலே செல்ல விடவில்லை. அந்த செக்பொயின்டோடு சேர்ந்தமாதிரியே பக்கத்தில் அமைந்திருந்த சிறிய காவல் நிலைய விடுதியில் இருந்து சில பொலீஸார் ஆயுதங்களுடன் முன்னேறி ஏறாவூர் பிரதேச சபை காரியாலயப் பக்கம் சென்றனர்.

ரதனும், நிவேதாவும் வந்த வேனுக்குப் பின்னே வந்த பல வாகனங்கள் வரிசையில் நின்றது. "ரதன், ஏதும் பிரச்சனையோ தெரியாது...." நிவேதா மெல்லிய குரலில் கேட்டாள். "நிவேதா, இது இங்கு சகஜமான விடயம்.... எனக்கு இது மூன்றாவது முறை.... உனக்கு இது தானே முதல் அனுபவம்."

"அப்படியென்றால்.... இப்படி அடிக்கடி நடக்குமா....? ரதன்.....?" நிவேதாவின் பேச்சில் தூக்கலான அச்சம் தெரிந்தது. "மாசத்தில் இரண்டு மூன்று நடக்கும்.... ஆனா.... இந்த இடத்தில் தான் என்று குறிப்பா சொல்ல முடியாது.... ஒருமுறை நாம் தாண்டி வந்த பிள்ளையாரடியில் ஏதோ பிரச்சனை என்றும் இப்படித்தான் இரண்டு மணிநேரத்திற்கு மேல் தடுத்துவைத்திருந்தார்கள்.....?"

"அப்படி என்றால் லெக்சர்ஸ்க்கு ஒழுங்கா போகமுடியாதே....." "அந்த பயம் தேவையில்ல..... அதிகமான லெக்சர்ஸ் டவுனில் இருந்துதான் வாரவங்க.... எமக்கு பின்னால்தான் அவர்களுடைய பிரைவட் பஸ் வரும்.... அவங்களும் கம்பஸ்சுக்கு போக முடியாது தானே....?"

"ஏன் ரதன்.... கம்பஸ் லெக்ஸர்ஸ்க்கு கம்பஸ் ஸ்ருடன்ஸ்க்கு என்று விசேட ஐடெண்டிக்காட் இல்லையா....? அதக் காட்டிப் போகலாம் தானே."

"இருக்கு நிவேதா.... ஆனா யாருமே ரிஸ்க் எடுக்க மாட்டாங்க..... நான் கூட இரண்டு முறை இப்படி சத்தம் கேட்டு பிரச்சனை என்றவுடன் திரும்பி ரூமுக்கு போயிட்டன்.... ஒரு நாள் லெக்சர்ஸ்க்கு போகாட்டி மறுநாள் நோட்ஸ் எழுதி எடுத்துக் கொள்ள முடியும்.... ஆனா பிரச்சினையில் ஏதும் நடந்திட்டா.... ஏன்.... அப்படி ஒரு சூழலை ஏற்படுத்துவான் என்றுதான் நான் உடனே திரும்பிடுவன்....?"

"அப்படியென்றால் நாங்களும் திரும்பி டவுனுக்கு போயிருவம் ரதன்....." நிவேதா கேட்டாள். இல்ல நிவேதா கொஞ்சநேரம் பார்ப்போம். பிரச்சனை ஒன்றும் இல்லை என்றால் சில நிமிடங்களில் போக விடுவாங்க....."

துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்திருந்தது. தூரத்தே கரும்புகை மேல் கிளம்பி செல்வது தெரிந்தது..... ஏதோ எரிவது போல் இருந்தது. நிவேதா தனது கடிகாரத்தை பார்த்தாள். மணி 8.30 காட்டியது. சுமார் 45 நிமிடங்களுக்கு மேல் தாம் அங்கு நிற்பதை உணர்ந்தாள். ஏறாவூர் காவல் அரண்பகுதியில் இருந்து சென்ற அந்த பொலிஸார் திரும்பி வருவது தெரிந்தது. அவர்களில் ஒருவன் வேனுக்கருகில் வந்து "போகலாம்" என்பதுபோல் கையைக் காட்ட அவர்கள் வந்த "வேன்" புறப்படத்தொடங்கியது. பின்னால் வந்து நின்றிருந்த வாகனங்களில் வந்திருந்த பயணிகள் அனைவரும் இறங்கி சோதனைச் சாவடி நிலையத்திற்கருகே வந்தனர்.

வேன் ஏறாவூர் மணிக்கூட்டுச் சந்தியை கடந்து அந்த குறகிய பாதை வழியே ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை சுற்றி அடுத்த வீதியில் ஏறி மறுபக்க காவல் அரணை தாண்டும் வேளை அந்த கரும்புகை வந்த இடம் எதுவென்று தெரிந்தது.

வீதியின் ஓரத்தே இருந்த பிள்ளையார் கோயிலின் முன்னால் ஒரு செங்கல் லொறி ஒன்று எரிந்தபடி இருந்தது. அதிலிருந்து இன்னமும் புகை வந்தபடியே இருந்தது. சில பகுதிகளில் சிறிது சிறிதாக தீயின் நாக்குகள் எட்டிப்பார்த்தன. வாழைச்சேனைப் பகுதியில் இருந்து வந்த வாகனங்களும், கொழும்பில் இருந்து இரவில் புறப்படும் வாகனங்களும் வந்து வரிசையில் நின்றிருந்தன. இந்தப் பகுதியில் நின்றிருந்த பொலிஸார் ஒவ்வொரு வாகனமாக அதிலுள்ளவர்களை இறக்கி சோதித்துக் கொண்டிருந்தனர்.

வேன் வாகனங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தது. "பொடியங்க வந்து சுட்டுப்போட்டாங்களாம். இரண்டு பொலீஸார் செத்துப்பொயிட்டாங்களாம்.... அதுதான் லொறியை எரிச்சிப் போட்டாங்க போல..." வேனுக்குள் கதை பரவ தொடங்கியது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கதைக்கத்தொடங்கினர். வேன் சாரதா தியட்டரடியில் நிற்க சிலர் இறங்கிக் கொண்டனர். கண்டக்டர் பொடியன் இறங்கி அங்கு நின்றவர்களுடன் கதைத்து விட்டு வந்து அந்த அசம்பாவிதச் செய்தியை ஊர்ஜிதப்படுத்தினான்.

வேன் செங்கலடிச் சந்தியில் நிற்க பலர் இறங்கிக் கொண்டனர். அதேவேளை, சித்தாண்டி, கிரான், வாழைச்சேனை எனச் செல்பவர் கள் சிலர் ஏறிக்கொண்டனர். அதில் அதிகமாக பெண்களே இருந்தனர். ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வந்து டவுனில் தமக்கான பொருட்களை வாங்கிச் செல்லும் பெண்கள். அதில் சில வியாபாரிகளும் இருந்தனர். எல்லோர் கரங்களிலும் சிறிதாகவும் பெரிதாகவும் உள்ள பைகளில் எல்லாம் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள்.

வேன் செங்கலடிச்சந்தியில் இருந்து புறப்பட்டு கொம்மாதுறை ராணுவ முகாம் பகுதியில் வந்து நின்றது. அதிலும் ஒரு சோதனைச் சாவடி. இதில் இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொள்வர்.

வேன் வந்து நிற்கவும் எல்லோரும் இறங்கிச் சென்றனர். அன்று வழமையை விட சோதனை கொஞ்சம் கடுமையாகவே இருந்தது. ரதன் தனது கம்பஸ் ஐடெண்டியை காட்ட பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் நிவேதா தனது தேசிய அடையாள அட்டையை காட்ட அவன் அதனைப் பார்த்து விட்டு "ஒயா திருக்கொணாமல னேத..... மே.... கொய்த.......?" எனக் கேட்க அவளுக்கு விளங்கவில்லை. அவள் ஏதோ நினைத்தவளாக "கம்பஸ்" என்று சொல்ல..... அவன் "கோ ஐடென்டிட்டி....." எனக் கேட்க அதற்கிடையில் ரதன் அவ்விடத்திற்கு வந்து நி[illegible] பிறகு தான் அவளை போகவிட்டான் அந்த ராணுவ வீரன்.

"மெயா..... ஜூனியர்ஸ்.... அத தமாய்..... கம்பஸ் யனவா..." ரதனும் ஏதோ தனக்கு தெரிந்த சிங்களத்தில் அவனுக்கு விளங்கப்படுத்தினான்.

அனைவரும் செக்கிங் முடிந்து வேனுக்குள் ஏறிக்கொண்டனர். "ரதன், நல்ல வேளை.... நீங்கள் வந்தது.... மாமா வந்திருந்தாலும் அவருக்கும் சிங்களம் தெரியாது...... சரியா..... கஷ்டப்பட்டிருப்பம்."

"உங்களுக்கு கம்பஸ் ஐடெண்டி இல்லதானே..... அதுதான் அவனுக்கு சந்தேகம். இன்றைக்கு முதல்வேளையா அத எடுத்திறனும்.... அது இருந்தா இந்த பகுதியில் பிரச்சனை இல்லை.....". "ரதன், எனக்கு முதல் நாள் கம்பஸ் அனுபவமே நல்ல அனுபவமாகதான் இருக்கு. வாழ்க்கையில் மறக்க முடியாது. இன்றைக்கு டைரியில் எழுதவேணும்....."

"இது வீதி அனுபவம்...... கம்பஸ்சுக்குள்ள என்ன அனுபவமோ..... தெரியாது. என்ன நிவேதா...." ரதன் கூறவும் நிவேதா சிரித்துக்கொண்டாள். சீனியர்ஸை நினைக்க அவளுக்கு பயமாகவும் இருந்தது.

பின்னால் வந்த ஒரு பெரிய பஸ் ஒன்று அவர்களது வேனை தாண்டி முன்னே சென்றது. "நிவேதா அதுதான் கோப்ரவல்ஸ். அதில் தான் கம்பஸ் ஸடாவ் எல்லாம் போவார்கள்.... அதற்கு முன்னே ஒரு சிறிய பஸ் போகுதே அதில் தான் கம்பஸ் நொன் அக்கடமி ஸ்டாவ் போறது..."

"வேன் ராணுவ முகாமை சுற்றியுள்ள கிறவல் வீதியால் கஷ்டப்பட்டு போனது.... "நிவேதா.... பாத்திங்களா..... நேராக செல்ல வேண்டிய இடத்திற்கு எத்தனை சுற்று என்று. நூறு மீற்றர் தூரத்தால் கடக்க வேண்டியதை ஒரு கிலோ மீற்றர் தூரம் சுத்தவேண்டியுள்ளது....?"

"ஏன் ரதன்... இப்படிச் செய்றாங்க.... நேராக விட்டிருக்கலாம் தானே...?". "ஆரம்பத்திலே முகாமுக்கு நடுவே உள்ள மெயின் றோட்டால் தான் போனது. பின்னர் பாதுகாப்பு காரணங்களை காட்டி சுற்றிப்போகச் சொல்லி விட்டாங்களாம்...."

"ரதன், நான் கேட்கணும் என்று இருந்தனான். இதில் சாமான்களை எல்லாம் வாங்கிப் போறவங்க எங்க போகணும்.... ஏன் இப்படி ஒரே நேரத்தில் இப்படி அதிகமாக சாமான் வாங்கிப் போறாங்க"

"நிவேதா, தமிழர்களுடைய தலைவிதியில் இதுவும் ஒன்று. இவங்க ராணுவ கட்டுப்பாடு இல்லாத பிரதேசங்களில் இருப்பவர்கள். இவர்கள் வாரத்திற்கு ஒரு முறை இப்படி வந்து தமக்கு தேவையான சாமான்களை வாங்கிச் செல்வார்கள். அதுவும் குறிப்பிட்ட அளவு சாமான்களை மட்டுமே வாங்க முடியும். அதற்கு மேற்பட்டதை வாங்கிச் செல்ல முடியாது..."

"ஏன் அப்படி... ரதன் அவங்களுக்கு தேவைன்னா விரும்பியளவு வாங்கலாம் தானே....?" "இல்ல நிவேதா அப்படி வாங்கலாம்தான். ஆனா கொண்டுபோக விடமாட்டாங்க. அப்படி அதிகமா கொண்டு போறது இயக்கத்துக்கு போகுதாம் என ராணுவம் அதனை அனுமதிக்காது. இவங்க தங்கட பகுதிக்கு போற இடத்தில் உள்ள ராணுவ முகாமில் ஒரு லிஸ்ட் இருக்கும். அந்த லிஸ்டின் படி தான் ஒரு குடும்பத்திற்கு என்று சாமான்களை வாங்கிச் செல்ல முடியும்...."

"இதென்ன.... சட்டம் ரதன் எமது ஜனநாயக நாட்டில இப்படியுமா...?". "இதெல்லாம் எழுதாத சட்டங்கள்...... அதுவும் தமிழ் மக்களுக்கு மட்டுமேயான சட்டங்கள் நிவேதா...". "ரதன், உங்களுக்கு கம்பஸ் வாழ்கையில அதிகமாக எழுதக்கூடிய சூழ்நிலை இருக்குபோல..... எமது தமிழ் சமூகம் படும் கஷ்டம் இங்குதான் தெரிகிறது....." "ஓம் நிவேதா.... நாம் டவுனிலேயே இருந்திட்டம். எமது ஊரிலயும் சரி.... இங்கயும் சரி..... நாம டவுனுக்குள்ள இருப்பதினால் பிரச்சனையின் சரியான வெட்டுமுகம் எமக்கு தெரிவதில்லை.

ஆனா..... இந்த பகுதிகளில் உள்ள தமிழ் சமூகம் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமில்ல.... நிவேதா..". "ஒரு போராட்ட சூழ் நிலையில வாழ்ந்து கொண்டிருக்கிற சமுகத்துக்குள்ள பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொள்ளத்தானே.... வேண்டும்."

"அது சரி தான்.... இப்ப நாங்க வழியில் அனுபவித்ததும் அதுதான்.... போராட்ட சூழ்நிலை, போராட்ட காலங்கள் எல்லாம் சரிதான்.... ஆனால் இதில் அதிக பாவம் என்னவென்றால் மீண்டும் மீண்டும் இந்த அப்பாவி கிராமத்து சனங்கள் தான் ரொம்பவும் பாதிக்கப்படுதுகள்...." அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது.... அவர்கள் வேனுக்கு எதிரே மணல் ஏற்றி வந்த மாட்டு வண்டிகள் நிவேதாவைக் கவர்ந்தன.

"ரதன் இதென்ன..... இந்த மாட்டுவண்டிகள் இரட்டை மாடு பூட்டிய வண்டி கூட பின்பக்கம் சரியான ஒடுக்கமாக இருக்குது..... எங்க ஊரில என்றால் எவ்வளவு பெரிய வண்டி ரதன்....". "நிவேதா இப்படித்தான் நானும் ஆச்சரியப்பட்டன். இது கலாச்சார பின்னனியுடன் தொடர்பு பட்டது. அத்துடன் இவர்கள் மண் அகழ செல்லும் பிரதேசத்திற்கு இந்த வகையான வண்டில்கள் தான் மிக இலகுவாக இருக்குமாம்.." அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் போதே வேன் கம்பஸ் வாசலில் வந்து நின்றது.

கிழக்குபல்கலைக்கழகம் - வந்தாறுமூலை என்ற பெரிய போட்டுடன் நிற்கும் பல்கலைக்கழகத்திற்கு முன் ரதனும் நிவேதாவும் இறங்கிக் கொள்ள வேன் புறப்பட்டது.

மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செதுக்கிய காதல்

- தன்யா -

என் செய்தாய் எனை!
உனை அகன்று
செல்வதென்பது
என் ஆத்மாவிற்கும்
இயலாததாகி விட்டது
எனை உனை பிரித்தல்
இயற்கையாலும் இயலாதது

என் மீது உனக்கான
மானசீக காதலை
எது ஏற்படுத்திற்று. . .
காத்திருக்கின்றேன்
உனக்காக எதையும்
ஆற்றக்கூடிய வீறு
மனங்கொண்டு....

## இருள்

இருளினில் நுழைந்து
வெளிச்சத்தைத் தேடி

அடி முடி காணாது
பரமாத்மாவை அறிந்தனர்
தமக்குள் தாமே
பிரம்மாவும் விஸ்ணுவும்

பொய்யென்ற இருளினுள்
பிரம்மா பரிதவித்தார்
மெய்யென்ற வெளிச்சத்தில்
விஸ்ணுவும் மெய் மறந்தார்

நீண்டதொரு பயணம்
உண்மையை தெரிந்திட

திருமலை சுந்தா

# கவி முரசு

## “அழகின் தேவதை”

நீ தானா
அந்த தேவதை
உன் நிறம் பறித்தா
மான் பெற்றது
உன் நடை பறித்தா
அன்னம் நடந்தது
உன் பின்னிடை பறித்தா
மயில் நடனம் புரிந்தது
உன் முகம் பறித்தா
வளர்பிறை சந்திரனானது
உன் சொல் பறித்தா
பூங்குயில் தேனிசை பாடுது
உன் உடை பறித்தா
வானவில் கோலம் போட்டது
உன் முந்தானை பறித்தா
சீதையும் ராமாயணம் படைத்தது

- - சி.விமலகாந்தன் - -

## நல்லாட்சி...


கவிக்குயில் சேனையூரான்

பொல்லாப்பு ஊழல்கள்
புரிந்தோர்கள்
நல்லாட்சி தர்பாரில்
செல்வாக்கு பெறுவது
சிறப்பில்லை

அடாவடிகள் செய்தோர்கள்
ஆட்சி மாற்றத்திலின்று
நடமாடும் பல்கலையாக
நல்லாட்சி தர்பாரில் ஓட்டி
செல்வாக்கு பெறுவது
சிறப்பில்லை

தப்புச் செய்தோர்களை
சமூகத்தின் சொத்துக்களை
அப்பிக் கொண்டவர்களை
தப்பிக்க வைக்க இங்கு
சரணாகதிக்குள்
தூக்கி வைத்து நல்லாட்சி
சுடரேற்றுவது துளி கூட
சுபீட்சமில்லை

மாசற்ற அரசியல்வாதிகளின்
வேசம் வெளிச்சம் போட்டு
தேசம் அறிய வைத்தலே
நல்லாட்சியின் முதல்
வேலையாக இருக்க வேண்டும்



## முடிவு எப்போது...?



இருந்த இடம் தெரியாமல்
இடிந்து போன எம்வீடுகள்
மடிந்து விட்ட எம் உறவுகள்
ஓடி, ஓடி களைத்து விட்டோம் - இனி
உறங்குவதற்கு இடமில்லை
கறங்கு போல் சுழன்று
ஓய்ந்து விட்டோம்
முகவரி இழந்தோம்
முகாம் வாழ்க்கையானது
என் வாழ்க்கை முகாமில்
என் பிள்ளையினதும்
எனதருமை பேரப்பிள்ளையினதும்
ஏன் என் சந்ததியின்
வாழ்க்கையும்
முகாமில் தானோ....?
முடிவு தான் என்னவோ?

ஏ.ரவீந்திரன் [ஆசிரியர்]

## கண்ணை மூடி....?

(மூடி இருப்ப)

*அரக்கனா சொலு, அன்பின் இராவணா?*
*அரக்கன் என்று நா வரசரும் சொல்கிறார்!*
*அரக்கன் என்றேபிறர் எல்லாம் அறைகிறார்!*
*'இரக்க மொன்றிலீர்' என்று முரைக்கிறார்!*

*வேந்தனே தமிழா, விறல் மன்னவா,*
*சேர்ந்துமே கண்ணை மூடியே செப்புறார்!*
*ஏந்துகிறேன் நெஞ்சில் உன்னையே என்றுமே!*
*சார்ந்தே பகுத்தறி வாய்த்திடு தன்மையான்!*

தாமரைத் தீவான்
ஈச்சந்தீவு, கிண்ணியா.

# கம்பளைக்கால முருகன் கோயில் எம்பக்க





இப்பல்லக்கு இன்றுவரையும் பூஜைப் பொருளாக இருந்து வந்து ள்ளதுடன் இன்று இக்கோயிலின் அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரும் அரசன் தனது பட்டத்து ராஜ குஞ்சரங்களின் தந்தங்களை இக்கோயிலுக்கு வழங்கியதுடன் தேவாலயத்தின் பணிகளுக்கென 67 பேரை நியமித்தான். இன்றும் இக்கோயிலின் நிர்வாகத்தை அரத்தன பணிக்கி என்ற பெர வாத்தியக்கார வம்சத்தினரே கவனித்து வருகின்றனர். இக்கோவிலின் பூந்தோட்டத்தினை கவனித்துக் கொண்டிருப்பவர்கள். “கங்காணி வீட்டு (கங்காணிகெதர) பரம்பரையினர்” ஆகும்.

பிரதான நிர்வாகிகளாக விதானை ஒருவரும், வண்ணக்குரால என்பவரும் நிலமேயால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கம்பளை வரலாற்றுக் காலம் இலங்கை வரலாற்றாசிரியர்கள் இலங்கை வரலாற்றின் கம்பளைக் காலத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை என்றாலும் இக்காலத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகள் இப்போதும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையின் கலை இலக்கிய வளர்ச்சி தொடர்பான சிறப்புகள் இக்காலத்தில் பதியப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றின் இதுவரை காலம் இருந்து வந்த சமஸ்கிருத பாளி மொழிகளின் செல்வாக்கு குறைந்து சிங்கள மொழி இலக்கியங்கள் வளர்ச்சிபெற்றன. இதற்கு முக்கிய காரணம் இந்தியாவின் வட பகுதியில் முஸ்லிம் ஆதிக்கம் அதிகரித்ததால் வட மொழி செல்வாக்கிழந்தமை ஒரு புறமும் மறுபுறம் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற விஜய நகரப் பேரரசு திராவிட மொழிகளை ஊக்குவித்தமையும் இலங்கைக்கும் விஜய நகர பேரரசுக்கும் ஏற்பட்ட உறவுகளும் ஆகும்.

விஜய நகர பேரரசு வைஷ்ணவ மதத்தை ஆதரித்ததால் அதேகாலப் பகுதியில் இலங்கையிலும் விஷ்ணு (உபுல்வன் தெய்வம்) தெய்வ வழிபாடு பரவலாயிற்று.

இதற்கு மற்றுமொரு காரணம் சீதாவாக்கை காலம் முதல் கம்பளை அரசு காலத்தில் அழகக்கோனார் என்ற தமிழ் கோனார்கள் அரச அதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தியமையும் அரசர்கள் தென்னிந்திய பாண்டிய அரச வம்சத்தில் இருந்து பட்டத்து ராணிகளை கொண்டிருந்தமையும் ஆகும்.

மறு புறத்தில் இந்தியாவில் முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கம் பெருகிய போது கல் தச்சர்களும் மரச் சிற்பக் கலைஞர்களும் இலங்கையில் வந்து குடியேறியுள்ளனர். இவர்களைக் கொண்டு அரசர்கள் விகாரைகள், தேவாலயங்கள் அமைத்தபோது அவற்றில் திராவிட கலை மரபுகள் பொதிந்து காணப்பட்டன. கண்டிக்கும், கம்பளைக்கும் நடுவில் உள்ள எம்பெக்க, லங்காதிலக்க, கடலாதெனிய ஆகிய தேவாலயங்களில் இத் திராவிட கட்டிடக்கலை மரபுகளைக் காணலாம்.

இவற்றில் புத்தபெருமானின் சிலையுடன் விஷ்ணு (உப்புல்வன்) விபீசனன் ஸ்கந்தகுமார (முருகன்) கணேசர் (கணபதி) ஆகியவர்களின் சிலைகளும் புறச் சுவர்களில் வைத்து நிர்மாணிக்கப்பட்டு உள்ளன. அதேபோல் தமிழ் இலக்கிய மரபுகளையொட்டி தூதுக் காவியங்கள் (சந்தேசய) பல தோன்றின. பரவிசந்தேசய (புறாவிடு தூது) அத்தகைய நூல்களில் பெயர் பெற்றது.

தேவாலயத்தின் பணி செய்பவர்களாக நியமிக்கப்பட்டுள்ள பத்து பங்குக்காரர்கள் கங்காணி வீடு, வீதியே வீடு, முல்கம்பல வீடு, கற்பலகை வீடு, மனந்திவெல, சியம்பலாகொட, ரன்கம, தும்பக்கே, தொடந்தெனிய, தலவத்துர ஆகிய வீடுகள். இவர்கள் இணைந்து விமரிசையாக வருடாந்த பெரஹெர வைபவத்தை செய்து வருகின்றார்கள். கட்டிடக்கலை மீண்டும் கலையம்சங்கள்

தேவாலயத்தின் கட்டிடத் தொகுதி எட்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. தேவாலயத்தின் கலை வேலைபாடுகள் கொண்ட சிங்காசன மண்டபம் தேவாலயத்தில் இருந்து கொஞ்ச தூரத்தில் நுழைவாயிலுக்கருகே காணப்படுகின்றது. பெரஹெர காலத்தில் தேவ ஆபரணங்கள் அதில் அலங்கரிக்கப்பட்டு மன்னன் சிங்காசனத்தில் இருந்து வீதி வலத்தை கண்டு களிப்பான் என்று சொல்லப்படு கின்றது. கோவில் வளவுக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில் வாயில் மண்டபம் என்பது மிகுந்த கலை வேலைப்பாடுகளுடன் பொருந்திய தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான கூரை அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேல் துண்டு துண்டுகளாக சிவந்த ஓடுகள் நேர்த்தியாக பொருத்தப்பட்டுள்ளன. இந்த நுழைவாயில் மண்டபத்தின் மரத் தூண்களின் இரட்டை அன்னப் பறவைகள், யானைக் குஞ்சரம் நாகணவாய்ப் பறவை நீண்ட தந்தங்கள் கொண்ட யானை தாய் சேய் அரவணைப்பு வைரவர் போன்ற உருவங்கள் நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

எல்லா தூண்களும் இந்தியாவின் கேரளத்தில் இருந்து தருவிக்கப்பட்ட நன்கு முற்றிய வேங்கை மரங்களில் இருந்து குடைந்தெடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இச்சித்திர வேலைப்பாடுகளை உருவாக்குவதற்கு தலைமைச் சிற்பியாகச் செயற்பட்டவர் தெல்மட தேவேந்திர மூலாச்சாரியார் என்றும் இவர் இலங்கைக்குப் புலம்பெயர்ந்த திராவிட கட்டிட பாணியில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்.

கலை அம்சம் கொண்ட பூமடலுடன் செதுக்கப்பட்டுள்ள இத்தகைய “குருப்பாவை” யுடன் கூடிய உத்தரத் தூண் வேறு எங்குமே கிடையாது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால் இதனை எம்பெக்க தேவாலயத்துக்கு மட்டுமே உரித்தான விசேட கலை சிருஷ்டியாகக் கருதப்படுகின்றது. அதன் மற்றுமொரு சிறப்பம்சம் எந்த விதமான இரும்பு ஆணி வகைகளும் பாவிக்கப்படாமல் முற்றிலும் மரப் பொறிமுறை வேலைப்பாடுகள் மட்டுமே கொண்டு முழுக் கூரையும் அமைக்கப்பட்டுள்ளமையாகும்.

இலங்கை வரலாற்றில் தமிழர்களுடைய செல்வாக்கு சிங்கள பகுதியில் எப்படி இருந்தது என்பதற்கு எம்பக்க மிகச் சிறந்த சாட்சி.

முற்றும்.....

செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 08

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

-மாயன்-

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

**கா**லை ஏழு மணிக்கு நாங்கள் அங்கு வந்திருந்த போது காணாம் ஆக்கப்பட்டவர்களின் சில சொந்தங்கள் மட்டுமே அங்கே இருந்தனர். ஆனால் பிரதேசச் செயலகத்திற்கு முன்புறமாக காவல்துறையின் ஜீப் வண்டியொன்று இயந்திரத்தினை இயங்கு நிலையில் வைத்தபடி தயாராக நின்றது.

நாங்கள் எமது வாகனத்தில் இருந்து இறங்கி பகிஷ்கரிப்பிற்காக வைத்திருந்த பெனரினைக் கட்ட முற்பட்டபோது அந்த காவல்துறை வாகனத்தில் இருந்து இறங்கிய மூன்று நட்சத்திர அதிகாரியொருவர் மிகக் கடுப்புடன் என்னை நோக்கி வந்தார்.

"பிரதேசச் செயலகத்தின் வாசலில் அனாவசியமான இடையூறுகளை ஏற்படுத்தினால் உங்களைக் கைது செய்வேன்" என எடுத்த எடுப்பிலேயே கத்தத் தொடங்கினார். நாங்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே தவறான தகவல்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டனவோ என்னவோ.

குச்சவெளி காவல்துறையின் பொறுப்பதிகாரி நாம் என்ன செய்யப் போகின்றோம், அதனை எவ்வாறு செய்யப் போகின்றோம் என்பதைக் கேட்டறிந்ததுடன் எவ்வளவோ வினயமாகவே இடையூறின்றி எமது பகிஷ்கரிப்பை நடத்தும் படி சொல்லிச் சென்றிருந்தார்.

ஆனால் திருகோணமலை நகரத்தில் நாம் சந்தித்த காவல் அதிகாரியோ எம்மைக் கைது செய்வதைத் தெரிவிப்பதிலேயே குறியாக இருந்தார். அவருக்கு நான் சில விளக்கங்களைக் கொடுத்த போதிலும் அவர் அதனைக் கேட்கும் நிலையில் இல்லை. என்னுடன் மேலும் இரு காணாமல் ஆக்கப்பட்ட சொந்தத்தினர் பெருந்தெருவில் நிற்பதைக் கண்ணுற்ற அக்காவல் அதிகாரி நாம் தெருவில் நிற்பதால் எம்மைக் கைது செய்ய முடியும் எனத் தெரிவித்தார். நாம் உடனடியாக பாதசாரிகளின் நடைபாதை மேடைக்குத் தாவினோம். அக் காவல் அதிகாரி தனது கருத்தைத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

மெல்ல மெல்ல நேரம் செல்லச் செல்ல மக்களின் வருகை அதிகமாகத் தொடங்கியது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சொந்தங்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கான இடங்களைத் தெரிவு செய்து அணிவகுப்பதில் வண. பிரபாகரும், வண. சுஜி அவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் திருகோணமலைக் கிளைத் தலைவி ஆஷாவுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்க வண.அடிகள் யோகேஸ்வரன் அணிவகுத்திருந்த மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். காணாமலாக்கப்பட்டவர்களின் பதிவுகளைப் பிரத்தியேகமாக வண. யோகேஸ்வரன் அடிகளின் நிறுவனமான மனித உரிமைகளுக்கான விருத்திக்கும் பாதுகாப்புக்குமான அமையத்தினர் மேற்கொண்டிருப்பதை அவர் அங்குள்ள மக்களின் சிறு சிறு குழுக்களுக்கு தெளிவாக்கிக் கொண்டிருந்தார்.

அன்றைய மதிய உயவிற்கான ஏற்பாடுகளைப் பெயர் வெளியே தெரிவதை விரும்பாத ஒரு அரச அலுவலரும், வண.சுஜி மற்றும் வண. பிரபாகர் ஆகியோரின் நண்பர்களும் மேற்கொண்டிருந்தனர்.

அதேவேளை நீராகாரமாக மோர், குளிர்பானம் என்பவற்றையும் நலன்விரும்பிகள் அனுப்பிக்கொண்டிருந்தனர். வண. யோகேஸ்வரன் அடிகள் வாங்கி வைத்திருந்த பெரிய பெட்டி நிறைந்த விசுக்கோத்துக்கள் மதியம் 10மணிக்கு வினியோகிக்கப்பட்டன்.

புதிதாக ஆணைக்குழுவிடும் பதிவதற்காக வந்தவர்களிற் பலர் எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு ஆணைக்குழுவைப் பகிஷ்கரித்து எம்முடன் அமர்ந்தனர். ஆனால் பிரதான வாசலைத் தவிர்த்து மற்றொரு வாசலாலும் பலரை உள்ளெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நாம் அதனைத் தெரிந்துகொண்ட போதும் அதனையிட்டு எவ்வித மனக்கிலேசமும் அடையவில்லை. ஏனெனில் எமது போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களால் தாமாகவே உணர்ந்து முன்னெடுக்கப்பட்ட போராட்டம். இப் போராட்டத்தில் பலவந்தப்படுத்தல்கள் எவையும் இருக்கவில்லை. அதனாலேயே எமது அப் போராடடம் சரியான வழியிற் சென்றுகொண்டிருப்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொண்டோம்.



காலை 11.00 மணியளவில் மறைந்த மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்திற் செயற்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் எம்மை அனுகினார்.

அப்போது வண.யோகேஸ்வரன் அவர்களுடன் ஏனைய அடிகள் இருவரும் நானும் நிலமைகளையிட்டுப் பேசிக்கொண்டிருந்தோம். எம்மை அனுகிய அமைப்பாளர் தமது கட்சியும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்ததுடன் போராட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளரான செ. கஜேந்திரன் கலந்துகொள்ள வரலாமா? என்ற அனுமதியையும் வேண்டி நின்றார்.

அதற்குப் பதிலளித்த வண.யோகேஸ்வரன் அடிகள் இந்த மக்கள் போராட்டத்தில் தலைவர்கள் மக்களே அதனால் நாம் அனைவரும் அவர்களுக்கு ஆதரவாக இருப்பதாயின் எவரும் அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

பின்னர் அக்கட்சியின் செயலாளர் உட்பட சில அங்கத்தவர்களும் அன்றும் அடுத்த நாளும் மக்களோடு மக்களாக இப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

நகரும்....

# சீனாவின் இலத்திரனியல் கண்காணிப்புக் கோபுரம்

**கொ**ழும்பில் தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் சீனா தனது 'கொலையாளியின் தண்டாயுதம்' என அழைக்கப்படும் கனரக ஆயுதங்களை மறைத்து வைத்து கண்காணிப்பில் ஈடுபட முடியும். இக்கோபுரம் அமைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டால் இந்திய மாக்கடலினதும் தென்னாசியாவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறு southasiaanalysis.org ஊடகத்தில், பாஸ்கர் ரோய் என்ற மூலோபாய ஆய்வாளர் எழுதியுள்ள கட்டுரையில் எச்சரித்துள்ளார். இதனை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்துள்ளவர் 'நித்தியபாரதி'.

சிறிலங்காவின் புதிய அதிபர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்ட போது, சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் சீன முதலீடுகள் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யக் கூடாது எனவும் சீன முதலீட்டைப் பாதுகாக்க வேண்டும் எனவும் சீனத் தலைவர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

சிறிசேனவைப் பொறுத்தளவில் சிறிலங்காவின் மிக நெருக்கடியான நிதி நிலைமையை ஈடுகட்டுவதென்பது மிகவும் கடினமான ஒரு விடயமாகக் காணப்பட்டது. நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை சீனாவுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தேவையிருப்பதால், அதனை வழங்கியுதவுமாறு அனைத்துலக நாணய நிதியத்திடம் சிறிலங்கா உதவி கோரியிருந்த போதும் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

சீனாவின் கடன் பிடிக்குள் சிறிலங்கா அகப்பட்டுள்ளமை தெளிவானதாகும். இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு சிறிலங்கா பயன்படுத்தப்படுகிறது.

இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக சிறிலங்காவில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுள் கொழும்பில் அமைக்கப்படும் தாமரைக் கோபுரமும் ஒன்றாகும்.

இக்கோபுரத்தின் கட்டுமானத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கி நிதி வழங்கியுள்ளது. இது ஈபிள் கோபுரத்தை விட 26 மீற்றர் உயரமாக கட்டப்படுகிறது.

103 மில்லியன் டொலர் பெறுமதியான இக்கோபுரமானது சீனத் தேசிய இலத்திரனியல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கூட்டுத்தாபனத்தாலும் ஊாநைநளந யுநசழளியஉந டுழபெ - ஆயசஉா ஐவெநசயெவழையெட வுசயனந என்ற பிறிதொரு நிறுவனத்தாலும் நிர்மாணிக்கப்படுகிறது.

சிறிலங்காவை முன்னர் ஆட்சி செய்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தால் இவ்விரு சீன நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

கொழும்பில் தாமரைக் கோபுர நிர்மாணத்தில் ஈடுபடும் சீன நிறுவனங்களுள் ஒன்றான இலத்திரனியல் நிறுவனமானது சீனப் பாதுகாப்பு இலத்திரனியல் முறைமை ஒருங்கணைப்பு, பாதுகாப்பு இலத்திரனியல் முறைமை நிர்மாணம், பொதுப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு, அனைத்துலக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான இலத்திரனியற் பொருட்களை வழங்குதல் உட்பட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

இதேபோன்று சீனாவின் மற்றைய நிறுவனமான விண்வெளிச் செயற்பாட்டு மையமானது பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல், தொழினுட்ப சேவைகளில் ஈடுபடல், பயங்கரவாத எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், கலக எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், தொழினுட்பங்கள் மற்றும் சேவைகள் போன்றன உட்பட பல்வேறு ஏற்றுமதி சார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

சிறிலங்காவில் தென்னாசியாவின் மிகப் பெரிய கோபுரத்தை அமைப்பதில் ஈடுபடும் இவ்விரு சீன நிறுவனங்களும் இந்திய மாக்கடல் மற்றும் இந்தியா ஆகியவற்றைக் கண்காணிப்பதையே தமது நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன.

சிறிலங்காவில் நிர்மாணிக்கப்படும் தாமரைக் கோபுரமானது சீனாவின் இலத்திரனியல் கண்காணிப்பு பொறிமுறையை உள்ளடக்கியது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறான உயரமான கோபுரத்தை அமைப்பதன் மூலம் சீனா தனது மறைமுக நிகழ்ச்சி நிரலை அரங்கேற்ற முடியும்.

இந்திய மாக்கடலில் சீனா தனது கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான பொருத்தமான தொழினுட்பம் சிறிலங்காவில் தற்போது காணப்படவில்லை.

ஆகவே கொழும்பில் தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் சீனா தனது 'கொலையாளியின் தண்டாயுதம்' என அழைக்கப்படும் கனரக ஆயுதங்களை மறைத்து வைத்து கண்காணிப்பில் ஈடுபட முடியும்.

இக்கோபுரமானது முற்றுமுழுதாக அமைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டால் அது இந்திய மாக்கடலினதும் தென்னாசியாவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

சீனாவால் சிறிலங்காவில் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம், கொழும்புத் துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் ஏனைய மூன்று முக்கிய தந்திரோபாயத் திட்டங்கள் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலுக்குத் துணையாக அமையும்.

சீனாவின் 21ம் நூற்றாண்டுக்கான கரையோர பட்டுப்பாதைத் திட்டம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு சீனாவானது சிறிலங்கா போன்ற நாடுகளில் தனது முதலீட்டை மேற்கொள்ளும்.

பட்டுப்பாதைத் திட்டமானது அனைத்திலும் வெற்றி பெறவேண்டும் என்பதற்கான வர்த்தக மற்றும் அபிவிருத்தி முயற்சியாண்மையாக நோக்கப்படுகிறது.

ஆனால் சீனாவானது சிறிலங்காவில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அதனுடைய பட்டுப் பாதைத் திட்டத்தின் பிரத்தியேக வடிவமாக நோக்கப்படுகிறது.

சிறிலங்காவின் அபிவிருத்திக்காக சீனா, சிறிலங்கா மற்றும் இந்தியா ஆகிய முத்தரப்பிற்கும் இடையில் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு சிறிலங்கா அதிபரிடமும் வெளியுறவு அமைச்சரிடமும் சீனா கூறியுள்ளது.

சிறிலங்கா அதிபர் சீனாவில் தங்கியிருந்த போது சீனாவின் இந்த யோசனைக்கு தலையசைத்தது போல் தெரிகிறது. ஆனால் இதற்குள் இந்தியாவையும் கொண்டுவர வேண்டியுள்ளது.

சிறிலங்காவில் தன்னால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இந்தியா அதிருப்தி அடைவதை சீனா நன்கறியும். ஏனெனில் இந்த நடவடிக்கைகளில் சில இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக இந்தியா கருதுகிறது.

இவ்வாறானதொரு முத்தரப்பு உடன்படிக்கையில் இந்தியா எவ்வாறானதொரு பங்களிப்பை வழங்க வேண்டும் என சீனா விரும்புகிறது?

சிறிலங்காவில் சீனா கோபுரம் ஒன்றை அமைக்கும் போதும், தனது நீர்மூழ்கிக் கப்பல்களை கொழும்பில் தரித்து நிறுத்தும் போதும், இறுதியாக சிறிலங்காவை சிவில் மற்றும் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போதும் இந்தியா இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என சீனா கருதுகிறதா?

இந்தியாவைத் தனது வலைக்குள் இழுப்பதற்காக சீனா, சிறிலங்காவைப் பயன்படுத்துவது போல் தெரிகிறது. மே மாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளும் போது உண்மையில் இந்த விடயம் தொடர்பாக மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

OTHER

## 600கி.மீ வேக ரயில் கண்டுபிடிப்பு



புஜி மலைப் பகுதிக்கு அருகே நடைபெற்ற சோதனை ஓட்டத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள ரயில் மணிக்கு 600 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடி புதிய சாதனையைப் படைத்துள்ளது. இந்த ரயில் வண்டி மிக அதிக காந்த சக்தி மூலம் இயங்குகிறது. ஓடும் ரயில் தண்டவாளங்களைத் தொடாமல் அதியுயர் காந்த சக்தி மூலமே செயல்படும் இந்த வண்டி, ஈர்ப்பு விசை மற்றும் இதர சக்திகளை சமன்படுத்தி பயணிக்கும். இந்த அதிவேக ரயில் வண்டி 283 கிலோமீற்றர் தூரத்தை நாற்பது நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் பயணிக்கும். .

ஆனாலும் இந்தச் சாதனை வேகத்தை ரயில் பயணிகள் தமது பயணத்தில் அனுபவிக்க இயலாது


MOBILE

## வளைந்த தொடு மேற்பரப்பு



LG நிறுவனம் வளைந்த திரையினைக் கொண்ட LG G4 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. இதன் திரையானது 5.5 அங்குலமாக காணப்படுவதுடன் மேலிருந்து கீழாக 300 மில்லி மீற்றர்கள் வரை வளைந்ததாக காணப்படுகின்றது. மேலும் இக்கைப்பேசியில் Octa Core Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM மற்றும் 32GB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன. இதேவேளை சேமிப்பு நினைவகமானது microSD Card உதவியுடன் 2TB வரை அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெராவினையும் கொண்டுள்ளது.

## @ செக்கனும் படம் எடுக்கலாம்



ஒவ்வொரு செக்கன்களுக்கும் தொடர்ச்சியாக புகைப்படங்களை எடுக்கக்கூடிய கமெரா ஒன்றினை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த கமெராவில் காணப்படும் விசேட சென்சாரில் ஒளிக்கதிர்கள் விழுவதனை உணர்ந்து புகைப்படங்களை தானாகவே எடுக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

## Black Berry Oslo



பிளாக்பெரி நிறுவனம் ஆனது BlackBerry Oslo எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது. 1440 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது QWERTY வகை கீபோர்ட்டினை உள்ளடக்கியுள்ளது. மேலும் BlackBerry OS 10.3.2 இயங்குதளத்தில் செயல்படக்கூடியதாக இருப்பதுடன், 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றினையும் கொண்டுள்ளது.

## · மீண்டும் திறப்பு

நவீன உலகின் மிகப் பெரியதும் சக்தி வாய்ந்ததுமான பௌதிக ஆராய்ச்சிக் கூடமான சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ள CERN ஆராய்ச்சிக் கூடம் 2 வருட கால இடைவெளிக்குப் பின் மறுபடி இயங்கத் தொடங்கியுள்ளது.

## பாதுகாப்பு வழிமுறைக்கு 18 லட்சம் பரிசு



செவ்வாய கிரகம் போன்ற பயணத்தில் விண்வெளி வீரர்களுக்கு பாதுகாப்பு வழிமுறைகளை தெரிவிப்பவர்களுக்கு ரூ.18 லட்சம் பரிசு வழங்கப்படும் என, நாசா அறிவித்துள்ளது. புவி வட்ட பாதையை தாண்டி சூரிய மண்டலத்திற்கு வெளியே செல்லும்போது அதிக சக்தி வாய்ந்த, அண்டக காஸ்மிக் கதிர்கள் (ஜி.சி.ஆர்.) காணப்படுகின்றன.

இவற்றில் தாக்குதலில் இருந்து நெடுந் தொலைவு கிரகங்களை ஆய்வுசெய்யும் விண்வெளி வீரர்கள் தப்ப முடியாத நிலை உள்ளது. இதற்கான வழிமுறையை தெரிவிப்போருக்கே பரிசுத் தொகை வழங்குவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான, நாசா அறிவித்துள்ளது.

## கூகுளின் lollipop இன் அம்சங்கள்



Froyo, Gingerbread, Ice Cream Sandwich, Jelly Bean, KitKat ஆகிய இயங்குதளத்திற்கு பிறகு வந்திருப்பது Lollipop. இதில் Lollipop 5.0, 5.1 என்று வெர்சன்கள் (version) வந்துவிட்டன.

- பழைய ஸ்மார்ட்போனில் இருந்து அனைத்து செட்டிங்ஸ் மற்றும் தகவல்களை என்எப்சி மற்றும் ப்ளூடுத் பயன்படுத்தி பறிமாறி கொள்ள முடியும்.
- ஆப் நோட்டிபிகேஷன் சென்று எந்த அப்ளிகேஷன்கள் நோட்டிபிகேஷன் மூலம் தொந்தரவு செய்யும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- ஆப்ஸ் செட்டிங்ஸ்க்கு ஏற்ப லாக் ஸ்கிரீனிலும் நோட்டிபிகேஷன் களை பார்க்க முடியும்.
- நண்பர்கள் மற்றும் மற்றவர்களிடம் போனை வழங்கும் போது கெஸ்டு மோடு பயன்படுத்தலாம்.
- Do not disturb என்ற ஓப்ஸன் மூலம் இரவு நேரங்களில் பயனாளிகளை தொந்தரவு செய்யாமல் இருக்க ஆன்டிராய்டு 5.0 அனுமதிக்கின்றது.

ஸ்மார்ட்வாட்ச் முதல் ஸ்மார்ட் டிவி வரை அனைத்து கருவிகளுடனும் புதிய அப்டேட் மூலம் இணைக்க முடியும்.

தற்போது செய்யப்பட்டுள்ள அப்டேட் மூலம் பேட்டரி பயன்பாடு அதிகமாக கிடைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பெருவிரல்ச் சாதனம்



NailO எனப்படும் பெருவிரலில் அணியக்கூடிய சிறிய அளவிலான துணைச் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் கைப்பேசி, டேப்லட் மற்றும் லேப்டொப் போன்றவற்றுடன் இணைத்துப் பயன்படுத்தக்கூடிய இச்சாதனம் மவுஸ் ஒன்றிற்கு இணையாக செயற்படுவதுடன், இதனைக்கொண்டு பல்வேறு செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகின்றது. இதனை MIT நிறுவனம் உருவாக்கியுள்ளது.

# குறுக்கெழுத்து புதிர் 057

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | | | | ■ | 2 | 15 | | |
| 3 | | அ | | ■ | 4 | ட | 16 | ■ |
| 5 | | னொ | 13 | 14 | | 17 | | ■ |
| | ■ | ■ | | | ■ | | ■ | 20 |
| ரா | ■ | 6 | 18 | ட | க | 19 | 7 | |
| | 8 | | | | | | ■ | |
| 9 | | 21 | | | ■ | யா | ■ | ன் |
| | ■ | 10 | | | ■ | | ■ | |
| 11 க | | | | ■ | 12 | | | ■ |

*விடையை அனுப்ப வேண்டிய முகவரி :*

*முடிவுத்திகதி : 30.04.2015*

*மலைமுரசு. இல - 159ஏ.*

*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### இடமிருந்து வலமாக

1. மகாபாரதம் எதை ஸ்தாபித்தது
2. “கிரிபத்” ஐ தமிழில் இவ்வாறு கூறுவர்
3. புதிய தொழிநுட்பத்தில் மிகப் பிரபல்யமாக எடுக்கப்பட்டு வெற்றி பெற்ற ஆங்கில திரைப்படம்
4. பெண்கள் இடுப்பில் வைத்து தூக்குவது - திரும்பியுள்ளது.
5. மும்மதத்தினரும் தத்தமது என சண்டை இடும் மலை
6. முன்னாலிருந்தோ பின்னாலிருந்தோ வாசிக்கும் போது ஒரே சொல்லைத் தரும் சொல்
7. பெண்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டியவன்
8. யானையை இவ்வாறும் அழைப்பர்
9. மிளகாய் வகையுள் ஒன்று
10. திருமணம் முடிக்க முன் கவச குண்டலங்களோடு குழந்தையைப் பெற்ற காவியத் தாய்
11. கந்தையானாலும் ............... கட்டு
12. இது சிறிதானாலும் காரம் பெரிது

### மேலிருந்து கீழாக

1. காவி தரித்து தியானத்தில் ஈடுபடுபவர்
2. சிவனின் இது சிவனொளிபாதமலையில் காணப்படுகின்றது.
5. இந்துக்கள் நித்திரை விழித்து நோற்கும் நோன்பு
6. வேலையில்லா பட்டதாரியை சுருக்க உரைப்பின்
13. வீட்டில் வளர்க்க உகந்த இலையில்லா செடி
14. பாண்டுவின் புதல்வர்களை இவ்வாறும் அழைக்கலாம்
15. கடிதம் - திரும்பியுள்ளது
16. வாழை காய்களைக் குறிக்கும் ஓர் சொல்
17. தாய்க்குப் பின் இவளே ஓர் ஆணுக்குத் துணை
18. வாழைப்பழத்தின் ஓர் வகை
19. 1ந் தவணையில் அனைத்து பாடசாலைகளிலும் ....... ப்போட்டி இடம்பெறும்
20. ஸ்டாலினின் இறுதியாக வெளிவந்த திரைப்படம்
21. பொதுபலசேனாவின் தலைவர் ஓர் .......... - குழம்பியுள்ளது

## புதிர் 056 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 14 ஸ் | 15 தி | 2 ர | ம் | 16 பு | ட் | டா | 18 ன் |
| 3 க | ரு | ங் | க | ல் | ஸ் | ■ | ■ | த |
| 4 தி | தி | 5 க | ல | ப் | ப | ட | 21 ம் | னா |
| ல் | ■ | ள் | 6 க | 7 த | ம் | 17 ஒள | ட | ர் |
| 8 லா | ஹ | ல் | ம் | ■ | ■ | வை | 19 இ | வ |
| னா | ■ | ■ | 9 மா | 20 து | ளை | யா | டா | ■ |
| ■ | 10 கு | வ | ளை | லா | ■ | ர் | ப் | ■ |
| 11 பி | டி | வா | த | ம் | ■ | ■ | 12 பு | தை |
| ழை | ■ | ■ | 13 இ | ரா | மா | ய | ன | ம் |

பாராட்டு பெறுவோர் :

*திரு. மனோகரன். கே*

*32/4. மத்தியவீதி, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்


## வலியவன்
### இயக்குனர் சரவணனின் ஜெய், ஆண்டிரியா நடிக்கும்



ஒரு சப்வேயில் ஜெய்யை பார்க்கும் ஆண்ட்ரியா முதல் பார்வையில் ஐ லவ் யூ சொல்கிறார். இதை தொடர்ந்து அவர் யார்? எதற்காக இப்படி சொன்னார்? என்று ஒரு வாரம் தேடி அலைய, ஒரு வழியாக ஆண்ட்ரியாவே, ஜெய்யை தேடி வருகிறார். அப்போது தான் Hangover பட பாணியில் ஜெய் தண்ணி அடித்து கொண்டு, ஆண்ட்ரியாவிடம் ஒரு யதார்த்தமான சந்திப்பில் அட்டகாசம் செய்கிறார். இதை ஆண்டிரியா, ஜெய்யிடம் கூற இந்த விஷயம் தெரிந்து அசட்டுத்தனமாக வழிந்து ஆண்ட்ரியாவை காதலிக்க ஆரம்பிக்கிறார். ஆனால், ஆண்ட்ரியா, நான் உன்னை காதலிக்க வேண்டும் என்றால், ஒருவனை அடிக்கனும், என்று ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றவரை காட்டுகிறார். ஜெய்யும் இதற்கு ஓகே சொல்கிறார். ஜெய் எதற்கு இவ்வளவு தைரியமாக சம்மதிக்கிறார் என்பதே படத்தில் இறுதியில் தெரியவருகிறது. வில்லனை பழிவாங்க இது தான் சரியான சந்தர்ப்பம் என ஜெய், பாக்ஸிங் கற்று கொண்டு, 6 பேக் எல்லாம் வைத்து கொண்டு, இறுதியில் வில்லனுடன் மோதி அவனை வெற்றி கொண்டாரா? என்பதே கதை.

ஜெய் கண்டிப்பாக இந்த படத்தில் தன்னை நிருபித்து காட்ட வேண்டும் என்று கடுமையாக உழைத்திருக்கிறார். ஆண்ட்ரியா, ஜெய் ஜோடி பொருத்தம் அ்வளவாக இல்லை. நமக்கு தான் நல்ல அழகான பொண்ணு அமையாது, கிடைக்கிற பொண்ண, அழகா ஏத்துக்கனும், போன்ற வசனத்தால் ஆண்களை மட்டும் கைத்தட்ட வைக்கிறார் வசன இயக்குனர். ஒரு சண்டை என்றாலும் கிளைமேக்ஸ் சண்டை பார்க்கலாம்.

ஆக படத்தில் கடைசி அரை மணி நேரம் மட்டும் வலியவனா இருந்தா போதுமா, பட தலைப்புக்கு ஏற்ப வலியவனாக இருக்க வேண்டாமா?



ராகவா லாரன்ஸின் இயக்கத்தில் வெளியான "காஞ்சனா -02" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## ஒரே இரவுக்கு கமலுக்கு ஓ.கே சொல்வாரா



கமல் ஹாசன் நடிப்பில் உருவாகவுள்ள புதிய திரைப்படமான ஒரே இரவு திரைப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க நடிகை த்ரிஷா ஓ.கே. சொல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. வரிசையாக மூன்று திரைப் படங்கள் ரிலீஸுக்கு தயாராகி வரும் நிலையில், கமலின் புதிய திரைப்படம் குறித்த செய்தி வெளியாக ஆரம்பித்துள்ளது. ஆக்ஷன், த்ரில்லராக உருவாக விருக்கும் இந்த திரைப்படத்தை கமலின் உதவியாளர் இயக்கு கிறார். மேலும் திரைப் படத்திற்கு "ஒரே இரவு" என தலைப்பு வைத்திருக்கிறார்களாம்.

## விஷால் + நிகிதா



சுசீந்திரன் இயக்கத்தில் விஷால் நடித்து வரும் "பாயும் புலி" திரைப்படத்தில் நிகிதா ஒரு பாடலுக்கு நடனமாடயிருக்கிறாராம். நிகிதா ஆடும் இந்த பாடலை மார்க்கெட் அமைத்து அங்கு படமாக்கியிருக்கின்றனர். "சரோஜா" திரைப்படத் தில் இடம்பெற்ற பாடலுக்கு பிறகு இந்த பாடல் தனக்கு பெரிய பெயரை வாங்கிக் கொடுக்கும் என்று நிகிதா நம்பிக்கை தெரிவித்துள்ளார். "பாயும் புலி" திரைப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடித்து வருகிறார்.

## ரஜினிக்கு வில்லன் விக்ரமே

அடுத்து ரஜினி, ஷங்கருடன் இணையவுள்ள படத்தை பற்றி பல ருசிகர தலவல்கள் வெளிவந்துள்ளது. ரஜினி ஹீரோவாக நடிக்க, விக்ரம் வில்லனாக நடிக்க பேச்சு வார்த்தை நடந்து வருகிறதாம். 90% விக்ரம் சம்மதித்து விடுவார் என கூறப்படுகிறது. இப்படத்தை லைக்கா நிறுவனம் தயாரிக்கவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. மேலும், இப்படத்தின் பட்ஜெட் ரூ190 கோடியாம்.

## இப்போதில்லை

காஜல் அகர்வாலின் தங்கையான நிஷா அகர்வாலுக்கு திருமணம் முடிந்துள்ளது. எனவே அடுத்து அவருக்கும் திருமணம் நடக்க உள்ளதாக செய்தி வெளிவந்தது. ஆனாலும் இதற்கு பதிலளிக்கையில், எனக்கு சீனியர் நடிகைகளுக்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை. அவர்களுக்கு திருமணம் முடிந்த பிறகே எனக்கு திருமணம் நடக்கும் என்று காஜல் கூறியுள்ளார்.

## குட்டி தல "ஆத்விக்"

தல அஜித் - ஷாலினி ஜோடிக்கு சமீபத்தில் பிறந்த குட்டி தலக்கு "ஆத்விக் அஜித்குமார்" என பெயரிடப்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது. என்னை அறிந்தால் வெற்றிக்கு பிறகு, குடும்பத்தோடு நேரம் செலவழித்த தல, சமீபத்தில் தான் இயக்குனர் சிவாவின் அடுத்த படத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளார்.

## விளம்பர சர்ச்சைக்குள் ஐஸ்வர்யா

நகைக்கடை விளம்பரத்திற்காக எடுக்கப்பட்ட ஐஸ்வர்யா ராயின் புகைப்படம் ஒன்று சர்ச்சையில் சிக்கியுள்ளது. அந்த விளம்பரப்படத்தில் ஐஸ்வர்யா ராய் நகைகளுடன் ஜொலிக்க, அவருக்குப் பின்னால் ஒரு கருப்பினக் குழந்தை குடையை உயர்த்திப் பிடிப்பதுபோல வடிவமைக்கப் பட்டிருந்தது. இதற்கு சமூக ஆர்வலர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து ஐஸ்வர்யா ராய்க்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.



இது தொடர்பாக அவர், விளம்பரத்திற்காக எடுக்கப்பட்ட படத்தை இணைத்துள்ளதுடன், கிரியேட்டிவ் குழுவுடன் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்'றேன், என எழுதியுள்ளார்.

பின்னர் சம்பந்தப்பட்ட நகைக்கடை, சர்ச்சையை ஏற்படுத்திய அந்த விளம்பரத் தை நீக்கிக்கொள்வதாக அறிவித்துள்ளது.




## வீட்டிற்குள் நுழைந்த பேய்

ராகவா லாரன்ஸின் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான காஞ்சனா2 திரைப்படம் திரையரங்குகளில் வெற்றி நடைபோடுகிறது. இப்படத்தை ரஜினி பார்க்க வேண்டும் என்று தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார். இதற்காக சூப்பர் ஸ்டார் ரஜினி வீட்டிலேயே படத்தை காண்பித்துள்ளார் லாரன்ஸ். படத்தை பார்த்து முடித்த பிறகு லாரன்ஸை ரஜினி மிகவும் பாராட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 50

# பசி..! பசி..! பசி..!



உலகத்திலேயே மிக மிக கொடுமையான அனுபவம் எது என்று கேட்டால் அது பசியேதான்! சிறுவர் முதல் பெரியவர் வரை இந்த கொடுமைக்கு இலக்காகியிருப்பதானது எமது கண்ணீரையே வரவைப்பதாக இருக்கின்றது! ஒரு பெண் கர்ப்பந்தரிக்கும் போது அவளுக்கு வேண்டிய சத்துணவு கிடைக்காவிட்டால் அவளது எடையும் ஆரோக்கியமும் குறைவடைகின்றது. அதன் விளைவாக அவளுக்கு பிறக்கும் குழந்தையும் எடை குறைந்தும் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுமே காணப்படுகின்றது. கருவிலேயே ஆரோக்கியக் குறைவுடன் உருவாகும் ஒரு பிள்ளை தனது வாழ்நாள் பூராகவுமே புலன்கள் பாதிக்கப்பட்டோ அங்கவீனமுற்றோ காலத்தை ஓட்ட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

எமது நாட்டின் கிராமப்புறங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன. தமது பிள்ளைகளுக்கு கால் வயிறு, அரை வயிறு உணவு கூட கொடுக்க முடியாத பெற்றோர் கண்ணீருடன் காலத்தை ஓட்டுகின்றார்கள். அதற்கான பிரதான காரணம் வறுமை என்றே சொல்ல வேண்டும். அந்த வறுமையை ஓட்டுவதற்காக ஆண் பெண் பேதமின்றி குடும்பமே ஒன்றிணைந்து சிறு தோட்டம், விவசாயம், விறகு வெட்டல், கூலி வேலைக்கு செல்லல் ஆகிய பல முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். இருந்தாலும் அவர்களது முயற்சி பல காரணங்களை முன்னிட்டு பூரண பலன் அளிப்பதில்லை. சிறு தோட்டம் மற்றும் விவசாயம் செய்ய அவசியமான உபகரணங்கள் மற்றும் பசளை வகைகளை பெற்றுக் கொள்வதற்கான பணவசதி அவர்களிடம் இல்லாததால் உற்பத்தி வீழ்ச்சியடைகின்றது. பசி காரணமாக அறுவடைக்குரிய காலத்துக்கு முன்பே விளை பொருட்களை விற்று பணம் சேகரித்தல் மற்றும் உணவுக்கு பயன்படுத்தல். அடுத்த போகத்துக்கான விதைகளை மீதப்படுத்த முடியாமல் போவதால் கடன்பட நேர்தல் போன்றன சம்பவிக்கின்றன.

அடுத்து கிராமங்களில் வசிக்கும் இளைஞர்கள் பலர் காட்டில். பட்ட மரங்களை தறித்து விறகாக்கி அவற்றை துவிச்சக்கர வண்டிகளில் கட்டி எடுத்து நகர்ப்புறங்களுக்கு கொண்டு சென்று விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். துவிச்சக்கர வண்டியில் தமது தலைக்கும் மேலாக விறகுக் கட்டுக்களை அடுக்கடுக்காக கட்டி தம்மை விட அதிக பாரத்தை அந்த இளைஞர்கள் நெஞ்சால் இழுத்துச் செல்வதை அவர்களது தாய்மார் பார்த்தால் அவர்களது வயிறு பற்றி எரியும்! அப்படி அவர்கள் சுமந்து செல்லும் விறகுகளை சேகரிப்பதற்காக அவர்கள் படுகின்றபாட்டை சொல்ல வார்த்தைகளே இல்லை. விடிய முன்னராக காட்டுக்கு செல்ல வேண்டும். முடிந்தால் மனைவி, பிள்ளைகள் கூட ஒத்தாசைக்கு செல்லல் வேண்டும். காட்டில் பாம்பு உட்பட விஷ ஜந்துக்களின் அபாயங்களிலிருந்து தப்ப வேண்டும். மரத்தை பிளந்து ஒரே அளவில் விறகுகளை கட்டுகளாக்க வேண்டும். பின்னர் சரியாக 'பலன்ஸ்' ஆகும்படி துவிச்சக்கர வண்டியில் 'லோட்' செய்ய வேண்டும்.

அத்தனையையும் செய்த பின்னர் கூட காலை உணவு இருக்காது. சிறுவர்கள் உணவின்றி பாடசாலை செல்வர்.

விறகுக்கட்டை சுமந்து செல்லும் இளைஞன் வெறும் குடிநீரை அருந்திவிட்டு புறப்பட வேண்டும். இத்துடன் சோதனைகள் முடிந்துவிடாது. காலை 9.00 மணி தாண்டிவிட்டால் பொலிசார் வீதிக்கு வந்து விடுவார்கள். விறகு வெட்ட, கொண்டு செல்ல 'பாஸ்' இருக்கின்றதா என நூறு கேள்விகளுக்கு விடை சொல்லி அவர்களை அனுசரித்து செல்ல வேண்டும். விறகு வெட்டி விற்பது என்பது ஒரு பாரம்பரியமான தொழில். அது ஏழை மக்களின் ஒரு ஜீவனோபாயம். பசி ஆதிகாலம் தொட்டே இருக்கின்றது. சட்டம் இப்போ வந்தது.

ஒரு சமயம் துவிச்சக்கர வண்டியில் விறகேற்றிச்சென்று விற்கும் பலரை காவல்

**(வி. என். சந்திரகாந்தி)**

துறையினர் அடுத்தடுத்து நீதி மன்றில் முன்னிலைப் படுத்தினார்கள். அச் சமயம் இருந்த நீதிவான் மனிதாபிமானம் மிக்கவர். அவர் 'காவல்துறையினரை' நோக்கி, உலகில் எத்தனையோ குற்றச்செயல்கள் நடைபெறுகின்றன. அவை எதுவும் உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா? இந்த ஏழை மக்கள் தமது மெய்யை வருத்தி தமது மனைவி, பிள்ளைகளின் ஜீவனோபாயத்துக்காக செய்யும் இந்த அற்ப வருமானம் தரும் தொழில்தான் உங்களுக்கு தவறாக பட்டதா? இந்த ஏழைகள் மீது குற்றம் சுமத்துவதையும் தண்டிக்க விழைவதையும் உடன் நிறுத்துங்கள் என்றார். அவர்களும் தமது தவறை நிறுத்திக்கொண்டனர்.

மற்றொரு பகுதியினர் விவசாயம் செய்ய முதலீடு இல்லாமையாலும் வெள்ளம் புயல் வரட்சி காரணமாகவும் விவசாய செய்கையை விட்டு கூலித் தொழிலுக்கு செல்கின்றார்கள். கூலித்தொழில் தினமும் கிடைப்பதில்லை. போதிய சம்பளம் கிடைப்பதில்லை. சம்பளம் கிடைக்கும் நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் குடும்ப அங்கத்தவர்கள் இரவு பட்டினியுடனேயே தூங்க நேரிடுகின்றது.

உலகளாவிய ரீதியில் பார்த்தாலும் ஆசியாவில் மட்டும் மூன்றில் இரண்டு பங்கினர் பசியால் வாடுகிறார்கள். உலக சனத்தொகையின் ஒன்பதில் ஒரு பங்கினர் பசியால் வாடுகின்றார்கள். அது 805 மில்லியன் மக்கள் தொகையை குறிக்கும். இன்னும் கூறப்போனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட 13.5 வீதத்தினர் பசியாலும் சத்துணவின்றியும் வாடுகின்றார்கள். இவையெல்லாம் குழந்தைகளின் ஆரோக்கியம், வளர்ச்சி, கல்வி, எதிர்காலம் ஆகிய அனைத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் விடயங்களாக உள்ளன.

இனி ஆபிரிக்காவை எடுத்தால் 23 மில்லியன் குழந்தைகள் பசியுடன் பாடசாலை செல்கின்றார்கள். அவர்கள் எப்படி கல்வியில் கவனம் செலுத்த இயலும்? சத்துணவின்றி நோய்வாய்ப்படும் பட்சத்தில் அவர்களால் எப்படி தொடர்ந்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்?

சத்துணவு கிடைக்க பெறாமையால் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் பாதிப்பேர் ஒவ்வொரு வருடமும் இறக்கிறார்கள். எப்பேற்பட்ட பரிதாபம் என்பதை பாருங்கள்!

உலகின் மிகக் கொடிய நோய்களான 'எயிட்ஸ்', 'மலேரியா', 'கான்சர்' போன்றவற்றால் இறப்பவர்களைக் காட்டிலும் பசியால் இறப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. இது பெரும் அதிர்ச்சி அளிக்கும் விடயமே அல்லவா?

எத்தியோப்பியா, சோமாலியா, கென்யா ஆகிய நாடுகளில் வறட்சி காரணமாக பயிர்கள் மட்டுமன்றி கால்நடைகளும் பெருமளவில் இழக்கப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் அரசாங்கங்கள் பசிக்கெதிராக பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. சீரற்ற சந்தை நிலைவரம் காரணமாக விலையேற் றத்தை தவிர்க்க முடியா திருப்பதால் மக்கள் பெரும் பணம் கொடுத்து சத்துணவு வாங்குவதை தவிர்த்து மலிவான சத்தில்லாத உணவை உட்கொள்கிறார்கள்.

அதுமட்டுமன்றி உணவுப் பொருட்கள் கப்பலிலும் உள்ளூரிலும் பெருமளவில் பழுதடையும் நிலையையும் தவிர்க்க முடியாதுள்ளது. அண்மையில் தம்புள்ளை சந்தை நிர்வாகிகள் பல்லாயிரம் கிலோ புத்தம் புதிய பாவனைக்குகந்த மரக்கறிகளை காட்டு யானைகளுக்கு தீனியாக கொடுக்க வேண்டி ஏற்பட்டதாகவும் அதற்கு காரணம் புதுவருடத்தை முன்னிட்டு தொடர்ச்சியாக வந்த விடுமுறைகளே என்றும் குற்றம் சுமத்தினர். அதே சமயம் புதுவருட நாட்களில் சந்தையில் மரக்கறிகளின் விலை 100ரூபா முதல் 120 ரூபாவுக்கு குறையாமல் இருந்தது.

யுத்தம் நடைபெறும் நாடுகளில் இராணுவம் ஒரு பிரதேசத்தை சுற்றிவளைத்து அங்கு வாழும் மக்களுக்கு உணவும் நீரும் கிடைக்காமல் பட்டினி போடுவதன் மூலம் பாரம்பரிய நிலப் பிரதேசங்களில் இருந்து அவர்களை விரட்டியடிப்பதை ஒரு யுத்த தந்திரமாக செய்தனர்.

யுத்தம் நிமித்தமே எமது தமிழ் சமூகம் அநாதரவான நிலைக்கு உட்பட்டு பசி என்ற கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. தமது வயிற்றை கழுவுவதற்காக அவர்கள் விறகு வெட்டியும் சிறுதோட்டம் செய்தும் கஷ்டப்படுகிறார்கள். அதை விட பரிதாபமான விடயம் யாதெனில் அநாதரவான பெண்கள் தம்மையும் தமது குழந்தைகளையும் பசி என்ற அரக்கனிடம் இருந்து. காப்பாற்றுவதற்காக தமது மானத்தையும் விற்க முன்வருவது தான்.



எமது நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்த முன்வந்த பெண்களுக்கு இந்த கொடுமைநடக்கும் அதேசமயம் புலம் பெயர்ந்த எம்மவர் ஆடம்பரத்தின் உச்சத்தில் வாழ்கை நடாத்துவதுதான் பொறுக்கமுடியாததாக உள்ளது!

---

# "கடந்து போகவும் கற்றுக்கொள்"

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

**நேற்றிரவின்** அமைதியில் உறங்கிப் போவதற்காய் மின் விளக்குகளை அணைத்த பின் கட்டிலில் சாய்ந்து கொண்டேன். இருள் மெதுவாய் கண்ணுக்குப் பழகிய பின் இருளையும் ஊடுருவிப்பார்க்க முடிந்தது. இருளின் இருளை மனதும் நுகர்வதாய் உணரத் தொடங்கினேன். எங்கும் இருள் எதிலும் இருள். இருண்ட காற்றும் சுவாசத்தினூடே உடலினுட் சென்று உயிர் வரை இருளை உணர்த்திற்று. என்றுமே இருளை நான் இவ்வளவு அருகாமையில் ரசிக்கவில்லையோ என்று எண்ணுமளவிற்கு அந்த அனுபவம் அமைந்திருந்தது. தொடுகைக்கு அப்பாற்பட்டதாய் இருள் இருப்பினும் கூட இருளை மனதால் நுகரமுடிந்தது.

கட்டிலில் சாய்ந்திருந்த படியே இருளைப் பார்த்திருந்தேன். ஏதேதோ எண்ணங்கள் வந்து போயின. அழகான காட்சிகள் தொடக்கம் அசிங்கமான நினைவுகள் வரை இருள் எனக்குள் மிகுதியாய் இருக்கும் நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தது. நான் கடந்திருக்கும் 46 வருடங்களில் இடங்கள், மனிதர்கள், நாடுகள் என்று தொடங்கி காதல், வாழ்க்கை, குழந்தைகள், வீட்டுக்கு வீடு வாசற்படிப் பிரச்சனைகள் என்று அனைத்தையும் கடந்த களைப்பில் கட்டிலில் படுத்திருப்பது போலிருந்தது.

மனதின் அயர்ச்சி என்பது உடலின் அயர்ச்சி போன்றதன்று.



உடலின் அயர்ச்சியை உணவும், இளைப்பாறுதலும் போக்கிவிடுகிறது. ஆனால் மனதின் அயர்ச்சியை கடந்து செல்வதென்பது அவ்வளவு எளிதானதன்று. சாண் ஏற முழம் சறுக்கும் விதியின் விசித்திரமான விளையாட்டு அது. ஆண்டுகள் பல கடந்த பின்பும் மன அயர்ச்சியை கடக்காதவர்கள் பலர் இருக்கிறார்கள்.

"கடந்து போகவும் கற்றுக் கொள்". அதன் உள்ளர்த்தத்தின் வீரியம் எத்தகையது என்பதை அதை அனுபவித்தால் மட்டுமே உணரமுடிகிறது.

கடந்து போவது என்பது இலகுவானது அன்று. பிரஞ்ஞை பூர்வமாக சுயவிமர்சனத்துடன் இறந்த காலங்களை கடந்து கொள்வதே புத்திசாலித்தனமாக இருக்கும் என்பது எனது கருத்து. கடந்து வந்த காலத்தை கடந்து கொள்ள அசாத்திய மனத்துணிவும், மனத்திடமும் வேண்டும்.

காலம் என்பது எம்முடன் எப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பது போலவே உணர்கிறேன். கடந்த காலத்தின் சில செயல்கள், எச்சங்கள், நினைவுகள், உறவுகள் என்று பலவும் ஒரு மெல்லிய நூலைப் போன்று வாழ்க்கைக்காலம் முழுவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அவை சுவையானதாயும் சுமையானதாயும் இருக்கும். வாழ்க்கை முடியும் போது அந் நூலும் அறுந்து போகிறது.

இலங்கையில் நான் இருந்த காலங்களில் ஒரு வயதான பெண் ஒருவர் இருந்தார். அவருக்கும் கணவருக்கும் பல பல ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுவார்த்தை அற்றுப்போயிருந்தது. ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். கணவருக்கு நேரத்துக்கு உணவு, தேநீர் கொடுப்பார். அவர் சாய்மனைக்கதிரையில் இருந்தபடியே பத்திரிகையை மேலிருந்து கீழாகவும் பின்பு கீழிருந்து மேலாகவும் படித்துக் கொண்டிருப்பார். அவர்களின் குழந்தைகள் மணமுடித்து வெளியேறி இருந்தனர். இருவரும் நேருக்கு நேர் சந்திப்பதையும் தவிர்த்தார்கள்.

ஒரு நாள் அவரிடம் என்ன பிரச்சனை உங்களுக்கிடையில் என்றேன். இவை விளங்கும் காலம் உனக்கும் வரலாம், இப்போது புரியாது என்றார். ஒன்றும் புரியாது நின்றிருந்தேன் நான். ஆனால் தற்போது அவர் பேச்சின் ஆழம் புரியும் ஞானம் கிடைத்திருக்கிறது. அவரும் அவரின் மனைவியும் அந் நாட்களில் தனது கடந்த காலத்தைக் கடந்துகொள்ள முடியாது தடுமாறிக்கொண்டிருந்தார்கள் என்பது இப்போது தான் புரிகிறது.

**"திறன் அல்ல தன் – பிறர் செய்யினும், நோ நொந்து, அறன் அல்ல செய்யாமை நன்று"**

எம்மில் எத்தனைபேர் இந்தக் குறளின் அர்த்தம் உணர்ந்து வாழ்கிறோம். பலரும் கடந்த காலத்தை ஈரமான துணிமூட்டை போன்று காலமெல்லாம் தோளில் சுமந்து திரிகிறோம். அதை உலர்த்தி வாழ்வின் பாரத்தை குறைத்துக்கொள்ளும் நோக்கமற்று. "கடந்து போகவும் கற்றுக் கொள்" என்பது இலகு, அதை கடந்து போவது என்பது கடினம். அறையின் இருட்டினூடே இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். தூரத்தே வெளிச்சமாய் ஏதோ தெரிவது போலிருந்தாலும் அது கானல் நீராயிருக்குமோ என்றும் அஞ்சவேண்டியிருக்கிறது. நானும் மனிதனல்லவா.

இன்றைய நாள் நல்லதாயும் இருக்கலாம்

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# அன்புடன் கூடிய இறைவணக்கம் அதிஸ்டம் தரவல்லதா?

கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மிகவும் முக்கியமான நாளாகும். ஏனைய நாட்களில் ஆலயத்திற்குச் சென்று திருப்பலி யில் பங்கு கொள்வதைவிட ஞாயிற்றுக் கிழமை திருப்பலியில் கட்டாயம் கலந்து கொள்ளல் வேண்டும். அதைவிட கடன் திருநாட்கள் என்று கூறப்படும் முக்கிய விசேட நாட்களிலும் அவர்கள் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொள்ளல் வேண்டும். இவை கிறிஸ்தர்களுக்கான பொது விதிகளாகும்.

அவ்வாறே ஏனைய மதத்தினரும் தத்தமது வணக்கஸ்தலங்களுக்குச் சென்று அங்கு இடம்பெறும் ஆராதனைகளில் கலந்து கொள்வது வழமை.

ஆனால் சிலர் தங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் மாத்திரமே தங்களுக்குரிய வணக்கஸ் தலங்களுக்குச் செல்வார்கள். சிலர் அறவே ஆலயங்களுக்குள் கால் வைக்கமாட்டார்கள். என்ன நடக்கின்றதோ அது நடக்கட்டும், என்று எந்தவித கவலையும் இன்றி இருந்து விடுவார்கள். அவர்களின் அதிஸ்டமோ என்னவோ அப்படிப்பட்டவர்களுக்கு மிகப் பாரிய பிரச்சினைகள் வந்தாலும் அவர்கள் எப்படியோ சமாளித்துக் கொள்வார்கள்.

இறைவனுக்கு பயந்து வாழ்வதால் எதையும் தீர யோசித்து செயல்படுவது மாத்திரமன்றி சிறிய விடயத்தைக் கூட பெரிது படுத்தி ஊரிலுள்ள எல்லா ஆலயங்களுக்கும் சென்று வழிபடுவார்கள். யாதும் குறை குற்றமிருப்பின் அதிக பணம் செலவழித்து பரிகாரமும் செய்வார்கள்.

மத நம்பிக்கை இன்று எங்கும் வியாபித்துள்ளது. மதம் மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய ஒன்றாகும். மத கோட்பாடுகளை நேர்மையாகவும், உறுதியாகவும் கடைப்பிடிப்பவர்களின் வாழ்க்கை மிகச் சுமூகமாக கழிவதை நாம் கண்டுள்ளோம். எந்தவொரு சமயமும் தீயவைகளைப் பின்பற்றும் படி போதிப்பதில்லை. நல்ல விடயங்களை மாத்திரம் அவை எடுத்துக் கூறினாலும், சிலர் அவற்றைப் பின்பற்றாது ஆசைகளுக்காக மன்னிக்க முடியாத தவறுகளைப் புரிவதை இன்று சமூகத்தில் காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் பல பிள்ளைகள் தங்களைப் பெற்றெடுத்தவர்களையே கொலை செய்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கஹவத்தையில் தன்னைப் பெற்றெடுத்த சொந்த தாயையே 18 வயது நிரம்பிய பையன் தனது கையால் கொன்றுள்ளான். மற்றும் பூண்டுலோயாவில் மகன், தாயையும் தன் சகோதரியையும் கொலை செய்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான பாரிய குற்றச் செயல்கள் நாடளாவிய மற்றும் உலகளாவிய ரீதியிலும் பரவலாக இடம்பெற்று வருவது சகஜமாகி விட்டன.

அதேவேளை பெற்றோரை தம் தெய்வமாக எண்ணி வரும் பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

தோமஸ் ஒரு கிறிஸ்த குடும்பத்தைச் சார்ந்தவன் அக்குடும்பம் கடும் சமயப்போக்கை கடைப்பிடிக்கும் ஒரு குடும்பம். மூன்று வேளை உணவை மறந்தாலும் சமய சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்களே. பெற்றோர் கடும் சமயப்போக்கை கொண்டவர்களாக இருந்தால் இனிப் பிள்ளையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்.

தோமஸ் பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை. வட மாகாணத்தில் இடம்பெற்ற யுத்த சுழல் காரணமாக அக்குடும்பத்தின் வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாக மாறியிருந்தது. படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட மோதலில் பல குடும்பங்கள் சின்னா பின்னமாகியன. பலர் தமது உறவுகளை இழந்தனர். தோமஸ் கூட அன்று தன் பெற்றோருக்கு என்ன நிகழ்ந்தது என இன்று வரை தெரியாமலுள்ளான். பெற்றோரைத் தேடுவதா? தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதா எனும் கேள்வி அங்கு தோமசுக்கு மாத்திரம் இருக்கவில்லை, அச்சூழலில் வாழ்ந்த பலருக்கும் இருந்தன. “எங்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை நீங்கள் எங்கேனும் ஓடித் தப்புங்கள்” என்று கூறிய பெற்றோர்களும் அன்று யுத்த பூமியில் இருந்தனர். உங்களை விட்டு எங்களால் செல்ல முடியாது என கூறிய பிள்ளைகளும் அன்று இருந்தனர்.

இருசாராரின் கடும் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது கால் போன போக்கில் ஓடியதால் தோமஸ் தனது பெற்றோரை அன்று தொலைத்திருந்தான். அவர்களைத் தேடி நியாயம் கேட்டு இராணுவத்தினரிடம் போய் அவர்களின் கையில் அகப்பட்டால் அதோ கதிதான் என்பதால் அவனால் மேற்கொண்டு எதுவும் செய்யமுடியவில்லை. மிகுந்த கவலையடைந்த தோமஸ் கால்நடையாக வவுனியாவிலுள்ள தன் தாய்மாமன் வீட்டுக்குச் சென்றான்.

தோமஸ் தனது தாய்மாமனிடம் நடந்த சகல விடயங்களையும் கூறி அழுதான். அவன் பட்ட துன்பங்களை கேட்ட அவனுடைய மாமனார் அவனை தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார். அவர் ஓர் நாட்கூலி வேலையாளி. கிடைக்கும் தொழிலை செய்து கொண்டு கஞ்சியோ கூலோ குடித்து வருவார். மாமனின் குடும்ப நிலையை கண்ணுற்ற தோமஸ் அவருக்கு பாரமாக இருக்கவிரும்பவில்லை. அவனுக்கு என்ன வேலை தெரியுமோ அந்த வேலையை செய்து கொண்டு மாமனுக்கு உதவியாக இருந்து வந்தான். இருப்பினும் பெற்றோரின் பிரிவை எண்ணி கலங்கிய வண்ணமே இருந்தான்.

தன் கலக்கத்தைப் போக்க அருகிலிருந்த மாதா கோவிலுக்கு தினமும் சென்று அங்குள்ள நாளாந்த கடமைகளை புரிவதற்கு பங்குத் தந்தைக்கு உதவியாக இருந்து வந்தான். அப்பகுதியில் எவரிடமும் இல்லாத பக்தி தோமஸிடம் இருப்பதைக் கண்டு பங்குத் தந்தை கூட அவனிடம் அன்பாக இருந்து வந்தார். அவன் மேல் எழுந்த அபரிமிதமான நம்பிக்கையின் பால் ஆலயத்திலுள்ள சில பொறுப்புக்களை அவனிடம் வழங்கி இருந்தார் பங்குத்தந்தை அவர்கள்.

இத்தாலி சென்று சமய உயர்கல்வி யைப் பெறுதற்காக வடமாகாண மேற்றாணியாண்டகை யினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேர்முகப் பரீட்சையில் வவுனியா மாதா கோவில் பங்குத்தந்தையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

சுமார் 6 மாத கால பயணத்தை மேற்கொண்ட அப் பங்குத்தந்தைக்குப் பதிலாக அக்கோவிலை பராமரிக்கும் நிமித்தம் இன்னு மொரு குருவானவர் மேற்றாணியாண்டகை யினால் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கும் கூட தோமஸில் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது.

தோமஸ் ஆலயத்தில் பணிபுரிவதால் தன் மனக் கவலைகளிலிருந்து விடுபட்டு நிம்மதி வாழ்க்கைக்குத் திரும்பினான்.

ஆறு மாதகாலம் கழித்து நாடு திரும்பிய பங்குத்தந்தை தன் பங்கு மக்களுடனான ஒன்றுகூடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். தான் இத்தாலியில் கற்றுக் கொண்ட சில முக்கிய விடயங்கள் குறித்து அறிவுரை வழங்கியதுடன், அங்கு தன் அனுபவம் குறித்தும் பகிர்ந்து கொண்டார். 'பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் போசனத்தின் போது சிறார்களுக்கு பல்வேறு பரிசில்களை வழங்கினார். ஆனால் தோமஸிற்கு மட்டும் அங்குள்ள பிரபல்யமான ஆலயமொன்றில் பணிபுரிவதற்கான விசா மற்றும் பயண ஆவணங்களை அவனுக்கு பரிசாக கொடுத்தார்.

அதிஸ்டம் எம்மை wish பண்ணும் போது அதை அன்புடன் kiss பண்ண வேண்டுமே தவிர எக்காரணம் கொண்டும் அதை miss பண்ணக் கூடாது.

**– பாலையூற்றான் –**



இப்படியும் நடக்கலாம்

## கற்பழிக்கப்பட்ட கன்னியாஸ்திரி

தென்னாப்பிரிகாவில் உள்ள சேக்கர்ட் ஹார்ட் கான்வெண்ட்டுக்குள், ஆஸ்திரியா நாட்டை சேர்ந்த கன்னியாஸ்திரிகள் சிலர் தங்கியிருந்தனர். இங்கு கடந்த 19ம் திகதி நுழைந்த மர்ம கும்பல் ஒன்று, தூங்கிக் கொண்டிருந்த கெர்ட்ரட்டியபென்பேச்சர் (86) என்ற கன்னியாஸ்திரி யின் கை, கால்களை கட்டிப் போட்டு அவரை கற்பழித்து கொலை செய்த அந்த கும்பல், அங்கிருந்த பணத்தையும் கொள்ளையடித்து சென்றுள்ளது.



## ஒருவருடன் இருவர் டேடிங்

அவுஸ்திரேலியாவில் லூசி-ஆனா, சினிகியூ (28) என்ற பிளாஸ்டிக் சர்ஜரிக்காக ஒரு கோடிக்கும் அதிகமாக செலவழித்து பிரபலமான இரட்டை சகோதரிகள் இருவரும், தற்போது ஒரே வாலிபரை காதலித்து திருமணம் செய்ய உள்ளனர். மேலும் காதலருடன் ஒரே படுக்கையை பகிர்ந்து கொள்ளும் இரட்டையர் இருவரும், கடந்த காலத்தின் தனி தனி காதலுடன் டேட்டிங் செய்ததாகவும், தற்போது ஒரே ஆணுடன் டேட்டிங் செய்வது எளிமையாக இருப்பதாகவும் கூறியுள்ளனர்.



மத்திய அமெரிக்காவில் பேபியன் ஆல்வராடோ என்ற போதைக்கு அடிமையான இவன், ஒரு நாள் முழுபோதையில் இருந்தபோது தன்னை பெற்ற தாய் என கூட பாராமல் அவரை கற்பழித்துள்ளான். இதேபோல் போதை தலைக் கேறும் போதெல்லாம் தன் தாயை கற்பழிப்பதை வாடிக்கையாக கொண்ட இவன், கடந்த 7 ஆண்டுகளாக கற்பழித்துள்ளான். இந்நிலையில் குடும்ப கௌரவம் கருதி, இத்தனை காலமும் இவ்விடயத்தை மூடி மறைத்து வந்த தாய், அவனது அத்துமீறல் எல்லை கடந்து போனதால் காவல்துறையினரிடம் புகார் அளித்ததை அடுத்து அவனை கைது செய்துள்ளனர்.

## ஆண்களுக்கு சமம் பெண்களும்

கலிபோர்னியாவில் உள்ள கடற்கரை நகரம் ஒன்றை சேர்ந்த பெண்கள், தாங்களும் ஆண்களை போல் மேலாடையின்றி சூரிய குளியிலில் ஈடுபட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த கோரிக்கையை ஆலோசித்த லாஸ் ஏஞ்சல்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவின் பல பகுதிகள் உட்பட உலகின் பல இடங்களில் மேலாடை இல்லாமல் சூரிய குளியல் செய்ய அனுமதி உள்ளது. எனவே ஆண்களுக் குச்சமமாக இனி இங்குள்ள பெண்களும் மேலாடை இல்லாமல் சூரிய குளியல் செய்ய உரிமையுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாதனையாளர்களுக்கும் இடமில்லை



பிரித்தானியாவ ல் Nicholson (36), பிறப்பில் ஆணான இவர், உடல் வளர்ச்சியின் காரணமாக திருநங்கையாக மாறினார். திருநங்கையாக இருந்த போதிலும், சமுதாயத்தில் தனக்கென ஒரு இடத்தை உருவாக்கி கொள்ள சதுரங்க விளையாட்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கடந்த 2010ம் ஆண்டு பிரித்தானியாவில், தேசிய அளவில் சாம்பியனாகவும், உலக அளவில் நடந்த போட்டியில் 2014 ஆம் ஆண்டு வரை உலக சாம்பியன்களில் 4-வது இடத்தையும் வகித்து வந்துள்ளார்.

இருப்பினும், அவர் திருநங்கை என்பதால் இழிவுச்சொற்களுக்கு ஆளாகியுள்ளார். இதனால் மனதளவில் பெரும் கவலையுற்ற அவர், ரயிலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரின் தோழி, உலக அளவில் சாதனை செய்த ஒரு சாம்பியனை உடலமைப்பை காரணமாக வைத்து உயிரை பறித்ததற்கு இந்த சமுதாயம் தான் பொறுப்பேற்க வேண்டும் என வேதனையுடன் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டிப்படைக்கும் நிழல்

அரசியல் அலசல்

– –கே.சஞ்சயன்– –

- www.tamilmirror.lk -

# மகிந்த ராஜபக்ஷவின் நிழல் தான் இப்போது அரசாங்கத்துக்குப் பெரிதும் நெருக்கடியைக் கொடுத்து வருகின்றது

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், இலங்கையில் எதிர்பாராத பல மாற்றங்கள் இடம்பெற்றன. அத்தகைய மாற்றங்கள் அனைத்தும் அப்போதைய எதிர்க்கட்சிக் கூட்டணியால் திட்டமிடப்பட்டதற்கமையவே நடந்தேறின. அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும், நாடாளுமன்றத்தில் குறைந்தபட்ச பெரும்பான்மை பலத்தில் பாதியைக் கூடக் கொண்டிராத ஐ.தே.க. வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். ஐ.தே.க. வும் ஆளும் கட்சியில் இருந்து பிரிந்து வந்தவர்களும் இணைந்து அமைச்சரவையில் இடம்பிடித்துக் கொண்டனர். அதற்குப் பின்னரும், மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க கூட்டணி எதிர்பார்த்தவாறே நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் பல இலங்கை அரசியலுக்குப் புதிய அனுபவங்களாகவே இருந்தன.

ஏனென்றால், நடைமுறைச் சாத்திய மற்றதாக கருதப்பட்ட பல விடயங்கள், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடந்தேறியிருந்தன. புதிய அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டம் கடந்த புதன்கிழமையுடன் முடிவடைந்துள்ள நிலையில், இப்போது கொழும்பு அரசியல் களத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் அனைத்துமே, அரசாங்கத்தின் கைகளை மீறியதாகவே உள்ளன.

கடந்த ஜனவரி மாதம் எப்படி ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன கூட்டுக்கு சாதகமாக இருந்ததோ, இப்போது அதற்கு நேர்மாறாக - தற்போதைய எதிர்க்கட்சிக்கு சார்பானதாக மாறியிருக்கிறது. அதாவது, முன்னர் ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் திட்டமிட்டவை தான் நடந்தேறின. ஆனால், இப்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நிற்கும் தரப்புகள் எதனைத் திட்டமிட்டனவோ அதுவே நிகழ்ந்தேறி வருகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தாலும் கூட, அவரது கையை மீறியே எல்லாம் நடந்து வருகிறது. உண்மையில் இந்தக் கட்சிகளின் தலைவர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வெறும் பெயரளவுக்குத் தான் கூறிக் கொள்ள முடிகிறது. இந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற மாகாணசபை உறுப்பினர்களில் பலரும், மஹிந்த ராஜபக்ஷவின் கைப்பொம்மையாகவே இருக்கின்றனர். அங்கிருந்து கொடுக்கப்படும் கட்டளைகளுக்கு அமையவே அவர்கள் ஆட்டம் போடுகின்றனர்.

எனவே தான், 100 நாள் செயற்திட்டத்தின் முற்பகுதி எவ்வாறு அரசாங்கத்துக்கு சார்பானதாக அதன் நிகழ்ச்சி நிரலுக்கேற்றவாறு அமைந்திருந்ததோ, 100 நாள் செயற்றிட்டத்தின் இறுதிப் பகுதி எதிர்க்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இடம்பெற்றது என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை.

100 நாள் செயற்றிட்டத்தின் முற்பகுதி மிக முக்கியமான மாற்றங்கள் எதையும் கொண்டதாக அமைந்திருக்கவில்லை. இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடியதும் குறுகிய காலத்துக்குள் செயற்படுத்தக் கூடியதுமான விடயங்களைத் தான் முற்பகுதி கொண்டிருந்தது. அவற்றை நிறைவேற்றிக் கொள்வதில் அரசாங்கம் சிக்கல்களையோ, பிரச்சினைகளையோ அதிகம் எதிர்நோக்கி இருக்கவில்லை. ஆனால், மிக முக்கியமான மாற்றங்களைக் கொண்ட 100 நாள் செயற்றிட்டத்தின் இறுதிப் பகுதியை நிறைவேற்றுவதில் தற்போதைய அரசாங்கம் இதுவரையில் தோல்வி கண்டுள்ளது என்பதே உண்மை.

குறிப்பாக, சுதந்திரமான நீதிச்சேவை, பொதுச்சேவை, ஆணைக் குழுக்களை அமைத்தல், தேர்தல் முறை மாற்றம், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல், அரசியலமைப்புத் திருத்தம் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் இதுவரையில் வெற்றியைப் பெறவில்லை. 19ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோதிலும், அது நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி இருந்து வருகிறது. இந்த அரசாங்கம் பதவியேற்றபோது, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி விட்டு நாடாளுமன்றத்தை 100 நாட்களின் முடிவில் கலைத்து தேர்தல் நடத்துவோம் என்பது முக்கியமானது. ஆனால், கடந்த புதன்கிழமையுடன் 100 நாட்களை நிறைவு செய்து விட்ட அரசாங்கம், 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிராத ஓர் அரசாங்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்பது குதிரைக் கொம்பான விடயமே. ஆனாலும், 19ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்க்கட்சியின் துணையுடன் நிறைவேற்ற முடியும் என்றே அரசாங்கம் நம்பியிருந்தது.

குறிப்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவமும் சந்திரிகா குமாரதுங்கவின் பின்புலமும் இதற்குத் துணையாக இருக்கும் என்று கணக்கும் போட்டிருந்தது ஐ.தே.க. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளைக் கொண்டிருந்தாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவோ, வழிநடத்தவோ முடியாத நிலைதான் உள்ளது. இது ஐ.தே.க. – மைத்திரிபால சிறிசேன கூட்டு அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள் தவறிப் போவதற்கு முக்கியமான காரணமாகும். மஹிந்த ராஜபக்ஷ என்ற வலுவானதொரு சக்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளேயும் ஆதிக்கம் செலுத்தி வருவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ள முக்கியமான சவாலாக இருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் நிழல்தான் இப்போது அரசாங்கத்துக்குப் பெரிதும் நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிழல், அரசாங்கத்தைச் செயற்பட விடாமல் ஒரு செயலற்ற நிலைக்குள் தள்ளி விட்டதாகவே உணரப்படுகிறது. கடந்த 20ஆம் திகதியும் 21ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் 19ஆவது திருத்தச் சட்டத்தை விவாதத்ததுக்கு எடுத்துக் கொள்வது என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட போதிலும், அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று அதனைச் செய்ய முடியாது போனது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்த விவகாரத்தை முன்னிலைப்படுத்தி நடாத்தப்பட்ட போராட்டங்கள், 19ஆவது திருத்தச் சட்டத்தை விவாதிக்க முடியாத நிலைக்குக் கொண்டு சென்றது. எங்கே சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்பு, இந்த விசாரணை விவகாரத்தை வைத்து, 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்து விட்டது.

முன்னதாக, 19ஆவது திருத்தச் சட்டத்தை இரண்டு நாட்களும் விவாதித்து, வாக்கெடுப்பை பிற்போடுவது என்றும் குறுகிய காலத்துக்குள் 20ஆவது திருத்தச் சட்டமூலமாக தேர்தல் முறை மாற்றத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ செயற்படவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அவ்வாறு செயற்பட விடாமல் தடுத்திருப்பது மஹிந்த ராஜபக்ஷவின் நிழல் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுமோ என்ற கவலை எதிர்க்கட்சிக்கு உள்ளது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ இப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை. ஏனென்றால், இப்போதைய நிலையில் தேர்தல் நடந்தால், சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயமாக பிளவு படும். மஹிந்த ராஜபக்ஷவின் பக்கத்தில் ஒரு தரப்பும், மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் இன்னொரு தரப்புமாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரிந்து போய் நிற்கின்றனர். அதைவிட, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கப்படாது போனால், வேறொரு கட்சியின் மூலம் தான் அவர் போட்டியிட நேரிடும்.

அவ்வாறு போட்டியிட்டால், பிரதமர் பதவியைக் கைப்பற்ற முடியாது. ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் பிளவுபடும் நிலையில், தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்தல் நடத்தப்பட்டால், குறைந்தளவு ஆசனங்களையே அவரது அணியால் பெற முடியும். இதனால் தான், மீண்டும் தொகுதி வாரி தேர்தல் முறையுடன் இணைந்த புதிய கலப்பு தேர்தல் முறை ஒன்றை அறிமுகப்படுத்தி விட்டு தேர்தலை நடத்தலாம் என்று எதிர்பார்க்கிறது சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டு. 19ஆவது திருத்தச்சட்டத்துடன், தேர்தல் முறை மாற்றத்தையும் கொண்டு வந்தால் அதனை ஆதரிக்கத் தயார் என்று கூறியது எதிர்க்கட்சி. தேர்தல் முறை மாற்றத்துக்கு பொது இணக்கப்பாடு எட்டப்படாத நிலையிலும், அது குறித்து ஆராய போதிய காலஅவகாசம் தேவைப்படுகின்ற நிலையிலும், 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற விடாமல் தடுப்பது எதிர்க் கட்சியின் உத்தியாக உள்ளது.

19ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால், அது ஐ.தே.க. வுக்கு சாதகமாகவும் தமக்குப் பாதகமாகவும் அமைந்து விடலாம் என்று எதிர்க்கட்சி கருதுகிறது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை, தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் இருக்கின்ற நிலையில், அதுவரை இந்த அரசாங்கத்தை செயலற்ற நிலைக்குள் வைத்திருப்பதன் மூலம் நிறையவே சாதிக்கலாம் என்பதே மஹிந்த ராஜபக்ஷ தரப்பின் முக்கிய இலக்காக தெரிகிறது, அதாவது இந்த அரசாங்கம், மூன்று மாத காலத்துக்குள் பல எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளது. சில பொருளாதாரச் சலுகைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களை தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு அளித்திருந்தாலும் பிரதான வாக்குறுகளை நிறைவேற்றும் விடயத்தில் மக்களின் ஏமாற்றத்தையே சம்பாதித்துள்ளது. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது இருந்த கவர்ச்சியை இப்போதே இழந்து விட்டுள்ளது. இதேநிலை அடுத்த ஆண்டு வரை நீடித்தால். அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி அலை ஒன்று உருவாகும்.



முக்கியமாக, தற்போது திறைசேரியில் போதிய நிதி கையிருப்பில் இல்லை. இதற்கு மேலதிக நிதியை திரட்டுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியையும், எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் தோற்கடித்து விட்டது. இந்தநிலையில், தற்போதைய அரசாங்கத்தினால், நாட்டை சிறப்பாக கொண்டு நடத்த முடியாத நிலை ஒன்று விரைவில் உருவாகும். நாடு கிட்டத்தட்ட செயலற்ற நிலைக்குத் தள்ளப்படும் போது, மக்கள் தாமாகவே அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்குவர். அத்தகைய தொருநிலை ஏற்படுவதை எதிர்க்கட்சி விரும்புகிறது. அதற்கு, அடுத்த ஆண்டுவரை பொறுத்திருக்க வேண்டும். அதற்கிடையில், மஹிந்த ராஜபக்ஷவும் தனது அரசியல் துறவறத்தை முடித்துக் கொண்டு திரும்ப முடியும். அப்போது, கடுமையானதொரு போட்டியைக் கொடுத்து ஆட்சியைப் பிடிக்கலாம் என்பதே, மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த அரசாங்கத்தை விழவும் விடாமல், அதேவேளை, முன்நோக்கி நகரவும் விடாமல், முடக்கி வைத்திருப்பது தான் இவர்களின் திட்டம். அந்த திட்டம் கிட்டத்தட்ட வெற்றிகரமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 19ஆவது திருத்தச்சட்டம் மீதான விவாதம் பிற்போடப்பட்டது, நாடாளுமன்றம் வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது எல்லாமே அதனைத் தான் எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நிலையில், 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சி விடப் போவதில்லை என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றாகவே புரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில், அவர்கள், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தப் போகின்றனரா அல்லது மீண்டும் எதிர்க்கட்சியின் தயவுக்காக அதன் பின்னால் இழுபடப் பார்க்கின்றனரா என்று தெரியவில்லை.

தற்போதைய அரசாங்கம் என்னதான், எதிர்க்கட்சியின் காலில் விழுந்தாலும் கூட, தற்போதைய அரசாங்கத்தின் இலக்குகள் நிறைவேற்றப்படுவதை மஹிந்த ராஜபக்ஷவின் நிழல் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதை மட்டும் உறுதியாக கூறிக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி


## பாடம் : கணிதம்

01. கடைகளில் விற்கப்பட்ட மீன் நிரப்பு அட்டைகளின் எண்ணிக்கைகள் வருமாறு 9, 11, 17, 18, 13. இத்தரவின் இடையம் யாது?

02. தரவுத் தொகுதி ஒன்றில் உண்மை இடை உத்தேச இடையில் இருந்து (-7.5) என்னும் பெறுமானத்தால் விலகி இருந்தது. உத்தேச இடை 77.5 எனின், உண்மை இடை யாது?

03. முதல் உறுப்பு 8 ஆகவும், பொது விகிதம் 2 ஆகவும் உள்ள ஒரு பெருக்கல் விருத்தியின் 25ஆம் உறுப்பை 2இன் ஒரு வலுவாகக் காட்டுக.

04. A, B என்னும் இரு பாத்திரங்களில் உள்ள நீர்க் கனவளவுகள் உருவில் காணப்படுகின்றன. அவ்விரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகள் சமமாக இருப்பதற்கு A யிலிருந்து Bயிற்கு ஊற்றப்பட வேண்டிய நீர்க் கனவளவு யாது?




**பகுதி 02**

01. I. அ. சுருக்குக $\frac{1}{S-C} - \frac{1}{S}$

ஆ. $a + b + c = 2S$ எனின்,

$$\frac{1}{S-a} + \frac{1}{S-b} - \frac{1}{S-c} - \frac{1}{S} = \frac{abc}{S(S-a)(S-b)(S-c)}$$ எனக் காட்டுக

இ. $a = -2, b = 3, c = -4, S = 5$ எனின், $\frac{abc}{S(S-a)(S-b)(S-c)}$ இன் பெறுமானம் யாது?

II. சுட்டி பற்றிய அறிகை கொண்டு இரு சமன்பாடுகளைப் பெற்று தீர்க்க.

$2^x = 8^{y+1}, \; 9^y = 3^{x-9}$

## பாடம் : வரலாறு

1. இங்கிலாந்தில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி ஆரம்ப காலத்தில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கு பரவாமைக்குக் காரணம் யாது?
   1. ஐரோப்பாவில் ஏனைய நாடுகளுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே தொடர்புகள் நலிந்த மட்டத்தில் இருத்தல்
   2. இங்கிலாந்து அதன் சொந்த உற்பத்திப் பொருட்களை வெளி உலகத்திற்கு திறந்திருக்காமை
   3. ஐரோப்பாவின் பல நாடுகள் குடியேற்றங்களை ஏற்படுத்தும் போட்டியில் ஈடுபட்டமையால் கைத்தொழிலின் மயமாக்கத்தில் கவனஞ்செலுத்தாமை
   4. ஐரோப்பாவில் பல நாடுகள் பொருளாதார ரீதியில் மூடிய கொள்கையை பின்பற்றியமை

2. போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தமது அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியின் போது கையாண்ட உத்தி பின்வருவனவற்றில் யாது?
   1. கொனப்பு பண்டாரவை அரசராக்குதல்
   2. தமது கட்டுப்பாட்டின் கீழ் குசமாசன தேவிக்கு முடிசூட்டுல்
   3. கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்
   4. கண்டி பிக்குகளின் உதவியைப் பெறுதல்

3. இறுதி இராப்போசனம் என்ற உலக பிரசித்தி பெற்ற ஓவியத்தை உருவாக்கியவர் யார்? 1. ரபியல் 2. டான்றே 3. லியனாடோ டாவின்சி 4. பொற்றி செல்வி

4. கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடல், அரச குடும்பத்தின் கனவுகளுக்கு பலன் சொல்லல், அரச குடும்பத்துக்கு தேவையான சமையல் காரியங்களை முன்னெடுத்தல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய சாதியினர்?
   1. பிராமணர் 2. சத்திரியர் 3. வைஷிகர் 4. சூத்திரர்

5. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் போர் வாசகம் எந்த புரட்சியுடன் தொடர்பு பட்டது?
   1. அமெரிக்கப் புரட்சி 2. பிரென்ஞ்சுப் புரட்சி 3. ஆங்கிலப் புரட்சி
   4. லூசியப்புரட்சி

6. 2ம் உலக மகா யுத்த காலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட அரசியல் சீர்திருத்தமானது?
   1. டொனமூர் சீர்திருத்தம் 2. கோல்புருக் சீர்திருத்தம்
   3. சோல்பரி சீர்திருத்தம் 4. குருமக்கலம் சீர்திருத்தம்

## பாடம் : விஞ்ஞானம்

01. சுகதேகி ஆன ஒருவருடைய சிறுநீரில் பின்வரும் எக்கூறுகள் இருக்கும்?
   1. யூரியா, குளுக்கோசு கொழுப்பமிலங்கள், நீர்
   2. யூரியா, யூரிக்கமிலம், நீர், உப்புகள்
   3. யூரியா, குளுக்கோசு, நீர், உப்புகள்
   4. யூரியா, காபனீரொட்சைட்டு, நீர், உப்புகள்

02. பூக்கும் தாவரங்களின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் கருக்கட்டற் செயன்முறையின் போது நடைபெறுவது யாது?
   1. பூவின் குறியின் மீது மகரந்த மணிகள் விழுதல்
   2. குறியின் மீது விழுந்த மகரந்த மணிகள் முளைத்தல்
   3. வளர்ச்சியடைந்த மகரந்தக் குழாய் முளையப்பையினுள் புகதல்
   4. ஆண்கரு, பெண்கருவுடன் இணைதல்


03. சுற்றாடலில் உள்ள இறந்த சேதனப் பொருள்களை பிரிகையுறச் செய்யும் அங்கிகளுக்கு வழங்கும் பெயர்?
   1. தாவர உண்ணிகள் 2. ஒட்டுண்ணிகள் 3. உற்பத்தியாக்கிகள்
   4. பிரிகையாக்கிகள்

04. மாசடைந்த வளியை உட்சுவாசிக்கும் போது ஏற்படத்தக்க நோய் நிலைமை யாது?
   1. சுவாசப்பை குழாயழற்சி 2. ஈரலழற்சி
   3. இரைப்பையழற்சி 4. சிறுநீரகவழற்சி

05. ஒட்சிசன் ஏற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும் நாளம் எது?
   1. முற்பக்க பெருநாளம் 2. பிற்பக்க பெருநாளம்
   3. சுவாச நாளம் 4. ஈரல்வாயி நாளம்

06. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுள் சிலிக்கன் பொசுபரஸ் குளோரின் ஆகியவை அடக்கப்பட்டுள்ள பொருட்களை முறையே குறிப்பது?
   1. கணிப்பான் தீக்குச்சி, பற்பசை 2. விமானம், மின்குமிழ், கண்ணாடி
   3. கடிகாரம், தீக்குச்சி, உலர்கலம் 4. பசளை, தீக்குச்சி, பற்பசை

07. அங்கிகளின் இயற்கைப் பாகுபாடானது அவற்றின்,
   1. அமைப்பு ஒற்றுமையைக் காட்டும்
   2. கூர்ப்பு ஒற்றுமையைக் காட்டும்
   3. இனப்பெருக்க ஒற்றுமையை காட்டும்.
   4. உணவுத் தொடர்புகளைக் காட்டும்




08. தளவாடியொன்றின் மீது ஒளிக்கதிர் ஒன்று பட்டுத் தெறிக்கும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இங்கு தெறி கோணத்தின் பெறுமானம் என்ன?
   1. 50பாகை 2. 100பாகை 3. 90 பாகை 4. 80பாகை

09. காரீயம், வைரம் ஆகிய காபன்கள்
   1. சமதானிகளாகும் 2. பிறதிருப்ப டிவங்களாகும்
   3. சேர்வைகளாகும் 4. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**எழுத்தியல்.**

எழுத்து என்பது அடிப்படையில் மொழிக்கு (சொல்லுக்கு) முதற்காரணமாகிய ஒலிகளையும் அவ்வொலிகளுக்கான வரி வடிவத்தையும் குறிப்பதாகும்.

**எழுத்தின் வகைகள்.**

தமிழ்மொழியில் வழங்கும் அடிப்படை ஒலிகளை முதல் எழுத்து என்றும் அடிப்படை ஒலிகளாக அமையாது அவற்றை சார்ந்து அமையும் ஒலிகளைச் சார்பெழுத்து என்றும் கூறுவார்.

**முதலெழுத்து.**

முதலெழுத்துக்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்து என இரு வகைப்படும். தமிழில் 12 உயிரெழுத்துக்களும், 18 மெய்யெழுத்துக்களும் வழங்குகின்றன.

**உயிரெழுத்துக்கள்.**

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்கும் வல்லமை உடையவையாகையால் உயிரெழுத்துக்கள் எனப்பட்டன. இவை ஆவி எனவும் பெயர் பெறும்.

**மெய்யெழுத்துக்கள்.**

ககரம் முதலிய பதினெட்டும் உயிரின்றி இயங்கா உடல்போலவே தாமாக இயங்கும் வன்மை அற்றனவாகையால் மெய்யெழுத்துக்கள் எனப்பட்டன. இவை உடல், உடம்பு, ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும். மெய்யெழுத்துக்களை அவற்றின் ஒலிப்பின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துவார்.

1. வல்லினம் (வலிய ஒலிப்புடையவை) ---- க், ச், ட், த் ப், ற்
   இவை வன்கணம் என்றும் வலி என்றும் பெயர்பெறும்.
2. மெல்லினம் (மெல்லிய ஒலிப்புடையவை) — ங், ஞ், ண், ந், ம், ன்
   இவை மென்கணம் என்றும் மெலி என்றும் பெயர்பெறும்.
3. இடையினம் (இடைப்பட்ட ஒலிப்புடையவை) — ய், ர், ல், வ், ழ், ள்
   இவை இடைக்கணம் என்றும் பெயர் பெறும்.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: **Match A with B and make meaningful sentences.**

| A | B |
|---|---|
| a) If you leave now | 1) We will catch the 6 O' clock train. |
| b) Jaya will pass the exam | 2) Unless he works hard. |
| c) If you had lots of money | 3) I would travel round the world. |
| d) If you had know the answer | 4) I would have told you. |
| e) You would feel healthier | 5) If you did more exercise. |

Ex 02: **Re write this paragraph using past tense.**

My father goes to Colombo today. He travels by bus. He goes with my sister. My sister works at a private hospital. They leave home at about 9.00 O' clock in the morning. They take their lunch about 2.00 O' clock. They reach Colombo by 3.00 O' clock. My father will come back at night. We wait for them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 17

01. வாகனங்களை நிறுத்தி வைக்கும் போது ஒளிர வேண்டிய விளக்கு
i. மஞ்சள் ii. சிவப்பு iii. பச்சை iv. நீலம்

02. வேடுவரின் வழிபாட்டு நடனம்
i. குச்சிப்புடி ii. பொம்மலாட்டம் iii. கதக் iv. கிரிகொரங்க

03. கப்பல்களைத் கடலில் தரித்து நிற்க உதவுவது
i. நங்கூரம் ii. பிக்காசோ iii. சம்மட்டி iv. சவள்

04. பாற்பற்களின் எண்ணிக்கை
i. 32 ii. 20 iii. 22 iv. 18

05. குயில் அதிகமாக ஒலி எழுப்பும் மாதம்
i. ஜனவரி ii. பெப்ரவரி iii. மார்ச் iv. ஏப்ரல்

06. சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோள்
i. புதன் ii. வெள்ளி iii. செவ்வாய் iv. வியாழன்

07. நிலத்தைத் தோண்டி முட்டையிடும் பறவை
i. கிவி ii. எமு iii. தீக்கோழி iv. கினிக்கோழி

08. நீந்தத் தெரியாத மிருகம்
i. யானை ii. மாடு iii. ஒட்டகம் iv. நாய்

09. குறிஞ்சிப்பூவின் நிறம்
i. சிவப்பு ii. மஞ்சள் iii. ஊதா iv. வெள்ளை

10. கழுத்தில் பிடித்துதூக்க வேண்டிய பிராணி
i. வாத்து ii. முயல் iii. பல்லி iv. கோழி

11. எதிரிகளைக் கண்டவுடன் தனது உடலைச்சுருட்டிக்கொள்ளும் பிராணி
i. தேள் ii. ஆமடில்லா iii. கவரக்கொய்யா iv. ஓணான்

12. மீன்கள் தாம் செல்லும் திசையை மாற்ற பயன்படுத்தும் உறுப்பு
I. குதச்செட்டை ii. வாற்செட்டை iii. முதுகுச்செட்டை
iv. வயிற்றுச்செட்டை

13. வாற் பேத்தையின்முதிர்பருவம்
I. வண்ணாத்துப்பூச்சி ii. தவளை iii. ஓணான் iv. பல்லி

**பகுதி 02**

01. மு.ப 7.15 இற்கு தையல் வகுப்பொன்று மு.ப 11.00 மணிக்கு முடிவுற்றது. எனின் வகுப்பு நடைபெற்ற நேரம்?

..............................................................................

02. குமார் நாவல் ஒன்றில் 865வது பக்கம் தொடக்கம் 983 பக்கம் வரை வாசித்தான் எனின் அவன் வாசித்து முடித்த பக்கங்கள் எத்தனை?

..............................................................................

03. ஒரு மணித்தியாலத்தில் 50Km வேகத்தில் பயணம் செய்யும் பேருந்து ஒன்று நகரம் A யிலிருந்து நகரம் B யிற்குச் செல்ல 4 மணித்தியாலயம் 30 நிமிடம் எடுக்குமெனின் இரு நகரங்களுக்கும் இடையிலான தூரம்?

..............................................................................

04. சரியான விடையின் கீழ் கோடிடுக
அ. கற்றாளையின் உள்ளீட்டுப் பொருள் (சுளை, சதை, சோறு, அரிசி)

ஆ. நெல், கடுகு முதலியவற்றின் வித்து (விதை, கொட்டை, அரிசி, மணி)

05. 1Kg 250g தேயிலையின் விலை ரூ.75.00 ஆகும் எனின் 750g தேயிலையின் விலை? ..............................

06. 9900 இல் இருந்து 91ஐக் கழிக்க வரும் பெறுமானம்? ....................................

07. 8989 உடன் 201ஐக் கூட்டும் போது கிடைக்கும் பெறுமானம்?

..............................................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு



குட்டிக்கதை



## தோட்டக்காரனும் குரங்கும்

அது ஒரு அழகிய கிராமம். அந்த கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் தோட்டத்தில் உள்ள செடி கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வந்தான். அவன் தண்ணீர் ஊற்றும் போதெல்லாம் அங்கு சில



குரங்குகள் வந்து விளையாடும்.

பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனும் குரங்கும் நண்பர்களாயிருந்தன. தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அப்படியே செய்து வந்தன.


ஒரு முறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. குரங்குகளை அழைத்து விஷயத்தைச் சொன்னான்.

குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால், அவற்றுக்கு ஒரு பிரச்சினை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

அது ஒண்ணும் பெரிய பிரச்சினைய இல்லை. வேர் பெரியதாக இருந்தால் கொஞ்சமா தண்ணீர், ஊத்துங்க என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக் காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. என்னாச்சு என்றான் தோட்டக்காரன்.

வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க்கிறதுக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம் என்றன குரங்குகள்.



– புத்தியில்லாதவர்களிடம் பொறுப்பைக் கொடுப்பது, புத்தியில்லாத செயல் –

## எனது கிராமம்




எனது கிராம் மிகவும் அழகானது. வயல வெளிகளும், வாழைத் தோட்டங்களும், பப்பாசித் தோட்டங்களும் நிறைந்து பச்சைப் பசேலென காட்சியளிக்கும் எனது கிராமமான தம்பலகாமம். நானும் எனது குடும்பத்தினரும் பாடசாலை விடுமுறை தினங்களில் அங்கு சென்று வருவது வழமை.

இயற்கை எழில் கொஞ்சும் திருகோணமலையில் இன்னுமொரு தான்தோன்றீஸ்வரமாக திகழும் ஆதி கோணநாயகர் கோவில் இங்கு அமைந்து ள்ளது. மிகவும் உயரமான கோபுரத்துடன் நாம், தமிழர்களைப் போல நிமிர்ந்து நிற்பது அவ்வரலாற்று சிறப்பு மிக்க ஆலயம் ஆகும்.

சுத்தமான காற்றும், தாகத்திற்கு நல் இனிய இளநீரும், சிறார்களாகிய எமக்கு இன்னும் இன்னும் பிடிக்கக் கூடியதுமான என் கிராமமே எனக்குப் பிடித்தமான இடமாகும்.


*வீ.மிருளினி*
*தரம் - 09,*

**சிந்திக்க .. ..**
முதல் குற்றத்தை சரி என்று சாதிப்பவன் இரண்டாவது குற்றத்தையும் செய்தவனாகின்றான்:



*மா.குணரஞ்சன்*
*தரம் - 08*

*ஜெசிக்கா.ம, அன்புவழிபுரம்*



## பொது அறிவு - 19

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. ஒரு வணிகத்தின் வெற்றிக்காக பணியாற்றும் முக்கிய பணியாளர் யார்?
முகாமையாளர்

02. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய முள்ளந்தண்டாக இருப்பது எது?
கைத்தொழில்

03. ஈபிள் கோபுரத்தின் உயரம் எவ்வளவு? 1063அடி

04. ∴பேஸ்புக் பாவனையில் முதலிடம் வகிக்கும் நாடு எது? இந்தியா

05. 2015ம் ஆண்டு உலக வர்த்தக கண்காட்சி எங்கே நண்பெறவுள்ளது?
இத்தாலியின், மிலன்

06. மனிதனின் மூளையின் எடை எவ்வளவு? 1.5 கி.கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌர்ணமி நிகழ்வு "மேடை ஒன்று - நிகழ்வு மூன்று"

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தப்பட்ட மாபெரும் கலை இலக்கிய நிகழ்வுமேடை ஒன்று - நிகழ்வு மூன்று பௌர்ணமி கலை நிகழ்வின் விசேட தொடர் அமர்வு -11 கடந்த சனிக்கிழமை (18.04.2015) மாலை 1.30 அளவில் மட்டக்களப்பிலுள்ள மாநகரசபை நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் இலக்கிய நிகழ்வின் ஓரம்சமாக டென்மார்க் எழுத்தாளர் ஜீவகுமாரனின் மூன்று நூல்களின் அறிமுகம் இடம்பெற்றது. நிகழ்வுக்கு தலைமைதாங்கிய பேராசிரியர் சி.மௌனகுரு, எழுத்தாளர் ஜீவகுமாரன், மகுடம் கலை இலக்கிய வட்ட தலைவரும், மகுடம் காலா ண்டிதழின் ஆசிரியருமான கவிஞர் வி. மைக்கல் கொலின், நிகழ்வின் முதன்மை அதிதி மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் திரு. மா.உதயகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் எழுத்தாளர் ஜீவகுமாரனின் மூன்று நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இந்நிகழ்வின் போது வரவேற்புரை கவிஞர் வி. மைக்கல் கொலின் (தலைவர்-மகுடம் கலை இலக்கிய வட்டம்) அவர்களால் ஆற்றப்பட்டது.





## காந்திநகர் ஆலய உற்சவம்

-சேனையூர் நிருபர்-

திருக்கோணமலை காந்திநகர் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா எதிர்வரும் மன்மத வருடம் சித்திரை 13ம் நாள் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து வரும் 10 தினங்களும் அம்பாளுக்கு விசேட பூசைகள் இடம்பெறும்.

அத்துடன் 10வது தினமாகிய 05.05.2015 அன்று கும்பாபிசேக தினம் ஆதலால் ஆலய தீர்த்தக் கிணற்றுக்கு அம்பாள் எழுந்தருளி தீர்த் தோற்சபமும் அதனைத் தொடர்ந்து அன்புவழிபுரம் தில்லையம்பலம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து அடியார்களால் பால்குடம் பவனி இடம் பெற்று 10 மணியளவில் அஸ்டோத்திர சத சங்காபிசேகம் இடம் பெற்று மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானமும் இடம் பெறும்.

## திருக்கோணேஸ்வர பெருமானின் திருவிழா

திருகோணமலையில் அமைந்து ள்ள மிகவும் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரப் பெருமானின் பதினைந்து நாட் திருவிழா சிறப்பாக முடிவுற்றுள்ளது.

03.04.2015 அன்று கொடியேற்ற த்துடன ஆரம்பமான எம்பெருமானின் திருவிழாவின் போது 19.04.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மணியளவில் கோணேஸ்வரப் பெருமான் மாதுமை அம்பாள் சகிதம் தனக்கென அமைந்த தேர்மீதேறி பவனி வரும் விழா இடம்பெற்றது. இதன் போது அடியார்கள் அடியலித்தும், அங்கப்பிரதட்சனை செய்தும் தங்கள் நேர்த்திக் கடன்களை செலுத்தினர். அத்துடன் சிறார்களினது பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து இம் மஹோற்சவ த்தின் தீர்த்த திருவிழா 20.04.2015 திங்கட்கிழமை காலை 7.30 மணியள வில் பாபநாச தீர்த்த சுனையில் இடம்பெற்றது. மாதுமை அம்பாள் சமேத கோணேஸ்வர பெருமான் பக்தர்கள் படை சூழ தீர்த்தசுனைக்கு எழுந்தருளி பின்னர் சிவாச்சாரியார்கள் தீர்த்த உற்சவத்திற் கான கிரியைகளை மேற்கொண்டதன் பின்னர், பக்தர்கள் தீர்த்த மாடினர். இதைத்தொடர்ந்து கோணேசப் பெருமானுக்கு விசேட பூஜை இடம்பெற்றது. புதன்கிழமை தெப்பத் திரு விழாவுடன் எம்பெருமானி ன் வருடாந்த மகோற்சவம் இனிதே நிறைவு பெற்றது.







# சிறு கதைகள் மீதான ஓர் பார்வை

மக்கள் முரசு

பழந்தமிழ்ப் பண்டிதர்கள் பெரும்பாலும் சிறுகதைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவைகளை அவர்கள் இலக்கியம் என்று கூட எண்ணுவதில்லை. புதிதாக வெளிவரும் சிறுகதைகளை அவர்கள் படிப்பதுகூட இல்லை. சிறுகதைகள் எழுதுவோரை அவர்கள் பரிகாசக் கண்ணோடுதான் பார்த்து வந்தனர். சிறுகதைகளை அலட்சியம் செய்துவந்த காலம் இன்று மலையேறிவிட்டது. அவைகள் இலக்கியச் சோலையிலே வளர்ந்து நிலை பெற்று வருகின்றன. சிறுகதைகளை அலட்சியம் செய்தவர்கள் கூட இன்று அவைகளைப் படிக்க ஆர்வமுடன் முன் வருகின்றனர். இலக்கியப் பத்திரிகைகளிலே சிறுகதைப் பகுதி முதன்மையிடம் பெற்றுவிட்டது. நாம் இருக்கும் இக்காலத்தைச் "சிறுகதையுகம்" என்று சொன்னால் இதை மறுப்போர் இல்லை.

மக்கள் மனப்போக்கை ஒட்டி வளர்வதே இலக்கியம். மக்கள் மனப்போக்கும், நடையுடைகளும் காலப்போக்கில் மாற்றம் அடைந்து வருவதைக் காண்கின்றோம். இதற்கு ஏற்றாற்போலவே இலக்கிய அமைப்பும் மாறிக் கொண்டுதான் வருகின்றது. இத்தகைய மாற்றந்தான் வளர்ச்சியாகும். மாற்றம் இன்றேல் வளர்ச்சியில்லை மாற்றமும் வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை.



சிறுகதைகளைப் படிப்பதிலே, எல்லாப் பகுதி மக்களுக்கும் ஆர்வம் இருக்கிறது. எழுத்தாளர்கள் பலரும் சிறுகதைகள் எழுதுவதிலே அக்கறை காட்டுகின்றனர். இப்பொழுது பத்திரிகைகள் மூலம் வீசிக்கொண்டிருக்கும் சிறுகதைத் தென்றல் தான் புதிய எழுத்தாளர்கள் பலரை எழுதத் தூண்டுகிறது. சிறப்பாக இளைஞர்கள் பலரை எழுத்துத் துறையிலே இழுப்பதற்குச் சிறுகதைகள்தாம் காரணம் என்று கூடச் சொல்லி விடலாம். இவ்வாறு, படிப்பதற்கும், எழுதுவதற்கும், சிறுகதைகள் உற்சாகம் ஊட்டுகின்றன என்பதில் ஐயமில்லை.

சிறுகதைகளை மிகுதியாகப் படிக்கின்ற இளைஞர்களிலே பலர் தாமும் சிறுகதைகள் எழுதவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். ஆரம்பத்தில் தங்கள் உள்ளத்தில் தோன்றும் கற்பனைகளை வைத்துக்கொண்டு கதைகள் எழுதுகின்றனர். அல்லது தாங்கள் படித்த கதைகளில் அங்கொன்றும் இங்கொன்றும் அள்ளியெடுத்து ஒன்று சேர்த்து கதை உருவாக்குகின்றனர். அவைகள் பத்திரிகைகளில் வெளிவர வேண்டுமென்று விரும்புகின்றனர். இத்தகைய ஆரம்ப எழுத்தாளர்களிலே பலர் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக ஆகி விடுகின்றனர். ஆசையும், முயற்சியும், அறிவையும், ஆற்றலையும் வளர்க்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஒரு நிகழ்ச்சியை மட்டும் படிப்போர் உள்ளத்திலே பதியும்படி கூறுவதுதான் சிறுகதை என்று பொதுவாகக் கூறுகின்றனர். சிறுகதை என்பது ஒரே பக்கத்திலும் அமையலாம். ஐம்பது பக்கங்களிலும்கூட அமையலாம். நிகழ்ச்சி மட்டும் ஒன்றே ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால் சிறுகதைகளுக்கு இலட்சியம் உண்டு என்பதே மறுப்பதற்கில்லை.

சிறுகதை கேட்கும் ஆர்வம் சிறுகதை எழுதும் ஆசை இவை நமது நாட்டிலும் பண்டைக்காலத்தில் இருந்தன. மேல்நாட்டினர் சிறுகதையை ஒரு தனிக்கலையாக இலக்கியமாக வளர்த்திருக்கின்றனர். நமது நாட்டில் அப்படியில்லை. நமது முன்னோர்கள் பெருங்கதைகளோடு சிறுகதை இணைத்துக் கூறினர். கருத்தை விளக்குவதற்கே சிறுகதைகளைக் கையாண்டனர். சிற்சில சிறுகதைத் தொகுதிகளையும் எழுதி வைத்திருக்கின்றனர்.

மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றிலே பல சிறுகதைகள் உண்டு. ஆனால் இவைகள் பெருங்கதைகளோடு தொடர்பு கொண்டவை. இவற்றைக் கிளைக்கதைகள் என்பர் இத்தகைய கிளைக் கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நீதியை -அல்லது கருத்தை வலியுறுத்தவே கூறப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர எழுதாமல் சொல்வழக்கில் வழங்கும் சிறுகதைகள் பலவுண்டு. இக்கதைகளை இன்றும் நமது பாட்டிமார்களும் பாட்டன்மார்களும் சொல்லக் கேட்கலாம். இவ்வாறு வழங்கும் சிறுகதைகளை பாட்டிக்கதைகள் எனலாம்.

இன்று எழுதப்படும் சிறுகதைகளும் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால்தான் அவைகள் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் இலக்கிய வரிசையிலே இடம் பெறும். இவ்வுண்மையை மறவாத சிறுகதை எழுத்தாளர்களே உண்மையில் தங்கள் இலக்கியப் படைப்பின் மூலம் பொதுமக்கள் வாழ்வுக்கு வழிகாட்டிகளாகவும் இருப்பார்கள்.

இன்றைய இலக்கியப் படைப்பாளர்கள் பழமையை அடியோடு வெறுக்காமல் அங்கேயும் சென்று கொஞ்சம் நிதானித்துப் பார்க்க வேண்டும். எழுத்தாளன் என்பவன், தான் இருக்கும் நாட்டையும், தன்னைச் சூழ்ந்திருக்கும் மக்களையும் மறந்து விடுவானாயின் அவனையும் மக்கள் மறந்து விடுவார்கள். இந்த உண்மையை மறவாத எழுத்தாளர்களே மக்கள் மனதில் குடியேறுவார்கள். தம்மைச்சுற்றியுள்ள மக்கள் நிலையை தூய கண்களுடன் பார்க்கும் எழுத்தாளர்கள் எழுதுகிற சிறுகதைகளே சிறந்த இலக்கியங்களாக விளங்கும் என்பது கண்கூடு.

--தன்யா --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100நாள் வேலை...

தலைவர் திரு. சம்பந்தன் தெரிவித்துள்ள வேளையில் இந்நூறு நாட்களிலும் தமிழர்கள் திருப்பதிப்படக்கூடிய வகையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எவையும் புதிய அரசினால் முன்னெடுக்கப்படவில்லை என்ற கருத்தை கூட்டமைப்பின் உறுப்பினரும், புளொட் தலைவருமான திரு. சித்தார்த்தன் வெளியிட்டுள்ளார்.

திரு. சம்பந்தன் தெரிவிக்கையில் ''நாட்டை சனநாயக ரீதியாக முன்னேற்றமடையச் செய்வதற்கும், மக்களின் இறைமையை மீட்டெடுப்பதற்கும், சர்வாதிகாரத்தை வலுப்படுத்தும் நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமையை நீக்குவதற்கும், நீதித்துறையைப் பலப்படுத்து-வதற்குமான செயற்றிட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு அவை முன்னெடுக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் போர் நிறைவடைந்ததன் பின்னரும் தொடர்ச்சியாக முகங்கொடுத்துவரும் பிரச்சினைகளான காணி அபகரிப்பு, காணமல்போனார் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை, மீள்குடியேற்றம், விதவைப் பெண்களின் அபிவிருத்தி உள்ளிட்ட அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முதற்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன'' என்றார்.

அதேவேளை அதற்கு முற்றிலும் மாறான கருத்தை வெளியிட்டு திரு. சித்தார்த்தன் தெரிவிக்கையில் "கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் இணைந்து ஆட்சி மாற்றத்தை வேண்டி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்து புதிய ஆட்சியமைக்க பெரும் உதவியாக இருந்துள்ளனர். குறிப்பாக கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளின் வெளிப்பாடாகவே மக்கள் மாற்றத்தை வேண்டியிருந்தனர். இதனை ஜனாதிபதித் தேர்தலிலும் வெளிப்படுத்தி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்தனர். இதனால் புதிய ஆட்சியொன்றும் அமைக்கப்பட்டது. அத்தோடு பல்வேறு நம்பிக்கைகளின் அடிப்படையில் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்திருந்தனர். இந்நிலையில், ஆட்சியமைத்த புதிய அரசும் நூறுநாள் திட்டம் என்று கூறி மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. இதில் தென்னிலங்கை மக்களுக்கு அரசாங்கம் பலதைச் செய்திருந்தாலும் தமிழ் மக்களுக்கு பெரிதாக எதனையுமே செய்யவில்லை" எனத் தெரிவித்து-ள்ளார்.

## மேதினப் பேர.....

நோக்கிச் செல்லும் என்றும் அங்கு தொழிலாளர் பிரகடனங்களும் தொழிற்சங்கத் தலைவர்களின் உரைகளும் நிகழும் என பிரதான ஏற்பாட்டாளரான மலைமுரசின் பிரதம ஆசிரியர் தெரிவித்தார்.

அனைவரும் இப் பேரணியிற் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## காணாமல்...

நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்-பினர்கள் உளவியல் பாதிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்-கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் ஆலோசனைகளை வழங்கவும் 80 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ம் திகதி தூதரக அதிகாரிகளுடன் இவ்விடயம் குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர்....

அலுவலகம் வரை சென்றதுடன் அங்கு நகரசபைத் தலைவர் திரு.செல்வராசாவின் கொடும்பா-வியும் எரிக்கப்பட்டது.

அதேவேளை நகரசபையின் செயலாளருக்கு எதிராகவும் கடும் குரலெழுப்பி தொழிலாளர்கள் அவரைப் பணத்திற்கு விலைபோனவர் எனத் தெரிவித்த பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

22ம் திகதி தொடங்கிய இப்போராட்டம் 23ம் திகதியும் தொடர்ந்ததை அடுத்து மாகாண முதலமைச்சரின் தலையீட்டுடன் 23ம் திகதி மாலை குறித்த போராட்டமானது எதிர்வரும் 30ம் திகதி வரை ஒத்திவைக்கப்படுவதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

20வருடங்களாகப் பணியாற்றும் தொழிலாளருக்கு பதவித் தரம் 1ஐ வழங்குமாறும் சந்தை மேற்பார்வை-யாளராகத் திடீரென நியமனம் பெற்ற திரு.விபூசிதன் என்பவரின் நியமன-த்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரியுமே இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரண்டாவது நாளாகவும் தொடர்ந்த தொழிலாளரின் போராட்டத்தினால் கடும் அழுத்தங்களுக்குள்ளாகிய நகரசபை தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை எதிர்வரும் 30ம் திகதிக்குள் நிறைவேற்றுவதாக உறுதியளிததுள்ளது.

அவ் உறுதியளிப்புத் தொடர்பாக கருத்தைத் தெரிவித்த திரு.கண்ணன் வழங்கப்பட்ட நியமனத்தை உரியவரிட மிருந்து பதவி விலகல் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு இல்லாமற் செய்வதாகவும் எதிர்வரும் 30ம் திகதிக்கு முன் 4 நியமனங்களையும் 5 உள்ளீர்ப்புக்களையும் செய்வதாக நகரசபைச் செயலாளர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே போராட்டம் ஒத்திவைக்கப்-பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## சம்பூர்....

சம்பூர் மக்களை மீளக்குடி-யேற்றுவதற்கு எதிர்வரும் 30ம் திகதி வரைக்குமான காலக்கெடுவை விதித்திருந்தது.

அதனையடுத்து மீள்குடியேற்றம் தாமதமாகலாம் எனத் தகவல்கள் கசிந்ததை அடுத்து கிழக்கு மாகாண ஆளுனரால் கூட்டப்பட்ட ஊடகவி-யலாளர் சந்திப்பில் மீள்குடியேற்றம் தொடர்பான உத்தேசக் கால அட்டவணையொன்றை அங்கு கையளித்த ஆளுனர் குடியேற்ற நடவடிக்கைகள் எவ்வெத்திகதிகளில் நடைபெறும் என்பதை வெளிப்படுத்-தியிருந்தார். (முன்இணைப்பு)

அதேவேளை கிழக்கிற்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரும் சம்பூர் மக்கள் எதிர்வரும் 30ம் திகதிக்குள் மக்கள் குடியேற்றப்படுவர் என்பதைத் தெரிவித்துச் சென்றிருந்தார்.

எனினும் இன்னும் 5 நாட்கள் உள்ள நிலையில் குடியேற்றுவதற்கான நடவடிக்கை என்ற பெயரில் பதிவுகள் மட்டுமே நடைபெறுவதை அறிய முடிவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக முகாம் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய மலைமுரசின் ஆசிரியர் ஸ்ரீஞானேஸ்வரன் மற்றும் மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் ஆகியோர் குறித்த திகதிக்குள் குடியேற்றம் நடைபெறாவிட்டால் மேமாதம் 5ம் திகதி அடையாளப் போராட்டமொன்றை நடாத்த உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் ஆதரவும் நாடப்-படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாண....

இருந்து வெளிநடப்புச் செய்துள்ளனரே ஒழிய அதனை எதிர்த்து எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

அங்கு விருந்தினர்களாகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா உட்பட மாகாண சபை உறுப்பினர்களான மா.நடராசா, ஞா.கிருஸ்ணபிள்ளை, எம்.இராஜேஸ்வரன் ஆகியோர் நிகழ்வில் இருந்து விளையாட்டுப் போட்டியை விட்டு வெளியேறி யுள்ளனர்.

கிழக்கு மாகாணக் கல்வி, கலை கலாசார அமைச்சின் முதலாவது சுற்று நிருபம் சிங்களத்தில் வெளியானதுடன் அங்கு சிங்களத்திலேயே தேசிய கீதமும் இசைக்கப்படுவதாக கடும் கண்டனங்கள் வெளியாகிவரும் வேளையில் விளையாட்டு விழாவிலும் இவ்வாறு நிகழ்ந்தமை கடும்

## கல்வி அ...

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது "கிழக்கு மாகாணத்தில் தேசிய அரசு அமைக்கப்ப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால், முதன் முதலில் வெளியிடப்பட்ட கல்வி நிர்வாகம் சம்மந்தப்பட்ட சுற்று நிருபம், தனிச்சிங்களத்தில் வெளியிடப்பட்டமை அவநம்பிக்கையை எம்மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

சிங்களவர் ஒருவர் கல்வியமைச்சராக இருந்த காலத்திலும் கூட, சுற்றுநிருபங்கள் தமிழ் மொழியிலேயே வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இவ்விடயம் சம்மந்தமாகக் கல்வியமைச்சர் தனது பொறுப்பை உணர்ந்து கொள்ளாமல் அரச அதிகாரியாகப் பதிலளிப்பது வேதனைக்குரியதே. எனவே 80 வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் நிர்வாக மொழி எதுவென்பதனை, எமக்குக் கல்வியமைச்சர் தெளிவுபடுத்த வேண்டியது, அவசியமாகும்.

மேலும் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே தேசிய கீதம், தமிழரால் தமிழ் மொழியிலும் சிங்களவரால், சிங்கள மொழியிலும், பாடப்பட்டு வருகின்றது. ,ருந்த போதும், புதிய அரசாங்கம், நல்லாட்சியின் வெளிப்பாடாகத் தமிழ்ப் பிரதேசங்களில், தமிழில் பாடலாம் என மீள வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் தமிழர் ஒருவர் கல்வியமைச்சராக விளங்கும் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில், கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் பாடப்பட்டு தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றது.

எனவே கௌரவ அமைச்சர் அவர்களே, தாங்கள் முன்னால் அரச சேவையாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் சேவையாளர் என்பதை நிரூபிக்கும் கடப்பாடு தங்களிடம் உள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும். அத்தோடு நிரந்தரச் செயலாளர் ஒருவரைத் தமிழ் பேசும் சமூகத்திலிருந்து தெரிவு செய்வதும், தங்களின் தார்மீகப் பணியாகும். இதனைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 26 மாதங்களின் பின்...

வருமானமாக ரூபா பன்னிரண்டு இலட்சத்துக்கு மேல் பெறப்பட்-டுள்ளதுடன் ஏழு லட்சத்து எழுபத்தியொராயிரம் ரூபாய்களுக்கு செலவு காட்டப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகை வங்கியில் வைப்பாக உள்ளது. செலவினமாகக் காட்டப்பட்ட தொகைக்கான கணக்காய்வுகள் நிகழ்த்தப்படுமா? என்பது பற்றிய தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை

இன்றைய கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தேர்வாகியுள்ளதுடன் புதிய செயலாளராக நேமிநாதனும் இதுவரை காலமும் இச்சங்கத்தின் பொருளாளராகக் கடமையாற்றிய மின்ஹாஜ் என்பவரிடமிருந்து புதிய பொருளாளர் ஒருவரும் கணக்குகளைப் பொறுப்பேற்றுள்ளதாக தெரிய-வந்துள்ளது.

## 100 நாட்களில்....

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மட்டக்-களப்பைச் சேர்ந்த ரகுபதி கனகசூரியம் (வயது 34) சவுதிக்கு சென்று மீண்டும் நாடு திரும்பும் போது ஸ்ரீலங்கா புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தியை அடுத்தே அவர் "இந்த நாட்டிலே தற்போது நல்லாட்சி நடைபெறுகின்றது என்று கூறுகின்றார்கள் ஆனால் கைதுகள் ஏன் தொடர்கின்றன" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணித்தும் வாழும் உயிர்கள்



'அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள். ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள்.' (2:154)

அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்தவர்களை 'அம்வாத்' - 'இறந்தவர்கள்' என்று கூறாதீர்கள். அவர்கள் உயிருடன் இருக்கின்றனர். 'அவர்களுக்கு அல்லாஹ் தனது அருட்கொடையிலிருந்து வழங்கியதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சி அடைந்தவர்களாகவும், தங்களுடன் சேராமல் தங்களுக்குப் பின் (வீர மரணமடையாது உயிருடன்) இருப்பவர்கள் பற்றி 'அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்' என்றும் மகிழ்வுற்றவர்களாகவும் இருக்கின்றார்கள்.'

'அல்லாஹ்விடமிருந்துள்ள அருளைக் கொண்டும், பாக்கியத்தைக் கொண்டும், மேலும் நம்பிக்கையாளர்களின் கூலியை நிச்சயமாக அல்லாஹ் வீணாக்கிவிடமாட்டான் என்பதனாலும் அவர்கள் மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர்.' (3:169-171)

உயிர்த்தியாகிகள் பற்றி இந்த வசனங்கள் பேசுகின்றன. இந்த வசனங்கள் சில விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றன.

- அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்கள் எனஎண்ணாதீர்கள்.
- அவர்கள் தமது இரட்சகனிடத்தில் உயிருடன் உள்ளனர்.
- உணவும் அளிக்கப்படுகின்றனர்.
- அல்லாஹ் தமக்கு வழங்கிய சிறப்பின் காரணமாக மகிழ்வுடன் இருக்கின்றனர்.
- தமக்குப் பின்னர் உயிர்த்தியாகம் செய்து தம்முடன் வந்து சேரக் காத்திருப்பவர்களுக்கும் அச்சமோ, துக்கமோ இல்லை என்பதை அறிந்து நன்மாராயம் பெற்றுள்ளனர்.
- நம்பிக்கை கொண்டோரின் பணிகளுக்கான கூலிகளை அல்லாஹ் வீணாக்கிவிமாட்டான் என்பதை அறிந்து மகிழ்வுடன் உள்ளனர்.


தொடரும் .... - இஸ்லாம்கல்வி -




## கொ.கடலை வடை

**தேவையான பொருட்கள்**

வெள்ளை கொண்டைக்கடலை - ¼ கிலோ, கடலைமாவு - 100 கிராம், வெங்காயம் - 50 கிராம், பச்சைமிளகாய் - 25 கிராம், கொத்தமல்லி இலை - 100 கிராம், கறிவேப்பிலை - 10 கிராம், மிளகாய் தூள் - 25 கிராம், மஞ்சள் தூள் - 5 கிராம், உப்பு - தேவைக்கேற்ப, கரம் மசாலா தூள் - 15 கிராம், சோம்பு - 10 கிராம், சீரகம் - 5 கிராம், எண்ணெய் - ¼ லிட்டர்



**செய்முறை**

கொண்டைக்கடலையை 10 மணி நேரம் ஊற வைத்து, தண்ணீரை வடித்து விட்டுப் பொடித்துக் கொள்ளவும். கடலை மாவுடன், நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாய், கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்க்கவும். மிளகாய் தூள், மஞ்சள் தூள், கரம் மசாலாவும் சேர்க்கவும். சோம்பையும், சீரகத்தையும் வெறுமனே வறுத்து, சிவந்ததும் ஆற வைத்து, கலவையில் சேர்க்கவும்.

தேவைக்கேற்ப உப்பு சேர்த்து எல்லாவற்றையும் கெட்டியாகப் பிசையவும். வடை பதத்துக்கு இருக்க வேண்டும். அதைச் சின்ன சின்ன உருண்டைகளாகப் பிடித்து, தட்டி, தோசைக்கல்லில் எண்ணெய் அல்லது நெய் விட்டு, இரண்டு பக்கங்களும் சிவந்து, முறுகலானதும் எடுக்கவும்.



## கழுத்தின் கறுப்பை நீக்க . . .

முகம் அழகாக இருப்பது எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு கழுத்து அழகாக இருப்பதும் அவசியம்.

**எலுமிச்சை**

தினசரி குளிப்பதற்கு அரை மணி நேரம் முன்பாக கழுத்தின் கருமை பகுதிகளில் எலுமிச்சை சாற்றினை தடவி ஊறவைத்து குளித்தால் கழுத்தின் கருமை மறையும்.

அழகுக் குறிப்பு

**பால்பவுடர் பேக்**

முதலில் ஒவ்வொரு தே.கரண்டி பால் பவுடர், தேன், எலுமிச்சை சாறு எடுத்துக் கொள்ளவும். இதில் அரை தே.கரண்டி பாதாம் எண்ணெய் கலந்து கலந்து பசை போல கலக்கி முகம், கழுத்து பகுதிகளில் தடவி 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி கழுத்தின் கருமை வெகுவாக மறையும்.

**உருளைக்கிழங்கு**

உருளைக்கிழங்கினை தோல் நீக்கி சீவி எடுத்துக்கொள்ளவும். அதை கழுத்துக் கருமை உள்ள பகுதிகளில் தேய்த்து அரை மணிநேரம் கழித்து குளிக்க கருமை படிப்படியாய் மறையும்.

**தக்காளி பேக்**

தக்காளியை நன்றாக மசித்து அதனுடன் சிறிதளவு எலுமிச்சை சாறு கலந்து கழுத்து கருமை பகுதிகளில் பூசவும்.

**ஆரஞ்சு பேக்**

ஆரஞ்சு சுளையை எடுத்து அதனுடன் பன்னீர் அல்லது பால் கலந்து பூசவும். இந்த பேக்கை 15 முதல் 20 நிமிடம் ஊறவைத்து கழுவினால் கழுத்துப்பகுதி பளிச் என மாறும்.



# மருத்துவம்

## முருங்கை மருத்துவ குணமுள்ளது

- ஞாபக மறதியைப் போக்கி நினைவாற்றலைத் தூண்டும் சக்தி முருங்கைப் பூவிற்கு உண்டு.
- முருங்கைப் பூவை நிழலில் உலர்த்தி காயவைத்து பொடி செய்து தேன்கலந்து சாப்பிட்டு வந்தால் வெள்ளெழுத்து மாறும்.
- முற்றிய முருங்கை விதைகளை எடுத்து காய வைத்து லேசாக நெய்யில் வதக்கி பொடியாக்கி பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால், ஆண்மை பெருகும்.
- முருங்கை இலை காம்புகளை தனியாக காய்கறிகளுடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் தலையில் கோர்த்துள்ள நீர்கள் வெளியேறும்.
- முருங்கை பட்டை கட்டினால் வரும் வீக்கத்தை குறைக்கும்.
- முருங்கை வேரை பாலுடன் சேர்த்து அருந்தினால் விக்கல், இரைப்பு, முதுகுவலி நீங்கும்.
- நரம்பு தளர்ச்சிக்கு முருங்கை பூ ஒரு சிறந்த மருந்து.
- முருங்கை காய் சூப் எடுத்துக்கொண்டால் இருமல் மற்றும் தொண்டை வலி, ஓய்வு ,நெஞ்சு நெரிசல் என எல்லாவற்றிற்கும் உதவுகிறது.



உடலில் உள்ள பிரச்சினைகளில் மிக மோசமானதும், சகிக்க முடியாததும் என்றால் அது வாய் துர்நாற்றம் தான். பல் சொத்தை, தீய பழக்க வழக்கங்கள், சரியாக பல் விலக்காதது, வாய் உலர்ந்து போவது மற்றும் வெற்றிலை பாக்கு போடுவது என பலவித காரணங்கள் வாய் துர்நாற்றம் ஏற்படுகிறது.

இதுதவிர சுவாசக்குழாய் பாதிப்பு, நிமோனியா, ப்ராங்கைட்டிஸ் சர்க்கரை நோய், ஈறு நோய், குடல் நோய் மற்றும் சிறுநீரக கோளாறுகளும் காரணமாக இருக்கலாம்.

## வாய்துர்நாற்றத்தால் ஓடி ஒழிகிறீர்களா?!!

- ✓ சாப்பிட்ட பின்னர் நன்றாக உப்பு தண்ணீரில் வாய் கொப்பளிக்கலாம்.
- ✓ புகை பிடிப்பது மற்றும் புகையிலை பொருட்களை தவிர்க்க வேண்டும்.
- ✓ பல்செட் பயன்படுத்தும் நபராக இருப்பின், இரவில் தூங்கும்போது கழற்றி தனியாக ஒரு கப்பில் வைத்து விட வேண்டும்.
- ✓ வாய் துர்நாற்றம் உள்ளவர்கள் கிராம்பை மென்று வாயில் அடக்கிக்கொள்ளலாம்.
- ✓ அரை லிட்டர் நீரில் புதினா சாறு, எலுமிச்சை சாறு ஆகியவற்றைக் கலந்து வாய் கொப்பளிக்கலாம் இதனால் வாய் துர்நாற்றம் நீங்கும்.
- ✓ வாய் துர்நாற்றத்தைப் போக்க எலுமிச்சை சாறுடன் நீர் கலந்து அதில் சிறிதளவு உப்புச் சேர்த்து குடித்து வரலாம். இந்தக் கலவையை வாயிலிட்டு கொப்புளிக்க வாய் துர்நாற்றம் நீங்கும்.
- ✓ கொத்தமல்லிக் கீரையை வாயில் போட்டு மென்றுவர வாய் துர்நாற்றம் நீங்கும்.

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** :பேசும் வார்த்தையின் வசீகரம், புதிய நட்பினை பெற்றுத்தரும். எதிர்ப்பாளர் இடம் மாறுகிற நன்னிலை உருவாகும்.



**ரிஷபம்**:திட்டமிட்ட காரியம் நிறைவேற அதிக பணிபுரிவீர்கள். சொல்லும், செயலும் நேர்த்தியாகும். சமூக நிகழ்வு அனுபவம் தரும்.



**மிதுனம்** : எண்ணமும், செயலும் ஒருங்கிணைந்து வெற்றியை உறுதியாக்கும். பேச்சில் நிதானம் இருக்கும். அரசு சார்ந்த உதவி பெறலாம்.



**கடகம்** :முயற்சி மூலம் கூடுதல் நன்மை கிடைக்கும். கால்நடை வளர்ப்பு, விவசாயம் சிறந்து விளங்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.



**சிம்மம்**: உங்கள் சொல்லை உறவினர், நண்பர் ஏற்றுக்கொள்வர். முயற்சிகளுக்கு உரிய பலன் கிடைக்கும். சிக்கனம் பின்பற்றவும்.



**கன்னி** :அதிர்ஷ்ட தேவதையின் அருள் பார்வை கிடைக்கும். உற்சாக செயலில் முக்கியமான பணி நிறைவேறும். செல்வ வளம் அதிகரிக்கும்.



**துலாம்** :மனதில் புதிய நம்பிக்கை உருவாக்கும். பேசுவதில் நிதானம் நல்லது. உடன்பிறந்தவர், உதவி கேட்டு அணுகுவர். நிலுவைப் பணம் வசூலாகும்.



**விருச்சிகம்** : அறிவுத்திறன் மேம்படும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மங்கலம் உண்டாகும். சொத்தில் பணவரவு அதிகரிக்கும்.



**தனுசு** :சுயலாபம் பெற புகழ்ந்து பேசுபவரிடம் விலகவும். உடன்பிறந்தவர்களை குறை சொல்லி பேச வேண்டாம். வீடு, வாகன பாதுகாப்பில் அதிக கவனம் அவசியம். தகுதிக்கு மீறிய பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது.



**மகரம்** : குடும்பத்தில் ஒற்றுமை மிகுந்திருக்கும். ஆன்மிக வழிபாடு நடத்துவீர்கள். நண்பரால் உதவி கிடைக்கும். எதிர்மறையாக இருந்த செயல், சில நன்மையை தரும்.



**கும்பம்** :சமூக நிகழ்வு இனிய அனுபவம் தரும். எதிர்ப்பாக இருந்த சூழல் விலகும். உடன்பிறந்தவர் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர்.



**மீனம்** :மனக்குழப்பம் தவிர்ப்பதால், குறித்த காலத்தில் பணி நிறைவேறும். நண்பரின் ஆலோசனை, ஊக்கம் தரும். அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்லவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### புதுவருட விளையாட்டுப் போட்டி

கிழக்கு மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான புதுவருட விளையாட்டுப் போட்டிகள் உவர்மலை இளைஞர் விளையாட்டு மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அமைச்சுகளின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இதில் பங்கு கொள்கின்றார்கள். கிழக்கு மாகாண கலாசார திணைக்களமே இவ்விளையாட்டுப் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது.





### வருடாந்த விளையாட்டுப் போட்டி

திருகோணமலை தம்பலகாமம் 98வது மேற்கு கொலனி சிவசக்தி அரசினர் கலவன் பாடசாலையில் வருடாந்த விளையாட்டப் போட்டி கடந்த வியாழன் அன்று அதிபர் செ.ஞானராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தம்பலகாமம் கோட்டக் கல்வி அதிகாரி சீ.மதியழகன் மற்றும் கௌரவ விருந்தினராக ஆரம்ப கல்வி வளவாளர் வி.விஜயச்சந்திரன் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர். இப் போட்டியின் போது மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன. தொடர்ந்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.





### விளையாட்டுப் பொருட்கள் கையளிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் சோபர் விளையாட்டுக்கழகத்தின் உப தலைவருமாகிய ஏ.எஸ்.எம்.உவைஸின் தனிப்பட்ட நிதியிலிருந்து மீனோடைக்கட்டு கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு,

கடந்த வியாழக்கிழமை மீனோடைக்கட்டு கரப்பந்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கோல் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் எம்.ஏ.நபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் சோபர் விளையாட்டுக்கழகத்தின் உப தலைவருமாகிய ஏ.எஸ்.எம்.உவைஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீரர்களுக்கான கிரிக்கெட் மற்றும் கரப்பந்து விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.



### புதுவருட வி.போட்டி – குச்சவெளியில்

– கதிரவன் –

குச்சவெளி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் புதுவருட விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை 25.04.2015 காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியின் போது மரதன், சைக்கிள் ஓட்டம், படகுசவாரி. கிறீஸ்மரம் ஏறுதல், கிடு பின்னுதல் போன்ற பல போட்டிகள் நடத்தப்பட உள்ளது. பல இலட்சக்கணக்கில் செலவழித்தே இப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் வெற்றி பெறும் வீர, வீராங்கனைகளுக்கு பல்வேறு பரிசுப் பொதிகளும் வழங்கப்படவிருக்கின்றது.

### நீச்சல் போட்டி

அம்பாறை மாவட்ட விளையாட்டுப் போட்டியின் முதற்கட்ட நீச்சல் போட்டி, சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுத் தொகுதியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் வீ.ஈஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நீச்சல் போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் இருந்து வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று உகண பிரதேச செயலாளர் பிரிவு முதலாமிடத்தைப் பெற்று சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாமிடத்தை அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவு பெற்றுக்கொண்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள் மாகாணப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### Battle of the Golds இல் பங்குபற்றவுள்ள அணியினர்



16.05.2015 இல் நடைபெறவுள்ள Battle of the Golds போட்டியில் தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அணியினரும் மட்/சிவானந்தா வித்தியாலய அணியினரும் மோதவுள்ளனர்.

### வெண்அணியினர் மீண்டும் தோல்வி

காத்மண்டுவில் நடைபெற்று வரும் 14 வயதுக்குட்பட்ட ஆசிய கால்பந்தாட்ட கூட்டுசம்மேளன தெற்கு மற்றும் மத்திய பிராந்திய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டிகளில் “ஏ” குழுவில் பங்குபற்றும் இலங்கை பெண்கள் அணி மீண்டும் தோல்வி அடைந்துள்ளது. தசரத் விளையாட்டரங்கில் நடைபெற்ற முதல் போட்டியில் இலங்கை பெண்கள் அணியை எதிர்த்தாடிய நேபாள பெண்கள் அணி 6 – 0 என்ற கோல்கள் அடிப்படையில் அமோக வெற்றியீட்டியது.

### இலகுவாக பெற்ற 350 ஓட்டங்கள்



ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிப்பதென்பது சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த காலம் மாறி இன்று 200 அடிப்பது இலகுவான காரியமாகிவிட்டது. இந்நிலையில் இங்கிலாந்து கழக மட்டப் போட்டிகளில் லியாம் லிவிங்ஸ்டன் 350ஓட்டங்களை வெறும் 137 பந்துகளில் அடித்து வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். நண்ட்விச் மற்றும் கல்டி அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற கழக மட்டத்திலான போட்டியின் போதே இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது. இவரது 350 ஓட்டங்களில் 34 நான்கு ஓட்டங்களும் 27 ஆறு ஓட்டங்களும் உள்ளடங்கும்.

### சச்சினின் மகள் - நடிகை மகன் - வீரன்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்த்திர ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் - அஞ்சலி தம்பதிக்கு 2 குழந்தைகள். இதில் முதல் குழந்தை சாரா (18). இரண்டாவது மகன் அர்ஜுன். இவர் தந்தை வழியில் கிரிக்கெட் வீரராக உருவாக முயற்சி எடுத்து வருகிறார். தற்போது சாராவை நடிகையாக்க முயற்சிகள் நடந்து வருவதாகவும், ஷாஹித் கபூருடன் இணைந்து அவர் நடிக்கப் போவதாகவும் ஆன்லைன் செய்தி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

### twenty 20 நிறுத்தப்படவுள்ளது

CHAMPIONS LEAGUE TWENTY 20

சம்பியன்ஸ் லீக் டுவெண்டி 20 தொடரை தொடர்ந்து நடத்துவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையும் சம்பியன்ஸ் லீக் தொடரின் தொலைக்காட்சி உரிமையை கொண்டுள்ள ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிறுவனமும் இந்த தொடர் தொடர்ந்து நடைபெறுவதை விரும்பவில்லை. இந்த விடயம் தொடர்பாக ஐ.பி.எல் நிர்வாக கூட்டத்தில் பேசப்படவுள்ளது. சம்பியன் லீக் தொடரின் பிரதான இடத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கொண்டுள்ளது. மற்றைய இணை நாடுகளான அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, நாடுகளுடன் பேசிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

### பிறந்தநாள் வாழ்த்துக்கள் - சச்சின் -



இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் கிரிக்கெட் கடவுள் சச்சின் டெண்டுல்கர் நேற்று வெள்ளிக்கிழமை தனது 42வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். தனது வாழ்க்கையின் பாதிக் காலத்தை கிரிக்கெட்டிலேயே கழித்த பெருமை சச்சினுக்கு உண்டு. அத்துடன் இவரின் கிரிக்கெட் வாழ்க்கையில் செய்யாத சாதனைகள் இல்லை என்றே கூற வேண்டும்.

16 மாதங்களுக்கு முன்புதான் சச்சின் கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து விடைபெற்றார். எல்லா வீரர்களையும் விட சற்று உயர்வான நிலையில்தான் சச்சினின் சாதனைகள் இன்னும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் பதாதைகள் சிங்களத்தில்...!




கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்தப்பட்ட கலாச்சார விளையாட்டுப் போட்டிகளில் பதாதைகள் யாவும் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சே இவ் விழாவினை முன்னெடுத்து நடத்தியதாகவும் மாகாணக் கல்வி அமைச்சராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைச் சேர்ந்த திரு.தண்டாயுதபாணி செயற்படுகின்ற காலத்திலேயே இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது ஆழ்ந்த கவலையை உருவாக்குதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பதாதைகள் தனிச் சிங்களத்தில் இருப்பதைக் கண்ணுற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அவ்விழாவில் 17

## 26 மாதங்களின் பின்னர் நலன்புரிச்சங்கக் கூட்டம்

பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கக் கூட்டம் நேற்று 26 மாதங்களின் பின்னர் நடைபெற்றுள்ளது.

திருமதி.சலதேவி சசிதீபன் பிரதேசச் செயலாளராகப் பதவி வகித்த காலப்பகுதியிலேயே கடந்த 26 மாதங்களாக நலன் புரிச்சங்கக் கூட்டங்கள் நடைபெறாமலிருந்தன.

தற்போது புதிய பிரதேசச் செயலாளராக திரு.ஜே. எஸ். அருள்ராஜ் அவர்கள் பதவியேற்ற பின்னர் கூட்டப்பட்டுள்ள கூட்டத்தில் வாசிக்கப்பட்ட கடந்த 26மாதங்களுக்கான கணக்கறிக்கையில் 17

## 100நாட்களுக்குள் 17 தமிழர்கள் கைது




நல்லாட்சி நடைபெற்ற கடந்த நூறு நாட்களில் 17 தமிழர்கள் விமான நிலையத்தில் கைதாகியுள்ளனர் என மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்ரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை கொழும்பு

3ம் ஆண்டு நினைவு தினம்

அன்னை மடியில்

1984 . 04 . 24



மறைவு

2012 . 04 . 18

ஈஸ்வரதாசன் கேதீஸ்வரன்

## மேதினப் பேரணி

தொழிற்சங்கங்கள் பல இணைந்து மேதினப் பேரணியொன்றைத் திருகோணமலை நகரில் நடாத்தவுள்ளன.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் ஆசிரியர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம், கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கம், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் ஆகியன இணைந்த இந்தப் பேரணியை நடாத்தத் திட்டமிட்டுள்ளன.

மலைமுரசின் அழைப்பின் பேரில் இப்பேரணிக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒருமித்து இவ்வாறான பேரணியை நடாத்துவது மிகச் சிறப்பானது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்

திருகோணமலை சிவன் கோவிலடியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இப் பேரணி தபால் அலுவலகச் சந்தியின் ஊடாக கடற்கரையை 17

## குடும்பத்தினை தலைமை தாங்கும் பெண்களுக்கான சுயதொழில் முயற்சிகள்

### மாகாண முதல்வர், ஐ.நா. பிரதிநிதிகள் ஆய்வு



கிழக்கு மாகாணத்தில் வருமானமின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் கணவனை இழந்த பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஈடுபட்டுள்ளார்.

கிழக்கு மாகண முதலமைச்சர் காரியாலயத்திற்கு விஜயம் செய்த யுஎன்ஐசிஆர் அதிகாரி கொலாம் அப்பாஸ் மற்றும் யுஎன்டிபி அதிகாரி சுபினாய் நன்டி ஆகியோர் கிழக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்தவேளையில் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாண சபை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் முதலமைச்சின் செயலாளர், பிரத்தியேகச் செயலாளர். மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

(ரபாய்தீன்பாபு)

### மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்

பெயர்: மாணிக்கராசா இயேசுராஜன்
வயது: 34
உயரம்: 5' 3"
தொடர்பு எண்: 0262222632 - 0776779631

மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புவர். அனுப்புவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

முதந்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்
ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS
தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.

159A, கடல் முக வீதி, திருகோணமலை. 0777 555 7[illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org